# சித்திரக் கலை

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

## தரம் 11



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk

# சித்திரம்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

அழகியற் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீ லங்கா
**www.nie.lk**
**info@nie.lk**

**சித்திரக் கலை**
தரம் - 11
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2015

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

**அழகியற் கல்வித்துறை**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீ லங்கா
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***பதிப்பு :*** தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர்களிட மிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப்படுத்தி யுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
தேசிய கல்வி நிறுவகம்

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை பூகோள செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத் துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன் படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாட நிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத் தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## பாட அறிமுகம்

பாடசாலைக் கலைத்திட்டத்தில் அடங்கியுள்ள பாடங்களுள் அழகியற் பாடங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. மனிதனின் புலனுணுர்வுகளை முனைப்புறுத்தும் ஆற்றலை அழகியல் கொண்டிருப்பதே அதற்கான காரணமாகும். அழகியற் பாடங்களுள் ஒன்றான சித்திரக் கலைப் பாடம், மனிதனின் புலனுணர்வுத் திறன்களை மாத்திரமன்றி ஆக்கியல் திறன்களையும் விருத்தி செய்வதற்கு பெரிதும் துணையாகின்றது.

நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு நல்ல பிரசைகள் தேவை. அதற்குரிய அத்தியாவசியத் தேர்சசிகளை அடிப்படையாகக் கொண்டு சித்திரக் கலைப் பாடக் கல்வியினூடாக அத்தேர்ச்சிகளை விருத்தி செய்ய வழிகாட்டும் நோக்குடனேயே இக்கைந்நூல் தயாரிக்கப்பட் டுள்ளது.

மாணவரிடத்தே அத்தியாவசிய தேர்ச்சிகளை அடைவதற்காகப் பாடத்தோடிணைந்த ஏழு (7) தேர்ச்சிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தேர்ச்சிகள், அந்தந்த வயது மட்டத்துக்குப் பொருத்தமானவாறு தேர்ச்சி மட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அத்தேர்ச்சி மட்டங்களின் கீழ் 11 ஆந் தரத்துக்கென விதந்துரைக்கப்பட்டுள்ள விடய உள்ளடக்கத்தை வகுப்பறையில் நடைமுறைப்படுத்த வேண்டிய விதத்தை முன்மாதிரியாக எடுத்துக் காட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும்.

**பணிப்பாளர்**
அழகியற் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக் குழு

### ஆலோசனையும் அங்கீகாரமும்
- கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

### பாடஇணைப்பாக்கம்
- திரு.எம்.ஜீ.ஏ.கே.யூ.பண்டார, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு. ஞானசிரி பி.கமகே, சிரேஸ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

### பாட நிபுணர்கள்.
- கலாநிதி.தா.சனாதனன், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர்.சுசிரிபால மாலிம்பட, சிரேஷ்ட விரிவுரையாளர்,
  அழகியல் பல்கலைக்கழகம்
- ஸ்ரீமதி ஏக்கநாயக்க, விரிவுரையாளர் (வெளிவாரி), களனிப் பல்கலைக்கழகம்

### உள்வாரி வளப்பங்களிப்பு
- திரு.எம்.ஜீ.ஏ.கே.யூ.பண்டார, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு. ஞானசிரி கமகே, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு.ரவீந்திர தேனுவர, உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திருமதி. சமரி தபஸ்வரகே, உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திருமதி. எம்.பீ.பிரேமதிலக்க, உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

### வெளிவாரி வளப்பங்களிப்பு
- கலாநிதி.உபாலி ரஞ்சித் ரணவக்க, கோட்டக்கல்வி பணிப்பாளர்,
  கோட்டக்கல்வி அலுவலகம், புலத்சிங்ஹள
- திரு.எச்.என்.அனுர பிரியந்த ஆசிரிய ஆலோசகர்,
  வலயக் கல்வி அலுவலகம் ஸ்ரீஜயவர்தனபுரம்
- திருமதி.எஸ்.ஏ.ஹர்ஷா மனோஜனி, ஆசிரிய ஆலோசகர்
  வலயக் கல்வி அலுவலகம் ஹோமாகமை
- திருமதி.எச்.ஏ.சஞ்ஜீவி மஞ்ஜரி, ஆசிரிய ஆலோசகர்,
  வலயக் கல்வி அலுவலகம், கொழும்பு
- திரு. துஸ்ஜன், ஆசிரிய ஆலோசகர்,
  வலயக் கல்வி அலுவலகம். யாழ்ப்பாணம்
- திரு.எச்.எம்.எஸ்.பீ.எச்.பண்டார, சித்திரக் கலை ஆசிரியர்
  சாந்த சில்வெஸ்டர் வித்தியாலயம், கண்டி

### மொழிபெயர்ப்பு
- திரு.எம்.எச்.எம்.யாக்கூத், முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி
- திருமதி.யூ.விவேகானந்தன், ஆசிரியை, சிங்கள வித்தியாலயம், திக்கோயா
- திருமதி. எஸ். விமலசார, ஆசிரிய ஆலோசகர், கொழும்பு வலயக் கல்வி காரியாலயம்

### கணினி அச்சுக்கோர்ப்பு
- செல்வி. கமலவேணி கந்தையா, தேசிய கல்வி நிறுவகம்

### நானாவித உதவிகள்
- திருமதி.ஈ.எம்.விக்ரமநாயக்க, அழகியற் கல்வித்துறை
- திரு.பிரேமானந்த பெரேரா, அழகியற் கல்வித்துறை

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

இந்த ஆசிரியர் வழிகாட்டி 2016 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 11 ஆந் தர சித்திரக் கலைப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் வழிகாட்டி உங்களுக்கு வழங்கப்பட்டுகின்றது. இதனைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.

- பாடசாலையின் ஆண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய நேரத்தை முகாமை செய்து கொள்ளல்.
- பிரதானமான 7 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டள்ள உள்ளடக்கத்தின் 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயற்பாடொன்று தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்துக்கு அமைவாக, விதந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அல்லது வேறு தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய செயற்பாடுகளை திட்டமிட்டு அமைத்துக் கொள்ளல்.
- 6.0 ஆம் 7.0 ஆம் தேர்ச்சிகளுக்காக செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ள போதிலும், பொருத்தமான ஆக்கபூர்வமான முறையியல்களைப் பயன்படுத்தி குறித்த பாடவிடயங்களை அடையத்தக்கவாறு செயற்பாடுகளை மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.
- விதந்துரைக்கப்பட்டுள்ள மற்றும் தாமே தயாரித்த செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.

    I. அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்னிலையொன்றின் மூலம் களியூட்டத்தக்கவாறு பாடத்தை தொடங்குவதன் மூலம் மாணவரை பாடத்தின்பால் ஈர்த்தல், முன்னறிவை வினவியறிதல், ஊக்கமளித்தல் ஆகியன மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
    II. மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு, ஆக்கபூர்வமாக கற்றல் கற்பித்தல் முறைகளைக் கையாண்டு, பின்னூட்டலும் முன்னூட்டலும் வழங்கி செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
    III. முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீட்டாய்வு, பின்தொடர் வேலைகள், ஒப்படைத்தல் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.

- இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமேயாகும். பாடம் சார்ந்த நூல்கள் இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுவதன் மூலம் ஆசிரியரும், மாணவரும் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் செம்மையாக்கிக் கொள்ளலாம்.
- அறிமுகம் செய்யப்பட்டுள்ள 7 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளனமையால் 7 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

பின்வரும் அட்டவணைக்கேற்ப செயற்பாடுகளை மூன்று தவணைகளாகப் பிரிக்கவும்.

| 1 தவணை | | | | 2 தவணை | | | | 3 தவணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் | | | | செயற்பாட்டு இலக்கம் | | | | செயற்பாட்டு இலக்கம் | |
| 1.1.1 | 3.1.1 | 6.1.1 | 7.1.1 | 1.13 | 2.2.4 | 4.2.2 | 7.2.2 | 1.1.5 | 6.1.6 |
| 1.1.2 | 3.1.2 | 6.1.2 | 7.1.2 | 1.1.4 | 3.2.1 | 5.2.1 | 7.2.3 | 2.2.5 | 6.1.7 |
| 1.2.1 | 4.1.1 | 6.1.3 | 7.1.3 | 1.3.1 | 3.2.2 | 6.1.4 | 7.2.4 | 2.2.6 | 7.4.1 |
| 2.1.1 | 5.1.1 | 6.2.1 | 7.2.1 | 2.2.1 | 3.2.3 | 6.1.5 | 7.3.1 | 3.3.2 | 7.4.2 |
| 2.1.2 | | 6.3.1 | | 2.2.2 | 3.3.1 | 6.2.2 | | 3.3.3 | |
| | | | | 2.2.3 | 4.2.1 | 6.3.2 | | 4.2.3 | |

# உள்ளடக்கம்

-


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| பாட அறிமுகம் | v |
| வளவாளர்கள் | vi |
| ஆசிரிய வழிகாட்டியைப் பயன்படுத்தவதற்கான வழிகாட்டல்கள் | vii |
| பாடத்திட்டம் | ix-xxiii |
| கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | 1-151 |

# சித்திரக் கலை

## பாடத்திட்டம்

## அறிமுகம்

பாடசாலை முறைமையில் நடைமுறைப்படுத்தப்படும் ஒட்டுமொத்தக் கலைத்திட்டத்தில் "சித்திரக் கலை" பாடம் சிறப்பான ஒன்றாகும். படைப்பாக்கமும், இரசனையும் முதன்மையிடம் பெறும் சித்திரக் கலைப்பாடத்தினூடாக ஆற்றப்படும் சமூகப் பணி மிக முக்கியமானதாகும். சித்திரக் கலையினூடாக தனியாளிடத்தே சமனிலையான ஆளுமை விருத்தியடையும்.

சித்திரக் கலைப் பாடத்திட்டத்தில் பாடம் சார்ந்த ஏழு தேர்ச்சிகள் மூலம் பிள்ளையிடத்தே அறிவு, திறன்கள், மனப்பாங்குகளையும், நற்பழக்கங்களையும் விருத்தி செய்வது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. பாடம் சார்ந்த ஐந்து தேர்ச்சிகளும், கலை வரலாறு மற்றும் இரசனைக்காக இரண்டு தேர்ச்சிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அந்தந்தத் தரத்தில் வயது மட்டத்துக்குப் பொருத்தமானவாறு தேர்ச்சி மட்டங்களுக்கு அமைவாக விடய உள்ளடக்கம் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

பாடத்திட்ட மறுசீரமைப்பின் போது பின்வரும் விடயங்களிற் கவனஞ் செலுத்தப்பட்டது.

- சர்வதேச சித்திரக் கலையின் புதிய போக்குகள்.
- இத்துறையில் வெளியிடப்பட்டுள்ள புதிய கருத்துக்கள்.
- பாடசாலையில் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயன்முறை தொடர்பாக நடத்தப்பட்ட அவதானிப்புக்களும் ஆய்வுகளும்.

முதலாவது தேர்ச்சியின் கீழ் அடங்கியுள்ள மனித உருவங்களும் விலங்கு உருவங்களும் வரைவதற்குரிய அடிப்படைப் பயிற்சிக்காகப் புதிய தேர்ச்சி மட்டம் உருவாக்கப்பட்டது. இரண்டாவது தேர்ச்சியின் கீழ் அடங்கியுள்ள இயற்கைச் சூழலிலும் மனிதனாலாக்கப்பட்ட சூழலிலும் உள்ள அடிப்படையான தளவுருவங்கள், வடிவங்களுக்கான தேர்ச்சி மட்டம் உருவாக்கப்பட்டது. புதிய தொழில்நுட்ப மற்றும் வேலை உலகுக்குத் தேவையான அறிவு திறன்களை அடையத்தக்க வகையில் மூன்றாம் நான்காம் தேர்ச்சிகளின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன. மாதிரியுருக்கள் ஆக்குவதன் மூலம் முப்பரிமாண இயல்பு பற்றிய எண்ணக்கருவை மேலும் தெளிவாக முன்வைப்பதற்காக ஐந்தாவது தேர்ச்சியின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன. கலை வரலாறு மற்றும் இரசனை தொடர்பாக அறிவை வழங்குவதற்காகவும் பல்வேறு படைப்புக்களைக் கற்றல் மூலம் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பமளிப்பதற்காகவும் ஆறாம், ஏழாம் தேர்ச்சிகளின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப்பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

# சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள்.

1. சுற்றாடல் சார்ந்த நயப்பாற்றலை வளர்த்தல்.
2. ஆக்கச் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல்.
3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.
4. எமது நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பண்பாட்டுப் பெறுமானங்களின் தனித்துவத்தை இனங்காணுதலும் மதித்தலும்
5. திறனாய்வு ஆற்றலை வளர்த்தல்.
6. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல்.

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 01 சுற்றாடல் சார்ந்த கருப்பொருள்களின் கீழ்ச் சித்திரங்கள் வரைவார் | 1.1 மனிதர், விலங்குகளின் உருவங்களை விரிவாகக் கற்று சித்திரம் வரைவார். | • சூழலுடன் இணைந்த மனிதர், விலங்குகளின் செயற்பாடுகள்.<br>• பல்வேறுபட்ட சூழல் தன்மைகள்.<br>• சித்திரங்களை வரைய அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்துதல்.<br>  • அளவுத் திட்டமும், கனவளவும்<br>  • தூரநோக்கு.<br>  • முப்பரிமாண இயல்புகள்<br>  • சமநிலை.<br>  • உணர்வு வெளிப்பாடு.<br>  • ஆக்கபூர்வமான முழுநிறைவு<br>• வர்ணப் பயன்பாட்டின் நுட்பமுறைகள்<br>• பல்வேறு ஆக்கப்பாணிகள். | • சித்திரம் வரைவதன் அடிப்படையான கோட்பாடுகளைப் பயன்படுத்தி சுற்றாடல் சார்ந்த மனித, விலங்குச் செயற்பாடுகள் சார்ந்த கருப்பொருள்களை சித்தரிப்பார்.<br>• வர்ணப் பயன்பாட்டு உத்திகளைக் கையாண்டு பார்த்து சித்திரம் வரைவார்.<br>• பாரம்பரிய பாணி சார்ந்த சித்திரிப்பு முறைகளைப் பயன்படுத்தி, புதுமையான, ஆக்கபூர்வமான சித்திரங்களை வரைவார். | 16 |
| | 1.2 அனுராதபுரம், பொலநறுவைக் காலச் சுவர் ஓவியங்களிற் காணப்படும் கலைப் பண்புகளைக் கற்று சித்திரம் வரைவார். | • பாரம்பரியமான பாணி சார்ந்த இயல்புகள்<br>• இரேகைப் பயன்பாடும்.<br>• தள உருக்கள்.<br>• வர்ணப் பயன்பாடும் நுட்பமுறைகளும்<br>• சேர்மான இயல்புகள் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 1.3 கண்டிக் கால தாழ் பிரதேச விகாரை சுவர் ஓவியங்களின் பாரம்பரியமான கலைப் பண்புகள் சார்ந்து சித்திரம் வரைவார். | • பாரம்பரியமான சித்திரம் வரையும் கோட்பாடுகளைப் பயன்படுத்துதல்.<br>• அளவுத் திட்டமும் கனவளவும்<br>• இரு பரிமாண இயல்புகள்<br>• சமனிலை<br>• வெளிப்பாட்டுச் ஆற்றல்<br>• ஆக்கபூர்வ முழுநிறைவு<br>• இரேகைகளினதும் உருவங்களினதும் பயன்பாடு<br>• நிறப் பயன்பாடும் நுட்பமுறைகளும்<br>• நீர்வர்ணம்<br>• போஸ்டர் வர்ணம்<br>• பஸ்ரல்<br>• தளப்பயன்பாடு | | |
| 2.0 சுற்றாடலிற் காணப்படும் பொருள்களை ஒருங்கிணைத்துச் சித்திரங்களாக வரைவார். | 2.1 பல்வேறு இயற்கையான செயற்கையான பொருள் களை வெவ்வேறாக ஆராய்ந்தறிந்து படங்களை வரைவார். | • கோடுகள் சார்ந்த வெவ்வேறு இயற்கை செயற்கைப் பொருட்கைளக் கற்றல்<br>- கோட்டுப் பல்வகைமை<br>- ஒளியும் இருளும்<br>- முப்பரிமாண இயல்புகள் | • இயற்கையான மற்றும் மனிதனால் ஆக்கப்பட்ட பொருள்களின் பல்வகைமையையும் அவற்றின் இயல்புகளையும் கவனமாக அவதானித்துப் பருமட்டான படங்களை வரைவார். | 16 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.2 இயற்கை, செயற்கைப் பொருள்களை ஒருங்கிணைத்து சித்திரமாக வரைவார். | • சித்திரம் வரைவதற்காக அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்துதல்.<br>• அளவுத்திட்டமும் கனவளவும்<br>• தூர நோக்கு.<br>• முப்பரிமாண இயல்பு<br>• ஒளியும் நிழலும்<br>• சமநிலை.<br>• தளப்பயன்பாடு<br>• மேற்பரப்பு இயல்பு (இழையமைப்பு)<br>• நிறப்பயன்பாடும் நுட்பமுறைகளும்<br>  • நீர்வர்ணம்.<br>  • பஸ்ரல் வர்ணம்.<br>  • கலப்பு ஊடகம் | • தளத்திற்குப் பொருத்தமானவாறு அளவுத் திட்ட மற்றும் தூரநோக்கு இயல்புகளைச் சரியாகப் பயன்படுத்தி, பொருள் கூட்டங்களை வரைவார்.<br>• வெவ்வேறு வர்ண ஊடகங்களுக்குப் பொருத்தமான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி பொருள்களின் முப்பரிமாண இயல்புகளும் தன்மைகளும் வெளிப்படுமாறு வர்ணந்தீட்டுவார். | |
| 3.0 பயன்பாட்டுத் தேவைகளுக்காக படைப்பாக்கம் புரிவார். | 3.1 புதிய திட்ட எண்ணக்கருக்களையும் மற்றும் வெவ்வேறு ஊடகங்களையும் பயன்படுத்தி நிர்மாணிக்கக்கூடிய வீட்டு அலங்காரப் பொருள்களுக்காகத் திட்டங்களையும் அலங்கரிப்புக்களையும் நிர்மாணிப்பார். | • சூழலைக் கற்றல்.<br>• பயன்பாட்டுத் தேவை.<br>• அலங்காரத்தின் கோட்பாடுகள்<br>• திட்டமிடல் எண்ணக்கரு<br>• திட்டமிடல்.<br>  • அலங்காரத்தின் பொருட்டு பயன்படுத்தும் பாத்திரங்கள்.<br>  • மரச் செதுக்கலாலான சுவர் அலங்காரச் சித்திரம்<br>    • சமநிலை<br>    • லயம்<br>    • கிரமம் | • சுற்றாடலை கற்றாய்வார்.<br>• பிரயோகத் தேவைகளை விளங்கி, திட்டங்களையும், சோடனைகளையும் படைப்பார்.<br>• அடக்கத்துடன் செயற்படுவார். | 14 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.2 மரபு ரீதியான அலங்கரிப்பு அலகுகளையும், அவற்றின் வர்ணங்களையும் பயன்படுத்தி முழுத்தள அலங்கரிப்புக்களை நிர்மாணிப்பார்.<br><br>3.3 ஆக்கச் சிறப்புடைய அலங்கரிப்பு அலகுகளைப் பயன்படுத்தி, பாவனைப் பொருள்களையும் அலங்கரிப்புகளையும் நிர்மாணிப்பார். | • முழுத்தள அலங்கரிப்புக்கள்<br>• குஷன் உறை.<br>• மேசைத் துணி<br>• பித்தளைத் தட்டம்<br><br>• துணி அலங்கரிப்பு<br>• கதவுத்திரை.<br>• கட்டில் விரிப்பு<br>• சேலை முந்தானை<br>• பாவனைப் பொருட்கள் நிர்மாணித்தல்.<br>• மின்சார மேசை விளக்கு | • தேவைகளை இனங்கண்டு ஒழுங்குமுறைப்படி வேலையில் ஈடுபடுவார். | |
| 4.0 உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக கிறபிக் ஆக்கங்கள் படைப்பார். | 4.1 விரிவான கருப்பொருளின் கீழ், சுவரொட்டிச் சித்திரங்களை நிர்மாணிப்பார். | • தேவைகள்<br>• திட்டம்.<br>• வெளிப்படுத்தும் உட்கருத்து<br>• குறியீட்டுச் சித்திரங்கள்<br>• எழுத்துக்கள் | • வெளிப்படுத்தும் உட்கருத்து, குறியீட்டு ரீதியான வர்ணங்கள் சித்திரங்கள், எழுத்துக்களைப் பயன்படுத்தி, விரிவான தலைப்புக்களின் கீழ், சுவரொட்டிச் சித்திரங்கள் வரைவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 4.2 பல்வேறு உற்பத்திகளை விளம்பரப்படுத்துவதற்கான கிரபிக் ஆக்கங்களை படைப்பார். | • அச்சிடுவதற்குப் பொருத்தப்பாடு.<br>• கிரபிக்கு ஆக்கங்கள்<br>  • பெயர்ச்சுட்டிகள் (லேபல்).<br>  • வாழ்த்து இதழ்கள்.<br>  • அறிவித்தல்கள் | • அச்சிடுவதற்குப் பொருந்தும் விதத்தில் நிர்மணிப்பில் ஈடுபடுவார். | |
| 5.0 வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார். | 5.1 மரபு ரீதியான அலங்கரிப்புகளை அடிப்படையாகப் பயன்படுத்திப் புடைப்புச் செதுக்கல் ஆக்கங்களைப் படைப்பார்.<br><br>5.2 அப்புதல் நுட்பமுறையைப் பயன்படுத்தி, மனித உருக்களை நிர்மாணிப்பார். | • மரபு ரீதியான அலங்கரிப்பு அடிப்படைகள்<br>• பல்வேறு ஊடகங்கள்.<br>• பொருத்தப்பாடு.<br>• சேர்மானம்<br>• நுட்பமுறைகள்<br>• ஆக்கபூர்வத் தன்மை<br><br>• வெவ்வேறு ஊடகங்கள்<br>• பொருத்தப்பாடு<br>• திரட்சி<br>• நுட்பமுறை.<br>• ஆக்கபூர்வத் தன்மை. | • பாரம்பரியமான அலங்கரிப்பு அடிப்படைகளை இனங்காணல்.<br>• பாரம்பரிய அலங்கரிப்பு அடிப்படைகளைப் பயன்படுத்தி, புடைப்புச் செதுக்கல்களை ஆக்குவார்.<br><br>• அப்பும், நுட்பமுறையைப் பயன்படுத்தி மனிதத் தலையொன்றினை உருவமைப்பார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 6.0 சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புல கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளை சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார். | 6.1 தெரிவு செய்த சுதேசியக் கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார். | • கருப்பொருள், கலைத்தாக்கம், (பாணி) ஊடகமும் நுட்பமுறைகளும், உணர்ச்சி வெளிப்பாடு, சித்திரிப்பு முறைகள், கலைப்பண்புகள் ஆகியவற்றைக் கற்றல்.<br>• முதலியார் ஏ.சீ.ஜி.எஸ்.அமரசேகர<br>  • பேய் ஓட்டுபவனின் மகள்.<br>  • தச்சனின் வீடு.<br>• ஸ்ரான்லி அபயசிங்க.<br>  • கும்பல்ஹல் (குயவனின் வேலைத்தளம்)<br>  • (ஊர்வலம்) பெரகரா<br>• ஜீ.எஸ்.பெனாந்து<br>  • செங்கற் போறணை.<br>  • கடலதெனிய<br>• க.கனகசபாபதி<br>  • படிக்கிற சிறுவன்<br>  • கோழிச்சண்டை<br>• அ.மாற்கு<br>  • மூர்த்தி<br>  • சகுந்தலை<br>• திஸ்ஸ ரணசிங்க.<br>  • கடினச் செயல் (துஷ்கரக் கிரியாவ) சிற்பம்<br>  • கொழும்பு றோயல் கல்லூரி - சிறுபுடைப்புச் செதுக்கல். (சுடுமண் ஊடகம்)(terra cotta)<br>• எச்.ஏ.கருணாரத்ன<br>  • சந்தபாயா (சந்திரோதயம்)<br>  • புதிய படைப்பு (பெயர் இடப்படாதது) | • தெரிவு செய்த கலைஞர்களின் படைப்புக்களை வெவ்வேறாக இனங்காணும் திறனைப் பெறுவார்.<br>• அப்படைப்புக்களின் சிறப்பான கலைப்பண்புகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.<br>• கலைப்படைப்புக்களில் காணப்படும் புறச் செல்வாக்குகளை நுணுகி ஆராய்வார்.<br>• சுதேச கலைப்படைப்புக் களை நயக்கும் திறனைப் பெறுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 6.2 சுதேசிய அச்சு ஊடகங்கள் சார்ந்த கலை அம்சங்களை நயப்பார். | • கருப்பொருள்கள், பாணி, உணர்ச்சி வெளிப்பாடு மற்றும் கலைப்பண்புகளைக் கற்றல்.<br>• செய்தித்தாள் கருத்துப்பட (காட்டூன்) கலைஞர்கள்<br>  • ஒப்றி கொலட்<br>  • யூனூஸ்<br>  • டப்ளியூ விஜயசோம<br>  • கமிலஸ் பெரேரா<br>  • சிவஞானசுந்தரம்<br>• எடுத்துக்காட்டுச் சித்திரங்கள்<br>  • சுமன திசாநாயக்க<br>  • வி.சிவசுப்பிரமணியம்<br>• செய்தித்தாள்களின் சித்திரக் கதைக் கலை | • அச்சு ஊடகக் கலைஞர்களின் கலைப்படைப்புக்களின் அடிப்படை இயல்புகளை இனங்கண்டு பகுத்தாய்வார்.<br>• சுய படைப்பாக்கத்துக்காக அவற்றின் மூலம் செல்வாக்குப் பெறுவார்.<br>• சுதேச அச்சு ஊடகங்கள் சார்ந்த கலைப் பண்புகளை நுணுகியாய்வார்.<br>• தெரிவு செய்த வெளிநாட்டுக் கலைஞர்களின் ஆக்கங்களை இனங்கண்டு பெயரிடுவார். | |
| | 6.3 தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களை மதிப்பிடுவார். | • கருப்பொருள், கலைத்தாக்கம், (பாணி) ஊடகமும் நுட்பமுறைகளும், உணர்ச்சி வெளிப்பாடு, சித்தரிப்பு முறை கலைப்பண்புகள் ஆகியவற்றைக் கற்றல்.<br>• பப்லோ பிக்காசோ.<br>  • குவர்ணிகா.<br>  • அவிக்னோன் யுவதிகள்.<br>• கென்றி மூவர்.<br>  • அரச குடும்பம்.<br>  • சாய்ந்து இருக்கும் பெண். | • அப்படைப்புக்களில் காணப்படும் சிறப்பான வெவ்வேறு கலைப் பண்புகளையும் செல்வாக்கு-களையும் இனங்கண்டு நயக்கும் திறனைப் பெறுவார்.<br>• சுதேச, வெளிநாட்டுக் கலைப் படைப்புக்களை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 7.0 வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற் காகப் பயன் படுத்துவார். | 7.1 அனுராதபுர காலச் சித்திரங்கள், சிற்பங்கள், செதுக்கல் வேலைப் பாடுகள், கட்டடக்கலைப் படைப்புக்களைக் கற்பார். | • வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், பாணி ஊடகமும் நுட்பமுறைகள்.<br>• சிகிரியா ஓவியங்கள்<br>• சமாதி புத்தர் சிலை.<br>• தொழுவில புத்தர் சிலை.<br>• அவுக்கண புத்தர் சிலை.<br>• பங்குளிய புத்தர் சிலை.<br>• இசுருமுனிய செதுக்கல்கள். | • அனுராதபுர கால கலைப்படைப்புக்களை வெவ்வேறாக விபரிப்பார். | 12 |
| | 7.2 பொலநறுவைக் காலத்துச் சித்திரங்கள் சிற்பங்கள் செதுக்கு வேலைப்பாடுகள், கட்டிட நிர்மாணிப்புக்களைக் கற்பார். | • வரலாற்றுப் பின்னணி, கருப் பொருள், பாணி ஊடகமும், நுட்பமுறைகள்<br>• வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், பாணி ஊடகம், நுட்பமுறைகள்<br>• திவங்க சிலை மனைச் சித்திரங்கள்.<br>• கல் விகாரை புத்தர் சிலைகள்.<br>• பொத்குள் விகாரைச் சிலை.<br>• நடராஜர் சிலை<br>• பார்வதி சிலை<br>• விநாயகர் சிலை<br>• காரைக்கால் அம்மையார்<br>• சுந்தரமூர்த்தி நாயனார் சிலை<br>• வட்டதாகே புத்தர் சிலை.<br>• நிசங்கலதா மண்டபம்.<br>• சிவ ஆலயம் இல :1 இல : 2 | • பொலன்னறுவைக்கால கலைப் படைப்புக்களின் சிறப்பியல்புகைள இனங்கண்டு குறிப்பிடுவார்.<br>• பொலன்னறுவை காலத்தில் எமது நாட்டுக் கலைப் படைப்புக்கள் மீது ஏற்பட்ட தாக்கங்கள் மற்றும் செல்வாக்குகளை நுணுகி நோக்கும் திறனைப் பெறுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 7.3 கண்டி காலத்து தாழ் பிரதேச பாரம்பரிய சித்திரங்களைக் கற்பார். | • வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், பாணி ஊடகம், நுட்பமுறைகள், கலைஞர்கள்<br>• கத்தழுவ விகாரைச் சிந்திரங்கள்<br>• மகாதன அரசன் கதை இசையும் களிபுறுதலும்<br>• மகாசுத்தசோம ஜாதகம்<br>- அரசவை மாதர்<br>• நிர்மாணக் கலைஞர்கள்.<br>• கரகம்பிட்டி சித்திரம்<br>- மாரன் தோல்லி (ஊக்குவித்தல்)<br>- சித்தார்த்தரின் பிறப்பு | • கண்டிய, தாழ்நாட்டு பாரம்பரியச் சித்திரங்களை ஒப்பீட்டு ரீதியில் விவரிப்பார். | |
| | 7.4 இந்திய வரலாற்றுக் காலங்களில் சித்திர, சிற்ப செதுக்கு வேலை, கட்டட நிர்மாணங்களைக் கற்பார். | • இந்து நதிக்கரை மௌரிய, சாதவாகன காலத்தைச் சேர்ந்த படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், பாணி, நுட்ப முறைகள், உணர்ச்சி வெளிப்பாடு, சித்திரப்பு முறை, கலைப்பண்புகள் ஆகியவற்றைக் கற்றல்.<br>- சாஞ்சி தூபி<br>- சாஞ்சி தோரண செதுக்கு வேலைப்பாடுகள்<br>- ஜத்தன்த ஜாதகக் கதை<br>- புத்தபெருமான் சங்க ஸ்ஸபுரத்திற்கு வருகை தரல். | • இந்திய வரலாற்றுக் கலைப்படைப்புக்களைப் பகுத்தாய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • குப்தர் காலத்தைச் சேர்ந்த படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், பாணி, ஊடகமும் நுட்பமுறைகளும், உணர்ச்சி, வெளிப்பாடு, சித்தரிப்பு முறைகள், கலைப் பண்புகள், ஆகியவற்றை கற்றல்<br>- சாரநாத் புத்தர் சிலை<br>- அஜந்தா ஓவியங்கள்<br>- பத்மபாணி போதி சத்துவர் உருவம்<br>- புத்த பெருமான் கிம்புள்வத் புரத்திற்கு வருகை தரல். | | |

**தேர்ச்சி 1.0 : சூழல் சார்ந்த கருப்பொருள்களின் கீழ் சித்திரங்களை வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.1 : மனிதர், விலங்குகளின் உருவங்களை விரிவாகக் கற்று, சித்திரங்களை வரைவார்.**

**செயற்பாடு 1.1.1 : "வணக்கத்தலமொன்று இருள் சூழ்ந்த இரவில் காட்சி யளிக்கும் விதம்."**

**பாடவேளை** : 2

**கற்றற் பேறுகள்:**

- மதம் தொடர்புடைய பல்வேறு சந்தர்ப்பங்களில் காணக்கூடிய சிறப்பியல்புகளை விபரித்துக் கூறுவார்.
- இருள் சூழ்ந்த இரவில் வணக்கத்தலம் ஒன்றின் நிகழ்வுகளை விளக்குவார்.
- சித்திர ஒருங்கிணைப்பின் கோட்பாடுகளை உபயோகித்து தலைப்புக்குப் பொருந்தும் விதத்தில் சித்திரத்தை வரைவார்
- வெவ்வேறு சமய கலாசாரங்களை உள்ளடக்கி வரையப்பட்ட சித்திரங்களை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- வெவ்வேறு சமயச் சடங்குகளைச் சித்தரிக்கும் மாதிரிச் சித்திரங்கள்.
- பாடவிருத்திக்கு உதவும் கட்புல, செவிப்புலக் கருவிகள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1.1.1.1**

- உங்கள் பாடசாலைச் சூழலுக்குப் பொருத்தமான சமய கலாசாரங்களைக் கொண்ட விரும்பிய நிகழ்வொன்றை ஆதாரமாகக் கொண்டு பாடத்தில் பிரவேசிக்க.
- பல சமய நிகழ்வுகளுடன் தொடர்புபடும் மாதிரி சித்திரங்களைக் காண்பித்து, அவற்றின் சிறப்பியல்புகள், சமய சடங்குகள், விழாக்கள் என்பவற்றை முன்வைத்துக் கலந்துரையாடுக.
- அவ்வாறான நிகழ்வுகளில் காணப்படத்தக்க சிறப்பியல்புகள் குறித்துக் கவனஞ் செலுத்தி, கலந்துரையாடுக.
  - மனித, விலங்கு மெய்நிலைகள், செயற்பாடுகள், உணர்வு வெளிப்பாடுகள்
  - பயன்படுத்தப்பட்டுள்ள ஆடையணிகள்
  - நிகழ்வுகள் தொடர்பான சோடனை அம்சங்கள்

(10 நிமிடங்கள்)

**படிமுறை 1.1.1.2**

- எதேச்சையாக தெரிவு செய்த ஒரு தலைப்பை சித்திரமாக வரைய மாணவர்களை அறிவுறுத்துக.
- சித்திர நிர்மாணிப்புக்குத் தேவையான உபகரணங்களை வழங்குக.
- மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும்போது தேவையான வழிகாட்டல்களை வழங்குக.
- பூர்த்தி செய்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்த ஒழுங்குசெய்க.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 1.1.1.3**

- சுய மதிப்பீட்டுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- ஏனைய மாணவர்களின் ஆக்கங்களை மதிப்பிட வாய்ப்பளிக்க.
- எல்லா ஆக்கங்களையும் மதிப்பீடு செய்க.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- பல்வேறு சமய ஸ்தலங்களில் நடைபெறும் சமய நிகழ்வுகளின் சிறப்பியல்புகளை விவரித்தல்.
- கோட்பாடுகள் வெளிப்படும் விதத்தில் சித்திரத்தை நிர்மாணித்தல்.
- வெவ்வேறு சமயப் பண்பாடுகளின்படி வரையப்பட்டுள்ள சித்திரங்களை நயந்து கலந்துரையாடல்.
- ஏனையவர்களது நிர்மாணிப்புக்களை இரசித்து நயப்பார்.

**கீழே உள்ள தலைப்புகளின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிடுக.**

1.1.2 விளையாட்டுப் போட்டி ஒன்றின் உணர்வுபூர்வமான சந்தர்ப்பம் ஒன்று.

(2 பாடவேளைகள்)

1.1.3 வரட்சி ஏற்பட்டபோது (2 பாடவேளைகள்)

1.1.4 கற்பனையான ஒரு தலைப்பை மையமாகக் கொண்ட சித்திரம் (2 பாடவேளைகள்)

1.1.5 திறந்த வெளிச் சந்தை (2 பாடவேளைகள்)

**தேர்ச்சி 1.0 : சூழல் சார்ந்த கருப்பொருள்களின் கீழ் சித்திரங்களை வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.2 : அனுராதபுரம், பொலநறுவைக் கால சுவர் ஓவியங்களிற் காணப்படும் கலைப் பண்புகளைக் கற்று சித்திரம் வரைவார்.**

**செயற்பாடு 1.2.1 : "வரலாற்றுச் செய்தியொன்று."**

**பாடவேளை** : 3

**கற்றற் பேறுகள்:**

- பல்வேறுபட்ட வரலாற்று நிகழ்வுகளைக் குறிப்பிடுவார்.
- வரலாற்று நிகழ்வொன்றைச் சித்தரிக்கும்போது காணக்கூடிய மனித விலங்கு மெய் நிலைகள், செயற்பாடுகள் பற்றி விபரித்துக் கூறுவார்.
- அனுராதபுர, பொலநறுவைக் கால சுவரோவியங்களின் பாணியைக் கொண்டு வரலாற்று நிகழ்வொன்றை சித்திரமாக வரைவார்.
- பண்டைய சுவரோவியங்கள் தொடர்பாகப் பெற்ற அறிவை புதிய நிர்மாணத்தைச் செய்ய உபயோகிப்பார்.
- ஏனையவர்களின் நிர்மாணங்களை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 1.2.1.1 க்குரிய ஆய்வு, செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவப் பிரதிகள்.
- அனுராதபுர பொலநறுவைக் கால சுவரோவியங்களைச் சித்தரிக்கும் மாதிரிப்படங்கள்.
- பாடவிருத்திக்குத் தேவையான பாரம்பரியப் பாணியிலான எடுத்துக்காட்டுச் சித்திரங்கள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1.2.1.1**

- வரலாற்று நிகழ்வொன்றைப் பற்றிய கதைகளை மாணவர்களிடம் வினவிக் கலந்துரையாடுக.
- கலந்துரையாடும்போது கீழே உள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்துக.
  - மனித விலங்கு மெய்நிலைகள், செயற்பாடுகள், உணர்வு வெளிப்பாடு
  - ஆடை அணிகள்
  - நிகழ்வுக்குரிய பண்பாட்டுச் சூழல்
- அனுராதபுர, பொலநறுவைக் கால சுவரோவியங்களை மாணவர்களுக்குக் காண்பித்து அதில் காணக்கூடிய சிறப்பியல்புகளைக் கலந்துரையாடுக.
- அப்பண்புகளை உபயோகித்து வரலாற்றுக் கதையொன்றைச் சித்தரிக்கும் விதத்தைக் கலந்துரையாடுக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 1.2.1.2**

- இணைப்பு 1.2.1.1 க்குரிய ஆய்வு, செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- செயற்பாட்டுப் படிவத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய அனுராதபுர பொலநறுவைக் கால ஓவியங்களின் பாணியில் வரலாற்று நிகழ்வொன்றைச் சித்திரமாக வரையச் செய்க.
- செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கையில் தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல் களையும் வழங்குக.
- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுமாறு அறிவுறுத்துக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 1.2.1.3**

- மாணவர்கள் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சுய மதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்க.
- ஏனையவர்களது ஆக்கங்களை மதிப்பிட்டு ஆக்கபூர்வமாகக் கருத்துத் தெரிவிக்க வாய்ப்பளிக்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- தமது உள்ளத்தைக் கவர்ந்த வரலாற்று நிகழ்வொன்றின் சிறப்புக்களைக் கூறுதல்.
- வரலாற்று நிகழ்வுகளைச் சித்திரிக்கும் போது மனித, விலங்கு மெய்ந்நிலைகளை விவரித்தல்.

  அனுராதபுர, பொலனறுவைச் சுவரோவியங்களின் பாணியைத் தழுவிச் சித்திரம் வரைதல்.
- ஏனையவர்களின் ஆக்கங்களை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 1.2.1.1:**

**ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்**

- காண்பிக்கப்பட்ட அனுராதபுர, பொலநறுவைக் கால மரபு ரீதியான சித்திரங்களை நன்றாக நோக்குக.
- அவ்வோவியங்களில் காணக்கூடிய இரேகைகள், உருக்கள் பயன்படுத்தியிருக்கும் விதம், உணர்வு வெளிப்பாடு, இணை வர்ணங்களின் பயன்பாடு என்பவை பற்றி ஆராய்ந்து அறிக.
- அவ்வோவியங்களின் பாணியைக் கொண்டு உள்ளங் கவர்ந்த வரலாற்று நிகழ்வொன்றை சித்திரமாக வரைக.
- அனுராதபுர. பொலநறுவைக் கால சுவரோவியங்களின் நுட்ப முறைகள், வர்ண உபயோகம் பற்றிய அறிவை உங்கள் நிர்மாணிப்பில் உபயோகிக்குக.
- மாதிரி சித்திரங்களுக்கு ஒத்ததாக உங்கள் சித்திரத்தையும் வர்ணம் தீட்டுக.
- ஆசிரியரின் உதவியைத் தேவையான போது பெற்றுக் கொள்க.
- ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**தேர்ச்சி 1.0 : சூழல் சார்ந்த கருப்பொருள்களின் கீழ் சித்திரங்களை வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 1.3 : கண்டிக் கால தாழ் பிரதேச விகாரைச் சுவரோவியங்களின் பாரம்பரியமான கலைப்பண்புகள் சார்ந்த சித்திரம் வரைவார்.**

**செயற்பாடு 1.3.1 : "முகூர்த்த வேளையில் தாலி கட்டுதல்."**

**பாடவேளை** : 3

**கற்றற் பேறுகள்:**

- பல்வேறுபட்ட கலாசாரங்களுக்குரிய திருமண வைபவங்களின்போது செய்யப்படும் சடங்கு முறைகள், அணியும் ஆடை அணிகள், சூழல் தன்மை பற்றி விளக்குவார்.
- கண்டிக் காலத்து தாழ்நாட்டுப் பாரம்பரிய சுவர் ஓவியங்களின் சித்திரக் கோட்பாடுகளை விளக்குவார்.
- விரும்பிய திருமண வைபவம் ஒன்றில் உள்ளத்தைக் கவர்ந்த நிகழ்வொன்றை பாரம்பரிய சித்திர நுட்ப முறைகளை உபயோகித்துச் சித்திரமாக வரைவார்.
- ஆர்வத்துடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.
- நிர்மாணிப்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 1.3.1.1 க்குரிய ஆய்வு, செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவப் பிரதிகள்.
- கண்டிக் காலத்து தாழ்நாட்டுப் பாரம்பரியத்துக்குரிய விகாரைச் சுவரோவிய மாதிரிகள்.
- பாணி சார்ந்த தன்மையுடன் வரையப்பட்ட மனித, விலங்கு மெய்நிலைகளைச் சித்தரிக்கும் சித்திர மாதிரிகள்.
- பொருத்தமான பாணியில் வரையப்பட்ட மாதிரிச் சித்திரங்கள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 1.3.1.1**

- தாழ்நாட்டு விகாரைச் சுவரோவியங்களில் காணக்கூடிய விழாக்களைச் சித்தரிக்கும் சில சித்திரங்களைக் காண்பித்து, அவற்றுக்கமைய கீழே உள்ள விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுக.
  - மனித உருக்களை வரைதல், உருவங்களை ஒருங்கிணைத்தல்.
  - சோடனை வடிவமைப்பு முறைகள்
  - பின்னணி அமைப்பு
  - வர்ண உபயோகம்

(15 நிமிடங்கள்)

**படிமுறை 1.3.1.2**

- இணைப்பு 1.3.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- தங்கள் கலாசாரத்துக்குரிய திருமண வைபவம் ஒன்றின் மனதைத் தொட்ட காட்சியை சித்திரமாக வரைய வழிநடத்துக.
- அறிவுறுத்தல் படிவத்துக்கமைய மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- மாணவர்க்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி வழிகாட்டுக.
- நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்த தயாராக்குக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 1.3.1.3**

- மாணவர்களது நிர்மாணிப்புகளை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சித்திரங்கள் சிலவற்றை எழுமாறாக எடுத்து, மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவை பற்றிய கருத்துக்களை வினவுக.
- தாழ்நாட்டுச் சித்திரங்களின் சித்திரக் கோட்பாடுகள் பற்றி மாணவரது கவனத்தை ஈர்த்து, மாணவரது ஆக்கங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- பல்வேறுபட்ட கலாசாரங்களுக்குரிய திருமண வைபவ நிகழ்வுகளின் பழக்க வழக்கங்கள், ஆடைஅணிகள் பற்றிக் விளக்குதல்.
- தாழ்நில விகாரை ஓவியங்களின் பாணிக்கமைவான இயல்புகளைக் கூறுதல்.
- தமது படைப்பாக்கங்களுக்காக தாழ்நாட்டு ஓவியப்பாணியின் செல்வாக்கைப் பயன் படுத்துதல்.
- ஏனையவர்களின் நிர்மாணிப்புக்களை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 1.3.1.1:**

**ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்**

- உங்களிடம் வழங்கப்பட்ட திருமண வைபவம் ஒன்றின் பல நிகழ்வுகளைக் காட்டும் சித்திரங்களை நன்றாக நோக்குக.
- விரும்பிய நிகழ்வை சித்தரிக்கும்போது தாழ்நாட்டு விகாரை ஓவியங்களின் பின்வரும் பண்புகள் மீது கவனஞ் செலுத்துக.
    - மனித, விலங்கு மெய்நிலைகளின் தன்மை
    - ஆடை அணிகலன்களின் உபயோகம்
    - அலங்காரங்கள் சோடனை முறைகள்
    - பின்னணியின் அமைப்பு
    - வர்ண உபயோகம்
- தேவையானபோது ஆசிரியரின் உதவியை நாடுக.
- நிர்மாணித்த சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**தேர்ச்சி 2.0 : சுற்றாடலில் காணப்படும் பொருள்களை ஒருங்கிணைத்துச் திரட்டுச் சித்திரங்களாக வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1 : பல்வேறு இயற்கையான, செயற்கையான பொருள்களை வெவ்வேறாக ஆராய்ந்தறிந்து பருமட்டான படங்களை வரைவார்.**

**செயற்பாடு 2.1.1 : "இரேகைகளைப் பயன்படுத்தி பொருட் தொகுதி ஒன்றைப் பார்த்து வரைவதை கற்றறிவோம்."**

**பாடவேளை** : 2

**கற்றற் பேறுகள்:**

- தாங்கும் பலகை மீது வைத்துள்ள பொருட் தொகுதியின் ஒன்றுக்கொன்று வேறுபட்ட வடிவங்கள், மேற்பரப்புத் தன்மை ஆகியவற்றை விளக்குவார்.
- தளத்துக்குப் பொருத்தமானவாறு அளவிடைப்படி பொருட் தொகுதியை இரேகைகளால் வரைந்து காட்டுவார்.
- சித்திரம் வரைதல் கோட்பாடுகளைப் பயன்படுத்தி பொருட் தொகுதியைத் தளத்தின் திரட்சியாக வரைவார்.
- இரேகையின் பல்வகைமை, வலிமை ஆகியவற்றை வெளிப்படுத்தி பொருட் தொகுதியை வரைவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 2.1.1.1 க்குரிய செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் போதியளவிலான பிரதிகள்.
- ஒருங்கிணைக்கத் தேவையான பொருள்கள்
  - சதுரமுகி வடிவப்பொருள் ஒன்று
  - பிளாஸ்டிக் ஜக் (Jug)
  - டென்னிஸ் பந்தொன்று
  - குறோட்டன் கிளை ஒன்று
  - அச்சிட்ட துணித் துண்டொன்று
  - பொருள்களை வைக்கப் பொருத்தமான பலகை ஒன்று
- மாதிரிச் சித்திரங்கள்
- வரைதற் தாள்கள், 2B, 3B, 4B, 6B வகைப் பென்சில்கள்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 2.1.1.1**

- பொருள்களை பலகை மீது மாணவர்கள் பார்க்கக்கூடியவாறு அவர்களது கண் மட்டத்துக்குக் கீழாக வைக்க.
- பொருள்களை நன்றாக அவதானிக்கச் செய்க.
- அவற்றின் அளவுப் பிரமாணம், புறஇயல்புப் பண்புகள் பற்றி மாணவர்களிடம் வினவுக.
- காட்சிக்கு வைக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு பொருள்களினதும், கிளையினதும் பண்புகள், மேற்பரப்புத் தன்மை, தூரதரிசனம், முப்பரிமாணத் தன்மை, தளத்தை உபயோகித்தல் பற்றிக் கலந்துரையாடுக.
- பலவித பென்சில்களை உபயோகித்து இரேகைகளின் தன்மையைக் காட்டலாம் என்பதை விளக்குக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2.1.1.2**

- இணைப்பு 2.1.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- அதனை மாணவர்கள் நோக்கச் செய்க.
- சித்திரம் வரையத் தேவையானவற்றை மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- தேவையான வழிகாட்டல்களை வழங்குக.
- நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராக்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 2.1.1.3**

- மாணவர்களது நிர்மாணிப்புகளை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சுய மதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்க.
- கீழேயுள்ள விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுக.
  - பொருள்களின் வடிவம் வெவ்வேறுபட்டது.
  - சரியாகப் பொருள்களை நோக்குவதால் நிர்மாணிப்பை செம்மையாக பூரணப் படுத்தலாம்.
  - இரேகைகள் மூலம் தூரதரிசனம், முப்பரிமாணத் தன்மை, மேற்பரப்புத் தன்மை என்பனவற்றை வெளிப்படுத்தலாம்.

(20 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- பொருள்களின் பல்வேறுபட்ட தன்மைகளை விவரித்துக் கூறல்.
- இரேகைகள் மூலம் பொருள்களின் பண்புகளைக் காட்டுதல்.
- பொருள்களின் வேறுபட்ட வடிவங்களை இரேகைகளால் வரைதல்.
- பென்சிலை உபயோகித்து இரேகைகளின் தன்மை வெளிப்படுத்தல்.
- பொருள் தொகுதியில் காணக்கூடிய ஒன்றுக்கொன்று வேறுபட்ட அவற்றின் மேற்பரப்புத் தன்மை பற்றி விபரித்துக் கூறல்.
- பலகை மீது உள்ள பொருட் தொகுதியின் அளவிடையைக் கருத்தில் கொண்டு வரைதல்.

**இணைப்பு 2.1.1.1:**

**ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்**

- உங்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட பொருட் தொகுதியை நன்றாக நோக்குக.
- இவை கண்மட்டத்துக்குக் கீழே இருப்பதால் மேற்பகுதி தெரியும் விதத்தைக் கவனிக்க.
- ஒவ்வொரு பொருளினதும் வேறுபாட்டை அறிக.
- அளவிடைக்கு ஏற்ப சிறிய, பெரிய பொருள்களின் அளவு, பொருளின் ஆழம், மேற்பரப்புத் தன்மை, தூர தரிசனம், முப்பரிமாணத்தன்மை என்பவை மீது கவனஞ் செலுத்துக.
- தளத்துக்குப் பொருந்தும்படி பொருட் தொகுதியை ஒருங்கிணைக்க.
- குறிப்பிட்ட பென்சிலை உபயோகித்து ஒளி நிழல் காட்டி இரேகைகளால் பொருட் தொகுதியை வரைக.
- தேவையானபோது (ஆசிரியரிடம்) வழிகாட்டல்களைப் பெறுக.
- உங்கள் நிர்மாணிப்புகளை வகுப்பில் முன்வைக்கத் தயாராகுக.

**தேர்ச்சி 2.0 : சுற்றாடலில் காணப்படும் பொருள்களை ஒருங்கிணைத்துச் சித்திரங்களாக வரைவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2 : இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்களை ஒருங்கிணைத்து சித்திரமாக வரைவார்.**

**செயற்பாடு 2.2.1 : "பொருட் தொகுதியை வர்ணங்களைக் கொண்டு சித்திரமாக வரைவோம்."**

**பாடவேளை** : 2

**கற்றற் பேறுகள்:**

- இயற்கையான. செயற்கையான பொருள்களின் வேறுபாட்டுத் தன்மை, பண்புகள் என்பவற்றை நன்றாக நோக்குவார்.
- தளத்துக்குப் பொருந்தும் விதத்தில் பொருள்களை அளவிடைக்கு ஏற்பவும் தூரதரிசனம் வெளிப்படும் விதத்திலும் ஒழுங்கிணைத்து வரைவார்.
- அடிப்படைச் சித்திரக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி வர்ண ஊடகத்துக்குப் பொருத்தமாக முப்பரிமாணத் தன்மை வெளிப்படும் விதத்தில் வர்ணம் தீட்டுவார்.
- ஏனையவர்களது நிர்மாணிப்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு இல. 2.2.1.1 இல் தரப்பட்டுள்ள ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்.
- சித்திர ஒருங்கிணைப்புக்குத் தேவையான பொருள்கள்
  - கனவுரு வடிவப்பொருள் ஒன்று
  - சாடியில் நடப்பட்ட ஒரு பூவைக் கொண்ட அந்தூரியம் செடியொன்று.
  - பூசணிக்காய் / தர்பூசணிக்காய்
  - அச்சிட்ட துணித் துண்டொன்று
  - பொருள்களை வைக்கப் பொருத்தமான பலகை ஒன்று
  - வரைதற் தாள்கள், பென்சில்கள், பொருத்தமான வர்ண ஊடகம் ஒன்று
  - மாதிரிச் சித்திரங்கள்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 2.2.1.1**

- பெற்றுக் கொண்ட பொருள்களை மாணவர்கள் நன்றாக நோக்கும் விதத்தில் வைக்க.
- அப்பொருள்களின் வடிவம், அளவு பற்றி மாணவர்களிடம் வினவுக.
- மாதிரிச் சித்திரங்களில் உள்ள பொருள்களின் மேற்பரப்புத் தன்மை. தளத்தை உபயோகித்தல், தூரதரிசனம், முப்பரிமாணத் தன்மை, வர்ண ஊடகத்துக்குப் பொருந்தும் விதத்தில் வர்ணத்தை உபயோகித்தல் பற்றிக் கலந்துரையாடுக.
- பென்சிலை உபயோகித்து பொருள்களின் தன்மையை இரேகைகள் மூலம் காட்டலாம் என்பது பற்றியும், வர்ணம் தீட்டுவதால் அதனை செம்மையுடன் பூரணப்படுத்தலாம் என்பது பற்றியும் மாணவர்களுடன் கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 2.2.1.2**

- ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- வரைதலுக்குத் தேவையான உபகரணங்களையும் வழங்குக.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- தேவையான விதத்தில் வழிகாட்டல்களை வழங்குக.
- மாணவர்கள் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 2.2.1.3**

- ஒவ்வொரு மாணவனும் வரைந்ததை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவற்றின் முன்னூட்டல், பின்னூட்டல் என்பவற்றை வழங்குக.
- **பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுக.**
  - பருமட்டான படங்கள் வரைந்து பொருள்களின் வடிவங்களை வெளிப்படுத்தலாம்.
  - ஒவ்வொரு பொருளினதும் மேற்பரப்புத் தன்மை வித்தியாசப்படும்.
  - பொருள்கள் மீது ஒளி படுவதால் முப்பரிமாணத் தன்மை வெளிப்படுதல்.
  - பல வர்ண ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் பயன்படுத்தி தூரதரிசனம், முப்பரிமாணத் தன்மை, மேற்பரப்புத் தன்மை என்பவற்றைக் காட்டலாம்.
  - அந்தூரியம் செடியின் இலைகள் பரவிக் காண்பதால் சித்திரத்தின் சமநிலை பேணப்படுதல்.
  - பின்னணியைப் பொருத்தமாக இடுவதால் பொருள் தொகுதியை மிகத் தெளிவாகக் காட்டலாம்.

(20 நிமிடங்கள்)

### கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- பொருள் தொகுதியின் வடிவம். மேற்பரப்புத் தன்மை என்பவற்றை விபரித்துக் கூறல்.
- அடிப்படைச் சித்திரக் கோட்பாடுகளைக் கொண்டு பொருள்களைச் சரியாக வரைதல்.
- வர்ணங்களை வெவ்வேறு நுட்ப முறைகளில் உபயோகித்தல்.
- ஏனையவர்களது நிர்மாணிப்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 2.2.1.1:**

### ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- உங்களுக்கு முன்னால் வைக்கப்பட்ட பொருள்களை நன்றாக நோக்குக.
- மேற்பரப்புத் தன்மை, வடிவம் எனும் பண்புகளை நோக்குக.
- பொருள்கள் மீது ஒளிபடுவதால் ஒளி நிழல் தெரியும் விதம், முப்பரிமாணத் தன்மை தோன்றும் விதம் பற்றி நோக்குக.
- தளத்துக்குப் பொருந்தும் விதத்தில் பொருள்களை ஒருங்கிணைத்துச் சித்திரமாக வரைக.
- நுட்ப முறைகளைப் பயன்படுத்தி அவற்றை வர்ணம் தீட்டுக.
- பொருட்கள் நன்றாக வெளிப்படும் வகையில் பொருத்தமான பின்னணி வர்ணத்தைப் பயன்படுத்துக.
- தேவை ஏற்படும்போது ஆசிரியரின் வழிகாட்டல்களைப் பெறுக.
- நீங்கள் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**கீழே உள்ள தலைப்புகளின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிடுக.**

2.2.2 கனவுரு வடிவான பொருள் ஒன்று, கண்ணாடிப் போத்தல் ஒன்று, பூக்கள் உடனான கிளையொன்று, பப்பாசிக்காய் ஒன்று, அச்சிட்ட துணித்துண்டொன்று என்பனவற்றை ஒருங்கிணைத்துச் சித்திரமாக வரைவோம்.

(2 பாடவேளைகள்)

2.2.3 சதுரமுகி வடிவான பொருள் ஒன்று, மட்குடம் ஒன்று, அலரிப் பூக்களையுடைய கிளையொன்று, உருளை வடிவமான பொருள் ஒன்று, அச்சிட்ட துணித்துண்டொன்று என்பனவற்றை ஒருங்கிணைத்துச் சித்திரமாக வரைவோம்.

(2 பாடவேளைகள்)

2.2.4 கனவுரு வடிவப் பொருள் ஒன்று, பிளாத்திக்கு ஜக் ஒன்று, செவ்விளநீர் ஒன்று, பூக்களைக் கொண்ட கிளையொன்று, அச்சிட்ட துணி ஒன்று என்பன ஒருங்கிணைத்து சித்திரமாக வரைவோம்.

(2 பாடவேளைகள்)

2.2.5 கனவுரு வடிவப் பொருள் ஒன்று, சிறிய பிளாத்திக்கு வாளி ஒன்று, வொலிபோல் ஒன்று, உதை பந்தொன்று, அகன்ற இலைகளைக் கொண்ட குறோட்டன் கிளை ஒன்று, அச்சிட்ட துணித் துண்டொன்று என்பன ஒருங்கிணைத்து சித்திரம் வரைவோம்.

(2 பாடவேளைகள்)

2.2.6 கனவுரு வடிவப் பொருள் ஒன்று, களி மண் கூசா, அகன்ற இலைகளைக் கொண்ட குறோட்டன் கிளையொன்று, குவளையில் இடப்பட்ட பானக் குழாய், அச்சிட்ட துணித் துண்டொன்று என்பன ஒருங்கிணைத்து சித்திரம் வரைவோம்.

(2 பாடவேளைகள்)

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்காக படைப்பாக்கம் புரிவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.1 : புதிய திட்ட எண்ணக்கருக்களையும் மற்றும் வெவ்வேறு ஊடகங்களையும் பயன்படுத்தி நிர்மாணிக்கக்கூடிய வீட்டு அலங்காரப் பொருள்களுக்காக திட்டங்களையும், அலங் கரிப்புக்களையும் நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.1.1 : ''மரச்சுவர் செதுக்கல் ஒன்றை சித்திரமாக வரைவோம்.''**

**பாடவேளை** : 2

**கற்றற் பேறுகள்:**

- மரச் செதுக்கல் ஒன்றின் சிறப்பியல்புகளை விபரித்துக் கூறுவார்.
- சூழலில் உள்ள தளவடிவங்களை அலங்காரமாக உபயோகிப்பார்.
- விரிவான வடிவங்களை எளிமையாக வரைவார்.
- புடைப்பு மரச் செதுக்கல் ஒன்றுக்கான சித்திரத்தை திட்டமிட்டு வரைந்து ஊடகத்துக்கு ஏற்றவாறு வர்ணம் தீட்டுவார்.
- ஆர்வத்துடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.
- ஏனையவர்களது ஆக்கங்களை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மரச் செதுக்கல்கள் அல்லது மாற்றுப் பொருள்கள்
- இணைப்பு 3.1.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 3.1.1.1**

- பொருத்தமான முறை ஒன்றைப் பயன்படுத்தி மரச் செதுக்கல் ஒன்றை காண்பித்து பாடத்தில் பிரவேசிக்க.
- பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்துக.
  - உபயோகித்துள்ள தளவடிவங்கள்
  - எளிமையான தன்மை
  - புடைப்புத் தன்மை
  - ஊடகத்தின் தன்மை

(15 நிமிடங்கள்)

**படிமுறை 3.1.1.2**

- இணைப்பு 3.1.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- 'சூழல்' எனும் தலைப்புடன் மரச் செதுக்கல் ஒன்றுக்குப் பொருத்தமான படம் ஒன்றை திட்டமிட்டு நிர்மாணிக்க.
- தேவையான வழிகாட்டல்களை வழங்கி வர்ணம் தீட்டச் செய்க.
- நிர்மாணித்த சித்திரத்தை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 3.1.1.3**

- நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அச்சித்திரங்களின் வலிவுகளையும், நலிவுகளையும் சுட்டிக் காட்டுக. தேவையான முன்னூட்டல்களையும், பின்னூட்டல்களையும் வழங்குக.
- எல்லாவற்றையும் உள்ளடக்கி மீளாய்வில் ஈடுபடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- புடைப்பு மரச் செதுக்கல் ஒன்றில் காணப்படும் சிறப்பியல்புகளை விபரித்துக் கூறுதல்.
- பல இடங்களை அலங்கரிப்பதற்காக உபயோகிக்கும் மரச் செதுக்கலுக்குப் பொருத்தமான சித்திரங்களை வரைதல்.
- தனக்குரிய பாணியில் இயற்கைத் தளவுருக்களை நிர்மாணித்தல்.
- முப்பரிமாணத் தன்மையை நுட்பமான முறையுடன் வெளிப்படுத்தி சிறு புடைப்பு செதுக்கலின் பொருட்டு சித்திரம் நிர்மாணித்தல்.
- தேவைக்குப் பொருத்தமாக நிர்மாணத்தில் ஈடுபடுதல்.

**இணைப்பு 3.1.1.1:**

**ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்**

- உமக்கு வழங்கப்பட்ட ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தை நன்றாக வாசிக்கவும்.
- வகுப்பில் காண்பித்த மாதிரிகள், படங்கள் என்பனவற்றை நன்றாக நோக்குக.
- அங்குள்ள தளவுருக்களின் ஒழுங்கிணைப்பு, லயம், வர்ண உபயோகம் என்பனவற்றை நோக்குக.
- எளிய தளவுருக்களை உபயோகிப்பதன் மூலம் இலகுவான முறையில் நிர்மாணிப்பில் ஈடுபடுக.
- அலங்கரிப்பை அதிகரிக்கச் செய்வதன் பொருட்டு எளிமையான வடிவமைப்பு அலங் காரங்களால் விருத்தி செய்க.
- செதுக்கலின் அரைபுடைப்புத் தன்மையை வெளிப்படுத்துக.
- ஊடகத்துக்குப் பொருத்தமானவாறு வர்ணங்களை உபயோகிக்குக.
- தேவை ஏற்படின் ஆசிரியரின் அறிவுறுத்தல்களைப் பெறுக.

**கீழே உள்ள தலைப்புகளின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிடுக.**

3.1.2 வீட்டில் அழகுக்காக வைக்கப்படும் சாடி ஒன்றை நிர்மாணிப்போம்.

(2 பாடவேளைகள்)

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்காக படைப்பாக்கம் புரிவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.2 : மரபு ரீதியான அலங்கரிப்பு அலகுகளையும், அவற்றின் வர்ணங்களையும் உபயோகித்து, முழுத் தள அலங் கரிப்புக்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.2.1 : "மேசை விரிப்பொன்றை வரைவோம்."**

**பாடவேளை : 2**

**கற்றற் பேறுகள்:**

- மேசை விரிப்பொன்றின் சிறப்புத் தன்மையைக் கூறுவார்.
- பாரம்பரிய அலங்காரக் காட்டுருக்களாகப் பயன்படுத்தி மேசை விரிப்பொன்றுக்குப் பொருத்தமான பரவுருவ அலங்காரமொன்றை நிர்மாணிப்பார்.
- கேத்திர கணித உபகரணங்களை உபயோகித்து அளவிடைக்கேற்ப சரியாக வரைவார்.
- ஏனையவர்களது நிர்மாணங்களை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பரவுருவ அலங்காரத்துக்கு ஏற்ப அலங்காரங்கள் இடப்பட்ட பல்வேறுபட்ட மேசை விரிப்புக்கள்.
- சித்திரம் வரைய உதவும் கருவிகள்.
- பாரம்பரிய அலங்காரக் காட்டுருக்களைக் கொண்ட மாதிரிச் சித்திரங்கள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 3.2.1.1**

- பரவுருவ அலங்காரங்களைக் கொண்ட மேசை விரிப்பொன்றை வகுப்பில் காண்பித்து பாடத்தில் பிரவேசிக்க.
- பின்வரும் விடயங்களைப் பற்றி மாணவர்களிடம் வினவுக.
  - பயன்படும் சந்தர்ப்பங்கள்
  - வடிவம்
  - அலங்காரங்கள் இடப்பட்டுள்ள விதம்
  - வர்ணம்
- காண்பித்த மேசை விரிப்பில் பாரம்பரிய அலங்காரக் காட்டுருக்களை பயன்படுத்தியுள்ள விதம் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 3.2.1.2**

- சித்திரம் வரையத் தேவையான பொருட்களை மாணவர்களுக்கு வழங்குக.
- பாரம்பரிய அலங்காரக் காட்டுருக்களை தனக்கு விரும்பிய விதத்தில் உபயோகித்து மேசை விரிப்பு ஒன்றை நிர்மாணிக்கும்படி மாணவர்களை பணிக்க.
- ஆக்கத்தின் போது பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்துக.
  - கேத்தர கணித உபகரணங்களைப் பயன்படுத்தி அளவீடுகளை சரியாக எடுக்க வேண்டும் என்பது பற்றி
  - மேசை விரிப்பு முழுத்தள அலங்காரமொன்று என்பது பற்றி

- ஆக்கம் தூய்மையாகவும் ஆக்கத்திறன் மிக்கதாகவும் இருக்க வேண்டும் என்பது பற்றி
- ஆக்கத்துக்குப் பொருத்தமான வர்ணங்களை உபயோகிக்க வேண்டும் என்பது பற்றி
- குறித்த காலத்துக்குள் நிர்மாணிப்பை பூர்த்தி செய்ய வேண்டும் என்பது பற்றி

- ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 3.2.1.3**

- மாணவர் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- ஒவ்வொருவரது ஆக்கங்கள் பற்றிய கருத்துகளை முன்வைக்க சந்தர்ப்பம் தருக.
- ஆக்கங்களில் செய்யக்கூடிய அபிவிருத்தி,: பின்ஊட்டம் பெறும் வகையில் கலந்துரையாடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- மேசை விரிப்பொன்றில் இருக்க வேண்டிய சிறப்பியல்புகள், அதன் பயன்பாடு என்பன பற்றிக் கூறுதல்.
- கேத்திர கணித உபகரணங்களை சரியாகப் பயன்படுத்துதல்.
- பாரம்பரிய அலங்காரக் காட்டுருக்களை மேசை விரிப்புக்குப் பொருந்தும்படியாக அளவிடைக்கு ஏற்ப நிர்மாணித்தல்.
- அடக்கத்துடன் நிர்மாணிப்பில் ஈடுபடுதல்.

**கீழே உள்ள தலைப்புகளின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிடுக.**

3.2.2 பாரம்பரிய இயல்புகள் வெளிப்படும் விதத்தில் ‘குஷன் கவர்’ (தழுவணை உறை) ஆக்குவோம்.

(2 பாடவேளைகள்)

3.2.3 பாரம்பரிய அலங்காரக் காட்டுருக்களையும், வர்ணங்களையும் உபயோகித்து வட்ட வடிவமான பித்தளைத் தாம்பாளம் ஒன்றை வரைவோம்.

(2 பாடவேளைகள்)

**தேர்ச்சி 3.0 : பயன்பாட்டுத் தேவைகளுக்காக படைப்பாக்கம் புரிவார்.**

**தேர்ச்சி மட்டம் 3.3 : ஆக்கச் சிறப்புடைய அலங்கரிப்பு அலகுகளைப் பயன்படுத்தி பாவனைப் பொருள்களையும் அலங்கரிப்புகளையும் நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 3.3.1 : "சேலை முந்தானை வரைவோம்."**

**பாடவேளை : 2**

**கற்றற் பேறுகள்:**

- சேலை முந்தானையின் சிறப்பியல்புகளை விபரித்துக் கூறுவார்.
- பல அளவுகளைக் கொண்ட உருக்களை ஒன்றிணைத்து வரைய முற்படுவார்.
- ஆர்வத்துடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.
- உருக்களை பொருத்தமாக ஒழுங்குபடுத்துவதால் ஏற்படும் அழகை நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 3.3.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகள்.
- அலங்காரங்களைக் கொண்ட சேலை முந்தானையின் படங்கள்.
- தரம் மிக்கதாக அமைந்த சேலை முந்தானையொன்று.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 3.3.1.1**

- கட்புல சாதனங்களை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துக.
- மாணவர்கள் கொண்டு வந்த சேலைகளையும் வகுப்பில் காட்சிப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுக.
  - முந்தானை என்பது சேலையின் முக்கியமான பகுதி என்பது பற்றி
  - பரவுருவ அலங்காரமாகக் காணப்படுகிறதென்பது பற்றி
  - ஒன்று அல்லது பல காட்டுருக்களைப் பயன்படுத்தலாம் என்பது பற்றி
  - வர்ண உபயோகம் பற்றி

(15 நிமிடங்கள்)

**படிமுறை 3.3.1.2**

- சேலை முந்தானை ஒன்றை ஆக்கும்படி மாணவர்களைப் பணிக்க.
- ஆக்கும்போது கீழே உள்ள தலைப்புகளில் விரும்பியதொன்றைத் தெரிவு செய்யும்படி அறிவுறுத்துக.
  - தாவர உருக்கள்
  - விலங்குருக்கள்
  - கேத்திர கணித வடிவங்கள்
- இவ்வடிவங்களை ஆக்கச் சிறப்புடன் பயன்படுத்துவதற்கு வழிகாட்டுக.
- பொருத்தமான விதத்தில் கேத்திர கணித உபகரணங்களைப் பயன்படுத்த உதவுக.
- தேவைக்கேற்ப வர்ணம் தீட்ட அறிவுறுத்துக.
- ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 3.3.1.3**

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட ஆக்கங்கள் பற்றிய சுய வர்ணனைக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

  தேவையான முன்னூட்டல்களையும், பின்னூட்டல்களையும் வழங்கிச் சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- சேலை முந்தானையை விபரித்துக் கூறல்.
- எதேச்சையாக தலைப்பொன்றைத் தெரிவு செய்து சித்திரமாக வரைதல்.
- சரியான முறையில் கேத்திர கணித உபகரணங்களைப் பயன்படுத்துதல்.
- ஏனையவர்களது ஆக்கங்களையும் இரசித்து நயத்தல்.

**கீழே உள்ள தலைப்புகளின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிடுக.**

3.3.2 ஆக்கபூர்வமான உருக்களைக் கொண்டு கதவுத் திரைச்சேலைக்காக அலங்காரமொன்றை வரைவோம்.

(2 பாடவேளைகள்)

3.3.3 மேசை மின் விளக்கு ஒன்றை அமைப்போம். (2 பாடவேளைகள்)

**தேர்ச்சி 4.0 : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக கிரபிக் ஆக்கங்கள் படைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 4.1 : பல்வேறு உற்பத்தி மற்றும் சேவைப் பிரச்சாரங்களுக்காக கிறபிக் ஆக்கங்களைப் படைப்பார்.**

**செயற்பாடு 4.1.1 : "சுவரொட்டிச் சித்திரம் ஒன்றை நிர்மாணிப்போம்."**

**பாடவேளை : 3**

**கற்றற் பேறுகள்:**

- சுவரொட்டி சித்திரம் ஒன்றில் இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளை கலந்துரையாடுவார்.
- பரந்த தொனிப்பொருளை மக்களுக்கு தொடர்புபடுத்தும் பொருட்டு போஸ்டர் சித்திரம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை ஆராய்வார்.
- அவற்றை நோக்குவதால் சுவரொட்டி பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்வார்.
- தெரிவு செய்யப்பட்ட கருப்பொருளுக்கு இணங்க சுவரொட்டி சித்திரம் ஒன்றின் பருமட்டான படத்தை வரைவார்.
- வரையப்பட்ட போஸ்டர் சித்திரத்திற்கு பொருத்த குறியீட்டுக் கருத்துள்ளதாக வர்ணத்தையும் தொனிப்பொருளையும் பயன்படுத்துவார்.
- அடக்கத்துடன் கருவிகளை உபயோகித்து நிர்மாணிப்பில் ஈடுபடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 4.1.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகள்.
- வரைதற் தாள்கள், திசூக்கடதாசி, போஸ்டர் சாயம், தூரிகை, பென்சில்
- பல தொனிப்பொருள்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சில சுவரொட்டிகள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 4.1.1.1**

- பல தொனிப்பொருள்களின் கீழ் வரையப்பட்ட சுவரொட்டிச் சித்திரங்கள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுக.
  - சுவரொட்டிச் சித்திரங்கள் கிராபிக் சித்திர வகையைச் சேர்ந்தது பற்றி
  - நிலைக்குத்தாகவும், கிடைப்பாடாகவும் சித்திரத்தை ஆக்க முடியும் என
  - உடன் புரிந்து கொள்ளும் விதத்தில் தகவல் வெளியிடப்பட வேண்டும் என்பது பற்றி
  - குறியீட்டு எளிய தளவுருக்களின் பயன்பாடு பற்றி
  - எழுத்துருக்களைப் பயன்படுத்தித் தகவலை வெளிப்படுத்தலாம் என்பது பற்றி
  - கருத்தை வெளிப்படுத்த உபயோகிக்கும் வர்ணங்கள் பற்றி
  - நல்ல நிறைவுடன் காணப்படுதல் வேண்டும் என்பது பற்றி

(15 நிமிடங்கள்)

**படிமுறை 4.1.1.2**

- இணைப்பு 4.1.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- தேவையான வரைதற் தாள்கள், கருவிகள் என்பனவற்றையும் வழங்குக.
- பொருத்தமான சமகால முக்கியத்துவம் வாய்ந்த பரந்த தலைப்பின் கீழ் சுவரொட்டியை நிர்மாணிக்கும்படி பணிக்க.
- ஆக்கத்தில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் தேவையான வழிகாட்டல்களை வழங்குக.
- ஆக்கிய சுவரொட்டிகளை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 4.1.1.3**

- மாணவர் ஆக்கிய சுவரொட்டிகளை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவை பற்றிய கருத்துகளை தெரிவிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- வேகமாக செய்தியை புரிந்து கொள்ள நல்ல நிறைவுடன் காணப்பட வேண்டியதுடன் சொற்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனும் விடயங்களை உள்ளடக்கி மீளாய்வில் ஈடுபடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- சுவரொட்டிச் சித்திரம் ஒன்றில் இருக்க வேண்டிய அடிப்படை அம்சங்களைக் கூறுதல்.
- பரந்த தொனிப்பொருளுடன் கூடிய தகவல்களை மக்களுக்கு அறிவிப்பதற்காக சுவரொட்டிச் சித்திரம் உபயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களை ஆராய்தல்.
- நிர்மாணிக்கப்பட்ட சுவரொட்டிச் சித்திரத்துக்குப் பொருந்தும் குறியீடுகளையும் வர்ணங் களையும் உபயோகித்தல்.
- அடக்கத்துடன் செயற்பாட்டில் ஈடுபடுதல்.
- ஏனையவர்களது நிர்மாணிப்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 4.1.1.1:**

**ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்**

- வகுப்பில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பல சுவரொட்டிகளை நன்றாக நோக்குக.
- வர்ண உபயோகம், குறியீடுகளின் பயன்பாடு, கருப்பொருளின் வெளிப்பாடு, எளிமை, தகவலைத் தெரிவிப்பதில் வெற்றி என்பவை மீது கவனஞ் செலுத்துக.
- தெரிவு செய்யப்பட்ட சமகால முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்குப் பொருத்தமாக குறியீடுகளைக் கொண்ட உருக்களுக்காக பருமட்டான படங்களை வரைக.
- திசுத்தாளை உபயோகித்து திட்டமிட்ட படத்தை வரைதற் தாளில் பிரதியிட்டுக் கொள்க.
- செய்தியை மேலும் தெளிவுபடுத்த பொருத்தமான எழுத்துருக்களை இடுக.
- தொனிப்பொருளுக்குப் பொருந்தும் விதத்தில் வர்ணங்களைத் தெரிவு செய்து வர்ணம் தீட்டுக.
- சுவரொட்டியை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | **4.0** | **:** | **உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **4.2** | **:** | **பல்வேறு உற்பத்திகளை விளம்பரப்படுத்துவதற்கான கிரபிக் ஆக்கங்களைப் படைப்பார்.** |
| **செயற்பாடு** | **4.2.1** | **:** | **" 'பொதிச் சுற்றுறை' ஒன்றை நிர்மாணிப்போம்."** |
| **பாடவேளை** | | **:** | 2 |

**கற்றற் பேறுகள்:**

- பொதிச் சுற்றுறையொன்றில் காணப்படும் பண்புகளை விளக்குவார்.
- அச்சிடுவதற்கு பொருந்தும் விதத்தில் உறை பூரணமடைந்திருக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- 'உறை'யொன்றை திட்டமிட்டு வர்ணம் தீட்டுவார்.
- அடக்கத்துடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.
- ஏனையவர்களது நிர்மாணங்களை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 4.2.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள்.
- வரைதற் தாள்கள், திசூத் தாள்கள், வர்ணங்கள்.
- பொருள்களின் பல்வேறுபட்ட உறைகளின் மாதிரிகள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 4.2.1.1**

- பொருட்களின் பல்வேறுபட்ட சுற்றுறைகள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- பின்வரும் விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடுக.
  - உறைகள் கிராபிக் முறையைச் சார்ந்து நிற்பது பற்றி
  - உறையின் வடிவம், அளவு பற்றி
  - கவர்ச்சியாகவும், கருத்தாழமிக்கதாகவும் இருப்பது பற்றி
  - எளிமையாக இருப்பது பற்றி
  - நிறுவனத்தின் தொழிற்பாட்டுத் தன்மை வெளிப்படும் விதம் பற்றி
  - வர்ண உபயோகம், எழுத்துருக்கள், பயன்படுத்தியுள்ள விதம் பற்றி
- அடங்கியிருக்க வேண்டியவை:
  - உற்பத்தி செய்த நிறுவனம், வகையின் பெயர்
  - விலை, நிறை, உற்பத்தித் திகதி
  - காலாவதியாகும் திகதி, தரமுத்திரை
- உறையின் கவர்ச்சித் தன்மை, உற்பத்தி நிறுவனத்தை விளம்பரப்படுத்த பெரிதும் உதவும் என்பது பற்றி தெளிவுபடுத்துக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 4.2.1.2**

- இணைப்பு 4.2.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- தேவையான வரைதற் தாள்களையும், வர்ணங்களையும் வழங்குக.
- தமக்கு விருப்பமான பொருளின் உற்பத்திக்காகப் பொருத்தமான உறையொன்றை நிர்மாணிக்க மாணவர்களைப் பணிக்க.
- மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களைச் செய்க.
- நிர்மாணித்த உறைகளை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 4.2.1.3**

- மாணவர் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவைகளை சுயமதிப்பீடு செய்ய வாய்ப்பளிக்க.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வில் ஈடுபடுக.
    - நிறுவனத்தின் தொழிற்பாட்டுக்குப் பொருந்தும் விதத்தில் விளம்பரப்படுத்த, கவர்ச்சியான வகையில் உறை அமைய வேண்டும் என்பது பற்றி
    - தூய்மையாகவும், தெளிவாகவும் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது பற்றி
    - அச்சிடுவதற்கு பொருத்தமான விதத்தில் அமைய வேண்டும் என்பது பற்றி
    - உறையை சின்னதாக்கும்போதும், பெரிதாக்கும் போதும் உறையில் அடங்கும் விடயங்கள் தெளிவாகத் தெரிய வேண்டும் என்பது பற்றி

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- உறையொன்றை நிர்மாணிக்கும்போது அதில் இருக்கவேண்டிய அடிப்படை அம்சங்களை விளக்கிக் கூறுதல்.
- நிறுவனம் ஒன்றின் வளர்ச்சிக்கு உற்பத்திப் பொருளின் உறை பெரும் செல்வாக்கை செலுத்துகிறது என ஏற்றுக் கொள்ளல்.
- அச்சிடப் பொருத்தமான விதத்தில் உறையொன்றை திட்டமிடுதல்.
- நிறுவனத்தையும், தேவையையும் கருதி பொருத்தமான வர்ணங்களை உபயோகித்தல்.

**இணைப்பு 4.2.1.1:**

**ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்**

- உமக்கு வழங்கப்பட்ட பல்வேறுபட்ட உறைகளை நன்றாக நோக்குக.
- அவற்றில் காணப்படும் விசேட பண்புகளை நுணுக்கமாக ஆராய்க.
- ஏதேனும் பொருளின் உற்பத்திக்கான உறையை நிர்மாணிக்கத் திட்டமிட்டு, அதனை உமக்கு வழங்கப்பட்ட தாளில் பருமட்டாக வரைக.
- உறையில் உள்ளடங்கும் முக்கியமான விடயங்கள் மீது கவனஞ் செலுத்துக.
- அச்சிடப் பொருத்தமான வகையில் உறையை திட்டமிடுக.
- எளிமையாகவும், கவர்ச்சியாகவும் புத்தம் புதிய பாணியிலும் உறையை நிர்மாணிக்க.
- அளவுடன் பொருத்தமான வர்ணங்களை உபயோகிப்பதில் கவனஞ் செலுத்துக.
- தேவை ஏற்படும் போது ஆசிரியரின் உதவியை நாடுக.
- நீங்கள் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**கீழே உள்ள தலைப்புகளின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிடுக.**

- நீங்கள் விரும்பும் தலைப்பின் கீழ் வாழ்த்து இதழ் ஒன்றை நிர்மாணிக்க.

(3 பாடவேளைகள்)

- தேசிய உற்பத்திப் பொருள் ஒன்றின் சுற்றுறைக்குப் பொருந்தும் பெயர்ச்சுட்டியொன்றை நிர்மாணிக்க. (2 பாடவேளைகள்)

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **5.0 :** | **வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **5.1 :** | **மரபுரீதியான அலங்கரிப்புக்களை அடிப்படையாகப் பயன்படுத்தி புடைப்புச் செதுக்கல் ஆக்கங்களைப் படைப்பார்.** |
| **செயற்பாடு** | **5.1.1 :** | **"பூக்கள், செடிகொடிகள், விலங்குருக்களை செதுக்குவோம்."** |
| **பாடவேளை** | **:** | 3 |

**கற்றற் பேறுகள்:**

- பாரம்பரிய அலங்கரிப்பு மூலங்களைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமாக உருக்களை ஒழுங்கிணைத்து செதுக்கலை செய்வார்.
- புடைப்புச் செதுக்கலின் நுட்ப முறைகளைப் பயன்படுத்துவார்.
- கருவிகளைச் சரியாகப் பயன்படுத்துவார்.
- ஊடகத்தைப் பயன்படுத்துகையில் அறிவுபூர்வமாகச் செயற்படுவார்.
- வர்ண உபயோகத்தில் திறமையைக் காட்டுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 5.1.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்கள்.
- புடைப்புச் செதுக்கல்களின் மாதிரிகள்
- டிமைத் தாள்கள், பென்சில், காபன் தாள்கள்
- $1\frac{1}{2}$ அடி × $1\frac{1}{2}$ அடி $\frac{1}{2}$, $\frac{3}{4}$, 1 அங்குல தடிப்பமுடைய ரெஜிபோம் தகடுகள்
- செதுக்கத் தேவையான கருவிகள் (Tools)
- சிறிய அளவிலான கத்திகள்
- மணற் கடதாசிகள் (இல.01)
- வர்ணங்கள் (இறப்பர் பூச்சு (Rubber Paint), பதாகைப்பூச்சு (Banner Paint)

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 5.1.1.1**

- புடைப்புச் செதுக்கல்களின் மாதிரிகளை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவை பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடி கருத்துக்களை வினவுக.
- பாரம்பரிய அலங்கரிப்புகளில் காணக்கூடிய பூக்கள், செடிகொடிகள், விலங்குருக்கள் என்பவற்றை ஆக்கபூர்வமான முறையில் உபயோகித்து புடைப்புச் செதுக்கல் ஒன்றை உருவாக்கலாம் என்பதை விளக்குக.
- வீடொன்றில், நிறுவனமொன்றில் அல்லது சிறப்புவாய்ந்த இடமொன்றின் சுவரை அலங்கரிக்க புடைப்புச் செதுக்கலை உபயோகிக்கலாம் என்பதை தெளிவுபடுத்துக.
- ரெஜிபோம் தட்டையும் புடைப்புச் செதுக்கலுக்காக பயன்படுத்தலாம் என்பதை தெளிவு படுத்துக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 5.1.1.2**

- இணைப்பு 5.1.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவங்களை மாணவர் களுக்கு வழங்குக.
- பருமட்டான படங்களை வரைய டிமைத் தாள்கள், பென்சில் என்பன வழங்கி பருமட்டான படங்களை வரையும்படி பணிக்க.
- ரெஜிபோம் தகட்டின் அளவுக்குப் பொருந்தும் விதத்தில் பருமட்டான படத்தை தாளில் வரைவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுக.
- பருமட்டான படத்தை 'காபன் தாளின்' துணையுடன் ரெஜிபோம் தகட்டில் பிரதிசெய்து கொள்க.
- ரெஜிபோம் வெட்டத் தேவையான (கத்தி) கருவிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- வெட்டிய செதுக்கலை மணற் கடதாசி மூலம் ஒப்பமாக்கியெடுக்க அறிவுறுத்துக.
- வர்ணம் தீட்டிப் பூரணப்படுத்தச் செய்க.
- நிர்மாணிப்புகளை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 5.1.1.3**

- மாணவர் நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவைகளை சுயமதிப்பீடு செய்ய வாய்ப்பளிக்க.
- நிர்மாணிப்புகள் பற்றிய கருத்துகளைத் தெரிவிக்க ஏனைய மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குக.
- பருமட்டான படங்கள் வரைந்து, தேவையான கருவிகளையும் உபயோகித்து ரெஜிபோம் மீது இலகுவாக ஒரு செதுக்கலை செய்யலாம் என்பதைத் தெளிவுபடுத்துக.
- செதுக்கியதை மணற் கடதாசியால் தேய்த்து ஒப்பமாக்கி தேவையான விதத்தில் வர்ணம் தீட்டலாம் என்பதையும் தெளிவுபடுத்துக.
- மரத்துண்டு அல்லது வேறு ஊடகங்களையும் பயன்படுத்தி புடைப்புச் செதுக்கல் ஒன்றை நிர்மாணிக்கலாம் என்பதை விளக்குக.
- நிர்மாணிப்பை மேலும் விருத்தி செய்யக்கூடியவாறான கருத்துகளை முன்வைத்து மீளாய்வில் ஈடுபடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- புடைப்புச் செதுக்கல் ஒன்றை நிர்மாணிக்கும் நுட்ப முறைகளை விபரித்துக் கூறுதல்.
- பாரம்பரிய அலங்கார மூலங்களை உபயோகித்து ஆக்கபூர்வமான வகையில் செதுக்கலுக்கான திட்டப்படத்தை வரைதல்.
- முப்பரிமாணத் தன்மையைக் கருதி தளவுருக்களை செதுக்குதல்.
- தேவைக்கேற்ற விதத்தில் கருவிகளைப் பயன்படுத்துதல்.
- நிர்மாணிப்பைப் பொருத்தமானவாறு வர்ணம் தீட்டுதல்.
- அவதானிப்புடன் ஊடகத்தை உபயோகித்தல்.

**இணைப்பு 5.1.1.1:**

## ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்ட புடைப்புச் செதுக்கலின் மாதிரியை நன்றாக நோக்குக.
- அதில் காணப்படும் தளவுருக்கள், ஊடகம், வர்ணம், முப்பரிமாணத்தன்மை என்பவற்றை நன்றாக நோக்குக.
- வழங்கப்பட்ட கடதாசி மீது பாரம்பரிய செடிகொடிகள், பூக்கள், விலங்குருக்கள் என்பவற்றை விரும்பிய விதத்தில் உபயோகித்து பருமட்டான படத்தை வரைக.
- புடைப்புச் செதுக்கலுக்குப் பொருந்தும் விதத்தில் உருக்களை வரைய வேண்டும் என்பதை கவனத்திற் கொள்க.
- வரைந்த பருமட்டான படத்தைக் காபன் தாளின் உதவியுடன் ரெஜிபோம் தாளில் பிரதியிட்டுக் காட்டுக.
- கத்திகளின் உதவியைக் கொண்டு அவசியமற்ற பகுதிகளை வெட்டியகற்றியும் மேல்நோக்கித் தெரிய வேண்டிய பகுதிகளைச் சீராக வெளித் தள்ளப்பட்டு தெரியும் விதத்திலும் நிர்மாணிக்க.
- ஆழமாகத் தோண்டி வெட்டுவதால் முப்பரிமாணத் தன்மையை வெளிக்கொணரலாம் என்பதை தெளிவுபடுத்துக.
- வெட்டிய பின் மணற் கடதாசியைக் கொண்டு தேய்த்து ஒப்பமாக்குக.
- உட்பக்கமாக தள்ளப்பட்ட பகுதிகளை இருளான வர்ணங்களிலும், வெளித்தட்டப் பகுதிகளை மெல்லிய நிறங்களிலும் வர்ணம் தீட்டுக.
- வர்ணம் தீட்டி முடித்த பின் நிர்மாணிப்பை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**தேர்ச்சி 5.0 : வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 5.2 : அப்புதல் நுட்ப முறையைப் பயன்படுத்தி மனித உருக்களை நிர்மாணிப்பார்.**

**செயற்பாடு 5.2.1 : " ஒழுங்கிணைந்த மனித உருவம்."**

**பாடவேளை** : 3

**கற்றற் பேறுகள்:**

- பல்வேறுபட்ட ஊடகங்களை இனங்காண்பார்.
- ஊடகங்களை உபயோகிக்கும் திறனை வெளிக்காட்டுவார்.
- தனக்கு விரும்பிய விதத்தில் இயற்கையான அல்லது கேத்திர கணித இயல்பைக் கொண்ட மனித உருவமொன்றை ஒழுங்கிணைப்பார்.
- உபகரணங்களைச் சரியான முறையில் பயன்படுத்தும் திறனைப் பெறுவார்.
- ஏனையவர்களது ஆக்கங்களை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இணைப்பு 5.1.1.2 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகள்.
- பல மாதிரிச் சிற்பங்கள், சிற்பங்களை சித்தரிக்கும் படங்கள்
- கடதாசிகள், பென்சில்கள்
- பதப்படுத்திய களிமண்
- மரப்பலகைகள் $(2 \times 30 \times 30\ cm)$
- அப்புதலுக்குத் தேவையான உபகரணங்கள் (Tools)
- கூரான கம்பித்துண்டு $(30\ cm)$
- இரும்பாணி

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 5.2.1.1**

- மாதிரிச் சிற்பங்களையும், நிழற் படங்களையும் மாணவருக்குக் காண்பிக்க.
- மாணவர்களிடம் கலந்துரையாடிக் கருத்துக்களை வினவுக.
- பதப்படுத்திய களிமண்ணால் திறமையான ஒரு சிற்பத்தை செய்யலாம் என்பது பற்றி விளக்குக.
- பூரணப்பாட்டில் கவனம் செலுத்துவதால் நல்லதொரு நிர்மாணிப்பைப் பெறலாம் என்பதை விளக்குக.
- சீமெந்து நார் (fபைபர்) போன்ற உறுதியான ஊடகத்தை உபயோகித்து பெரிய அளவுடைய இவ்வாறான அமைப்புகளை நிர்மாணிப்பதன் மூலம் வீட்டு முற்றத்தை அல்லது பூங்காக்களை அழகுபடுத்தலாம் என்பதை வலியுறுத்துக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 5.2.1.2**

- இணைப்பு 5.2.1.1 க்குரிய ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- பருமட்டான படம் வரையத் தேவையான தாள்களையும் பென்சில்கள் என்பவற்றை வழங்குக.
- சிற்பத்துக்கான மனித உருவத்தின் பருமட்டான படத்தை வரைக.
- பதப்படுத்திய களிமண், கருவிகள் (Tools) போன்றவற்றையும் வழங்குக.
- பலகைத்துண்டு, கப்பி போன்றவற்றையும் வழங்குக.
- பருமட்டான படத்தைக் கொண்டு சிற்பத்தைக் கட்டியெழுப்ப ஈடுபடுத்துக.
- மெய்நிலைகளைச் சரியாகக் காட்ட அளவிடையும் சந்தமும் முக்கிய பங்கு வகிப்பதை உறுதிப்படுத்துக.
- சிற்பத்தின் வெளியே பரவும் பகுதிகளைக் குறைத்துக் கொண்டு சிற்பத்தின் அங்கங்களை வெளிப்படுத்துதல் முக்கியம் என விளக்குக.
- மேல்நோக்கியும், முன்நோக்கியும் வெளித்தள்ளப்பட்ட பகுதிகளைத் தெளிவாகக் காட்டுவதால் சிற்பத்தின் சிறப்பு வெளிப்படும் என்பதை விளக்குக.
- எக்கோணத்திலிருந்து பார்த்தாலும் சிற்பத்தின் பண்புகளைக் காணக்கூடியவாறு அமைத்தல் முக்கியம் என வலியுறுத்துக.
- நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 5.2.1.3**

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவர்களுக்கு சுய மதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்க.
- நிர்மாணங்களை மேலும் சிறப்பாக அமைக்கக்கூடிய கருத்துகளை முன்வைத்து மதிப்பிட ஏனைய மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குக.
- மாணவர் ஆக்கங்களில் சிற்பக் கோட்பாட்டுப் பண்புகள் வெளிப்படும் விதத்தில் மீளாய்வில் ஈடுபடுக.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- சிற்பங்களை அப்பும் படிமுறைகளை விபரித்துக் கூறுதல்.
- சிற்பங்களை பல ஊடகங்களைப் பயன்படுத்தி அமைக்கலாம் என ஏற்றுக் கொள்ளல்.
- களிமண்ணை ஊடகமாகப் பயன்படுத்தி சிற்பத்தை நிர்மாணித்தல்.
- ஊடகத்தின் தரத்தைப் புரிந்து கொண்டு நிர்மாணிப்புகளை செய்தல்.
- தேவைக்குப் பொருத்தமான விதத்தில் கருவிகளைப் பயன்படுத்துதல்.
- செயன்முறையில் ஊடகத்தைச் சரியான முறையில் பயன்படுத்தல்.

**இணைப்பு 5.2.1.1:**

## ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்

- வகுப்பில் காண்பிக்கப்பட்ட மாதிரி சிற்பத்தின் வடிவம், மெய்நிலை, முப்பரிமாணத் தன்மை அளவிடை, ஊடகப் பயன்பாடு போன்றவற்றை நன்றாக நோக்குக.
- உமக்கு வழங்கப்பட்ட தாளில் விருப்பமான நுட்ப முறைக்கு ஏற்ப பல மெய்நிலைகளைக் கொண்ட மனித உருவ ஒழுங்கிணைப்பின் பருமட்டான படத்தை வரைக.
- பதப்படுத்திய களிமண்ணை தயார்படுத்திக் கொள்க.
- பலகையை அடியாகக் கொண்டு நீங்கள் வரைந்த பருமட்டான படத்திற்கிணங்க அப்புதலை ஆரம்பிக்க.
- சிற்பத்தை அப்பும்போது அதன் உயரம் $30\ cm$ ஆக இருக்க வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்க.
- சிற்பத்தின் மத்தியில் ஒரு கம்பியை வைத்து அப்பி கட்டியெழுப்பி சிற்பத்தின் உறுதித் தன்மையை பெறுக.
- அப்புதலில், கம்பியில் மண் ஒட்டுவதைத் தவிர்க்க அடிக்கடி கம்பியை கையால் சுற்ற வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்க.
- சிற்பத்தின் நுட்பமான பகுதிகளை, உபகரணங்களைக் கொண்டு வெளிப்படுத்துக.
- நிர்மாணித்ததை வெளியே உலரவிடுக.
- உலர்ந்ததும் நிர்மாணிப்புகளை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார்.**

**செயற்பாடு 6.1.1 : கலைஞர் " முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகர கலைஞரின் படைப்புக்களை மதிப்போம்."**

**பாடவேளை** : 1

**கற்றற் பேறுகள்:**

- முதலியார் அமரசேகரவின் படைப்புக்களைப் பெயரிடுவார்.
- படைப்புக்களுக்கு அடிப்படையாக அமைந்த கலைநுட்ப முறைகளைத் தேடியறிவார்.
- படைப்பாக்கப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த செல்வாக்குகளை விசாரணை செய்வார்.
- படைப்புக்கள் சார்ந்த ஒழுங்கமைப்பு முறைகளையும் கோட்பாட்டுப் பண்புகளையும் விபரிப்பார்.
- கலைஞர் முதலியார் அமரசேகரவினது சித்திரங்களின் கலைத்துவப் பண்புகளை மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- முதலியார் ஏ.சீ.ஜீ.எஸ். அமரசேகர அவர்களின் வர்ணச் சித்திரங்கள்
  - பேயோட்டியின் மகள்
  - தச்சனின் வீடு / தொழிலின்மை (Unemployed)
- இணைப்பு 6.1.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.1.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.1.1.1**

- கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது சித்திரங்கள், ஒளிப்படங்கள் என்பவற்றை மாணவருக்குக் காட்சிப்படுத்துக.
- அச்சித்திரங்களின் கருப்பொருள், கலைத்துவப்பாணி, ஒழுங்கமைப்புப் பண்புகளை மாணவரிடம் வினவுக.
- ஐரோப்பிய கலாநிலைய (Academy) சித்திரக் கலைப் பண்புகளை உள்ளடக்கி, பொதுவான மனித வாழ்க்கை அனுபவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ள விதம் குறித்து வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.1.2**

- இணைப்பு 6.1.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கி, அதனை வாசித்து விளங்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்கொத்துக்கு விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.1.3**

- விடைத்தாள்களைத் தமக்கிடையே பரிமாற்றி, மதிப்பீட்டுக்கு உட்படுத்துமாறு மாணவர் களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- விடைகள் தொடர்பாக மாணவர்களது கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது படைப்புகள் தொடர்பாக மீட்டாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

- **பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி இணைப்பு 6.1.1.1, இணைப்பு 6.1.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**
    - கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது சித்திரங்களைப் பெயரிடுதல்.
    - அவரது படைப்பாக்கப் பாணியினது பண்புகளை விவரித்தல்.
    - கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது சித்திரங்களில் ஐரோப்பிய கலாநிலைய (Academy) சித்திரக் கலைக் கோட்பாடுகள் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தை விவரித்தல்.
    - கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது சித்திரப் படைப்புக்களின் சிறப்பியல்புகளையும், கலைத்துவப் பண்புகளையும் விவரித்தல்.

**இணைப்பு 6.1.1.1:**

**ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்**

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது கலைப் படைப்புக்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
- கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது கலைப் படைப்புக்களில் காணப் படும் சிறப்பியல்புகளை இனங்கண்டு கொள்க.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுக.
    (1) முதலியார் எ. சீ. ஜீ. எஸ். அமரசேக்கர பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
    (2) பின்வரும் விடயங்களின் கீழ் கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது கலைப் படைப்புக்களை மதிப்பிடுக.
        (i) கருப்பொருள்
        (ii) கலைத்துவப்பாணி
        (iii) செல்வாக்கு
        (iv) நுட்பமுறை
        (v) கலைத்துவப் பண்புகள் - உருவப் பயன்பாடு
        - நிறப் பயன்பாடு
        - தளப் பயன்பாடு
        - உணர்ச்சி / பாவ வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்க.


**இணைப்பு 6.1.1.2:**

## வாசிப்புப் பத்திரம்

**முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகர (1883-1983)**

- கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகர இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் கலாநிலைய யதார்த்தவாத (Academic Realism) ஓவிய கலை முறைமையில் முன்னோடியாகச் செயற்பட்ட ஒரு சித்திரக் கலைஞர் ஆவார்.
- 1883 மார்ச் 3 ஆந் திகதி காலி மாவட்டத்தின் தொடந்துவை எனும் ஊரில் பிறந்த முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகர (ஏப்ரகாம் கிரிஸ்டோபர் கிறக்கறி சூரிய ஆரச்சி அமரசேகர) கருத்துப்படக் (Cartoon) கலைஞராகவே படைப்பாக்கத் துறையில் பிரவேசித்தார்.
- பிரித்தானிய ஆட்சியாளரின் அனுசரணையின் கீழ், நிறுவப்பட்ட இலங்கைக் கலைச் சங்கத்தின் (Ceylon Society of Art) முன்னோடிக் கலைஞர்களுள் ஒருவராகவும் செயற்பட்டார்.
- இலங்கை ஒரு குடியேற்ற நாடாக இருந்தபோது பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த கலைஞர்களின் கலைச் செல்வாக்கை, இலங்கைக் கலைச் சங்கத்தைச் சேர்ந்த கலைஞர்களின் படைப்புக்களில் காணலாம்.
- கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது சித்திரப் படைப்புக்களில் ஐரோப்பிய கலாநிலையக் கலைப்பாணியாகிய யதார்த்தவாத கலைப்பண்புகளைக் காணலாம்.
- உயிரினங்களின் உருவங்கள், யதார்த்தமான நிலத்தோற்றங்கள் போன்றவற்றை வரைவதில் திறமைமிக்கவரான இவர், தமது சித்திரப் படைப்புக்களுக்காக, நீர் வர்ணம், எண்ணெய் (தைல) வர்ணம் ஆகிய இரண்டு நிற ஊடகங்களையும் பயன்படுத்தியுள்ளார்.
- மனித உருவங்களை உள்ளடக்கிய உருவ ஒழுங்கமைப்புகளுக்கு முதலிடமளித்த இவர், ஐரோப்பிய கலாநிலையக் கலையின் முதன்மையான ஒரு பண்பாகிய தூரநோக்கு முறையைத் தமது சித்திரங்களின் அடிப்படையாகக் கொண்டுள்ளார்.
- முப்பரிமாண இயல்புகளைக் கொண்ட நிறப் பயன்பாட்டுடன், ஒளி, நிழல் தொடர்பாக கலாநிலைய அறிவாகிய ‘‘கியரஸ்கியுரோ’’ (Chiaroscuro) கோட்பாட்டை அவரது படைப்புக்களில் காணமுடிகிறது.
- கலைஞர் முதலியார் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகரவினது சித்திரக் கலைப் படைப்புக்கள் சில வருமாறு:
  - தொழிலின்மை (Unemployed) / தச்சனின் வீடு
  - பேயோட்டியின் மகள்
  - பூனைக்குட்டி
  - ரீட் மாவத்தை (நீர்வர்ணம்)
  - அரச தலைவர்களின் மெய்யுருக்கள் / பிரதிமை ஓவியங்கள் (Portrait)

## பேயோட்டியின் மகள்



- தற்போது கொழும்பு, தேசிய கலா பவனத்தில் நிரந்தரமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள 'பேயோட்டியின் மகள்' எனும் ஓவியம் கன்வசுத் தளத்தில் எண்ணெய் வர்ணத்தினால் படைக்கப்பட்டுள்ளது.
- இந்த ஓவியத்தல் உள்ள பேயோட்டியின் மகள், சாந்திக் கிரியைகளுக்குரிய உடைகள் அணிந்த நிலையில் உள்ளாள். அக்கணத்தில் அச்சமடைந்துள்ள விதம் இந்த ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.
- மனிதனின் அக உணர்வுகளைக் காட்டும் யதார்த்தப்பாணி மற்றும் கற்பனைப்பாணி இயல்புகளின்படி ஆச்சரிய மற்றும் மறைந்த நிலை கருப்பொருள்களைக் கொண்ட கற்பனையான ஒரு விடயத்தைக் கருவாகக் கொண்டு இக்கலைப்படைப்பின் வெளிப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.
- சித்திரத்தில் காட்டப்பட்டுள்ள தீச்சுவாலை, அவளது முகத்தில் காட்டப்படும் உணர்வு களுக்கு ஒப்பிடும் வகையில் சித்திரிக்கப்பட்டுள்ள வேடமுகம், பாரிய அளவுடைய நிழல் ஆகியன மூலம் ஒட்டுமொத்த கலைப்படைப்பின் வெளிப்பாட்டுத்தன்மையையும் நாடகப்பாங்கான தன்மையும் அழுத்தப்பட்டுள்ளது.
- இந்த ஓவியத்தில் இரண்டு தளங்கள் உள்ளன. அத்தளங்களில் உருவங்களும் நிறங்களும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இந்த ஓவியத்தில் வர்ணப் பயன்பாடு 'கியுரஸ்கியுரோ' (Chiaroscuro) முறையில் கையாளப்பட்டுள்ளதும், ஒளியினதும் நிழலினதும் தன்மை நன்கு வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.
- பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்கள் ஒரு தனி நிறப் பண்புகளைக் கொண்ட செவ்வியல் வர்ணங்களாகும்.
- சித்திர உருக்களின் விவரங்கள் (details) முனைப்பாக்கப்படும் (highlight) வகையிலேயே இருண்ட நிறப் பயன்பாட்டினுள் ஒளி கையாளப்பட்டுள்ளது.

## தொழிலின்மை (Unemployed)



- கலைஞர் ஏ. சீ. ஜீ. எஸ். அமரசேகர வரைந்த 'தொழிலின்மை' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த ஓவியம் 'தச்சனின் வீடு' எனும் பெயரிலேயே பிரபல்யமடைந்துள்ளது.
- கன்வசுத் தளத்தில் எண்ணெய் (தைல) வர்ணத்தினால் சித்தரிக்கப்பட்டுள்ள "தச்சனின் வீடு" எனும் இந்த ஓவியம் கொழும்பு, தேசிய கலாபவனத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
- தச்சனின் வீட்டில் நிலவும் வறுமை நிலையைக் காட்டுவதற்காக மிகச் சிறப்பாக மனித உருவங்களும் வர்ணங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- யன்னலின் ஊடாக வீட்டினுள் புகும் ஒளி மிக இயல்பான வகையில் சித்திரிக்கப்பட்டுள்ளது. அவ்வொளியின் மூலம் தச்சனது வீட்டாரின் முகங்களில் தோன்றும் உணர்வுகள் மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன.
- யன்னலின் ஊடாகக் காட்டப்படும் ஒளியின் தன்மை ஒட்டுமொத்த படைப்பில் பயன்படுத்தப் பட்டுள்ள நிறங்கள், 'கியரஸ்கியுரோ' (Chiaroscuro) கோட்பாட்டின்படி முப்பரிமாண இயல்புகளுடன் காட்டப்பட்டுள்ளது.
- பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்கள், ஒரு தனி நிறப் பண்புகளைக் கொண்ட செவ்வியல் வர்ணங்களாகும்.
- கலாநிலைய இயற்கைவாத, யதார்த்தவாத பாணியைப் பின்பற்றி, மனித உருவின் அழகும் உள்ளுணர்வுகளும் இக்கலைப் படைப்பில் நன்கு வெளிக்காட்டப்பட்டுள்ளன.
- படைப்பாக்க வெளியின் மீது, ஆழத்தைக் காட்டியவாறு, தூரநோக்கு இயல்புகளை உள்ளடக்கி, முன்பகுதி, நடுப்பகுதி, பின்பகுதி ஆகிய தளங்களின் மீது தூரநோக்குப் பண்புக்கமைய வர்ணங்களும் வடிவங்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :** **தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார்.**

**செயற்பாடு 6.1.2 :** **" ஸ்டான்லி அபேசிங்ஹவினது சித்திரப் படைப்புக்களை மதிப்போம்."**

**பாடவேளை :** 1

**கற்றற் பேறுகள்:**

- கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது படைப்புக்களைப் பெயரிடுவார்.
- கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது கலைச்சேவையை விசாரித்தறிவார்.
- கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது படைப்புக்களுக்கு அடிப்படையாக அமைந்த சித்திர மூலகங்களையும் சித்திரிப்புக் கோட்பாட்டு இயல்புகளையும் விவரிப்பார்.
- கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது படைப்புக்களின் கலைத்துவப் பண்புகளை நயந்து மதிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவின் வர்ண ஓவியங்கள்.
  - மட்பாண்டக்கூடம் (கும்பள்ஹல)
  - ஊர்வலம் (பெரகரா)
- இணைப்பு 6.1.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.1.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.1.2.1**

- கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது வர்ண ஓவியங்களைக் காட்டும் படங்களை அவதானிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அவ்வோவியங்களுக்குக் கிடைத்த செல்வாக்கு, கருப்பொருள், கலைப்பாணி ஆகியன குறித்து மாணவரிடம் வினவுங்கள்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.2.2**

- இணைப்பு 6.1.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கி, அதனை வாசித்து விளங்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்கொத்துக்கு விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.2.3**

- விடைத்தாள்களைத் தமக்கிடையே பரிமாற்றி, மதிப்பீட்டுக்கு உட்படுத்துமாறு மாணவர் களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- விடைகள் தொடர்பாக மாணவர்களது கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது படைப்புகள் தொடர்பாக மீட்டாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

- **பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி இணைப்பு 6.1.1.1, இணைப்பு 6.1.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**
  - கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது சித்திரங்களைப் பெயரிடுதல்.
  - அவரது படைப்பாக்கப் பாணியினது பண்புகளை விவரித்தல்.
  - கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது சித்திரங்கள் ஐரோப்பிய கலாநிலைய (Academy) சித்திரக் கலைக் கோட்பாடுகள் செல்வாக்குச் செலுத்தியுள்ள விதத்தை விவரித்தல்.
  - கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது சித்திரப் படைப்புக்களின் சிறப்பியல்புகளையும், கலைத்துவப் பண்புகளையும் விவரித்தல்.

**இணைப்பு 6.1.2.1:**

**ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்**

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது கலைப் படைப்புக் களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
  - (1) கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹ பற்றிச் சுருக்கமான குறிப்பு எழுதுக.
  - (2) பின்வரும் விடயங்களின் கீழ் கலைஞர் ஸ்டான்லி அபேசிங்ஹவினது கலைப் படைப்புக்களை மதிப்பிடுக.
    - (i) கருப்பொருள்
    - (ii) கலைத்துவப்பாணி
    - (iii) செல்வாக்கு
    - (iv) நுட்பமுறை
    - (v) கலைத்துவப் பண்புகள்
      - உருப் பயன்பாடு
      - நிறப் பயன்பாடு
      - கோடுகளின் பயன்பாடு
      - தளப் பயன்பாடு
      - உணர்ச்சி / பாவ வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்கான ஆயத்தங்களைச் செய்து கொள்க.

**இணைப்பு 6.1.2.2:**

## வாசிப்புப் பத்திரம்

### ஸ்ரான்லி அபேசிங்ஹ (1914-1992)

- ஸ்டான்லி அபேசிங்ஹ இருபதாம் நூற்றாண்டின் நவீன கலை வரலாற்றில் ஆரம்ப காலத்தில் தோன்றிய சிறந்த ஒரு சித்திரக் கலைஞர் ஆவார்.
- 1914 இல் பிறந்த ஸ்டான்லி அபேசிங்ஹ இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் சித்திரக்கலை பயின்று, இந்தியாவுக்குச் சென்று கீழைத்தேய சித்திரக்கலையையும் பயின்று, அதன் மூலம் பெற்ற செல்வாக்கைத் தமது சித்திரப் படைப்பாக்கத்துக்கு அடிப்படையாகக் கொண்டார்.
- இவர் பல்வேறு கலைச் செல்வாக்குகளுடன் தமக்கேயுரித்தான சித்தரக்கலைப் பாரம்பரிய மொன்றினை உருவாக்குவதில் முன்னின்ற ஒரு கலைஞராவார்.
- அரச கலைக்கல்லூரி ஆசிரியராகவும், 1965-1969 வரையில் அதன் அதிபராகவும் செயற்பட்டுள்ளார்.
- 43 குழுவினரின் நவீனத்துவ வெளிப்பாட்டுக்குச் சமாந்தரமாக அரச நுண்கலைக் கல்லூரியில் நவீன பாணியின் செல்வாக்கைப் பெற்று புதியதொரு போக்கைக் கட்டியெழுப்பிய முதன்மையான முன்னோடி என இவரைக் குறிப்பிடலாம்.
- ஸ்டான்லி அபேசிங்ஹவினது படைப்புக்களில், மரபுரீதியான கலையின் பாணிசார்ந்த வடிவங்கள், பின் மனப்பதிவுவாத, வெளிப்பாட்டுவாத ஓவியக்கலைப் போக்குகளினதும் வர்ணப் பயன்பாட்டினதும் செல்வாக்கைக் காணமுடிகின்றது.
- படைப்புக்களின் பின்னணிக்காக, கனவடிவவாதக் கலையின் பின்னணி வெளியினது பண்புகளின் செல்வாக்கு பெறப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது.
- குறுகிய தடித்த கோடுகளின் பயன்பாடு அவரது ஓவியப் படைப்புக்களில் காணப்படும் ஒரு சிறப்பியல்பாகும்.
- ஸ்டான்லி அபேசிங்ஹவினது சில கலைப்படைப்புக்கள் வருமாறு:
  - மட்பாண்டக்கூடம்
  - ஆவணி ஊர்வலம் (Esala Perahara)
  - தியானம்
  - பாலகன் - இளைஞன் (Young and Infant)
  - லக்ஷ்மியின் பிறப்பு

## மட்பாண்டக்கூடம்



- ஸ்டான்லி அபேசிங்ஹவினது ஓவியங்களுள் ‘மட்பாண்டக் கூடம்’ எனும் ஓவியம் தனிச் சிறப்பானது.
- இந்த ஓவியம் ஒரு மட்பாண்டக் கடையையும் ஒரு தம்பதியினரையும் காட்டுகின்றது.
- இச்சித்திரத்தின் பின்னணியாக மண்பாண்டங்களாலான சூழல் அமைந்துள்ளது. இதன் முன்பகுதியும் பின்பகுதியும் ஒரே தளமாகக் காட்டப்பட்டுள்ளன.
- சித்திரத்தில் ஆழமும் முப்பரிமாணத் தன்மையும் கையாளப்பட்டுள்ளது. வர்ணந் தீட்டும் முறையினாலேயே இவை காட்டப்பட்டுள்ளன.
- இருண்ட நிறங்கள், எதிர் நிறமான மஞ்சள் நிறப் பயன்பாடு ஆகியவற்றின் மூலம் மனித உணர்வுகளை முனைப்புறுத்திக் காட்டுவதில் கலைஞர் வெற்றி கண்டுள்ளார்.
- சித்திரத்தின் வெளிப்பாட்டுத்தன்மையை அழுத்துவதற்காக வெளிப்பாட்டுத்தன்மையுடன் உயிரோட்டமான நீளம் குறைவான தடித்த கருநிறக்கோடுகளைப் பயன்படுத்தி நிறப் பிரதேசங்கள் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன.
- முகத்தில் உணர்வுகளை வெளிக்காட்டுவதற்காக இருண்ட நிறங்களுடன் பாவ வெளிப் பாடுகள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.
- ஸ்டான்லி அபேசிங்ஹவினது ஆக்கப்பாணி மீது, மரபுரீதியான கலையின் பாணிசார்ந்த வடிவங்கள், பின் மனப்பதிவுவாத, வெளிப்பாட்டுவாத ஓவியக்கலைப் போக்குகள், வர்ணப் பயன்பாடு, கனவடிவவாதக் கலையின் பின்னணி வெளிப்பண்புகள் ஆகியன செல்வாக்குச் செலுத்தியுள்ளமையைக் காணமுடிகின்றது.

## ஊர்வலம் (பெரகரா)



- ஸ்டான்லி அபேசிங்ஹவினது படைப்புக்களுள் ‘ஊர்வலம்’ எனும் ஓவியமும் முக்கிய இடத்தைப் பெறும் ஒரு படைப்பாகும்.
- கண்டி, ஆவணி ஊர்வலத்தைக் (Esala Perahara) கருப்பொருளாகக் கொண்டு வரையப் பட்ட இந்தப் படைப்புக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இருட்சாயல் ஒளிப்பான நிறங்கள், எதிர் வர்ணங்கள் ஊடாக சித்திரத்தின் அழகு புதியதொரு விதத்தில் காட்டப்பட்டுள்ளது.
- இருட்சாயல் வெளிச்சமான வர்ணங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி இராக்காலத்தைச் சித்திரிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள முயற்சி சித்திரத்தை மேலும் பொருளுள்ளதாக மாற்றியுள்ளது.
- இராக்காலத்தைச் சித்திரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இருள் - ஒளி நிலைமை களை நிறங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளதோடு, ஊர்வலத்தின் வெவ்வேறு அம்சங்களும் கூறுகளும் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன.
- கோடுகளைக் கையாள்வதை விட, வர்ணங்களைச் சிறப்பாகக் கையாள்வதன் மூலம், உருவங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. உருவப் பயன்பாட்டின்போது கருப்பொருளின் முக்கிய அம்சமாகிய, தாதுப்பேழையைத் தாங்கிய யானைச் சித்திரத்தின் நடுப்பகுதியில் இடப்பட்டுள்ளது.
- முன்பகுதி - பின்பகுதி எனக் கருதாது ஒரே தளத்தில் உருவங்கள் ஒழுங்கமைக்கப்பட் டுள்ள போதிலும், வர்ணந் தீட்டும் நுட்ப முறைக்கேற்ப முன்பகுதி - நடுப்பகுதி - பின்பகுதி ஆகியனவற்றை நன்கு ஒழுங்கமைத்து இடப்படுத்துவதன் மூலம் சித்திரத்தின் ஆழத்தைக் காட்டுவதில் கலைஞர் வெற்றியடைந்துள்ளனர்.
- இப்படைப்புக்காக, கனவடிவக் கலையின் பின்னணி வெளிப்பண்புகள் பயன்படுத்தப்பட் டுள்ளது. அத்தோடு பாணி சார்ந்த வடிவங்கள், பின் மனப்பதிவுவாத மற்றும் வெளிப் பாட்டுவாத ஓவியக்கலைப் போக்கின் வர்ணப் பயன்பாட்டின் செல்வாக்கையும் இப்படைப் பில் காணலாம்.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார்.**

**செயற்பாடு 6.1.3 : " கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த ஆக்கங்களை மதிப்போம்."**

**பாடவேளை :** 1

**கற்றற் பேறுகள்:**

- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த ஆக்கங்கள் பற்றித் தேடியறிவார்.
- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த ஆக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்பமுறைகளையும், அவரது நிர்மாணிப்புகளைத் துணையாகக் கொண்டு விவரிப்பார்.
- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த ஆக்கங்களின் சித்திரக் குணாதிசயங்களை தேடியாய்வார்.
- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த சித்திரங்களின் சிறப்பான கலைத்துவப் பண்புகளை மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த வர்ணச் சித்திரங்கள்
    - ஓட்டுச்சூளை
    - கடலாதெனிய
- இணைப்பு 6.1.3.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.1.3.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.1.3.1**

- பொருத்தமான ஒரு முறையைக் கையாண்டு, கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த வர்ணச் சித்திரங்களின்பால் மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த சித்திரங்களின் ஊடகப் பண்புகளைத் தேடி யறியுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- அச்சித்திரங்களின் கருப்பொருள், பாணி, ஊடகப்பண்புகள் ஆகியனவற்றை மாணவரிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.3.2**

- இணைப்பு 6.1.3.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.3.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்கி, அதனை வாசித்து விளங்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்கொத்துக்கு விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- விடையளிப்பதற்காக மாணவர்களுக்குத் துணை புரிக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.3.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பிடுக.
- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த கலை ஆக்கங்கள் பற்றி மீட்டாய்வு நடத்துக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனஞ் செலுத்தி, இணைப்பு: 6.1.3.1, இணைப்பு: 6.1.3.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- நீர்ச்சாய ஊடக சித்திரக் கலைத்துறையில் புதுத்திருப்பத்தை ஏற்படுத்திய ஒரு கலைஞர் என்ற வகையில் கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த கலை ஆக்கங்கள் பற்றி தேடியறிதல்.
- படைப்புக்களின் பாணியையும் ஊடகப் பண்புகளையும் விவரித்தல்.
- கலைஞரது ஓவியங்களின் கலைத்துவப் பண்புகளை மதிப்பிடுதல்.

**இணைப்பு 6.1.3.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த கலை ஆக்கங் களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளக்குங்கள்.
- பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.
  - (1) கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து பற்றிய விவரங்களைச் சுருக்கமாகத் தருக.
  - (2) பின்வரும் விடயங்களின் அடிப்படையில் கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த ஓவிய ஆக்கங்களை மதிப்பிடுக.
    - (i) கருப்பொருள்
    - (ii) கலைப்பாணி
    - (iii) செல்வாக்கு
    - (iv) நுட்பமுறை
    - (v) கலைத்துவப் பண்புகள் - உருவப் பயன்பாடு
      - வர்ணப் பயன்பாடு
      - தளப் பயன்பாடு
      - உணர்வு / பாவ வெளிப்பாடு
- தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்க.

**இணைப்பு 6.1.3.2:**

## வாசிப்புப் பத்திரம்

### ஜி. எஸ். பெர்னாந்து (1904-1990)

- 1904 பெப்ரவரி இரண்டாந் திகதி காலி மாவட்டத்தைச் சேர்ந்த பெந்தரை நகர சுத்தா கொடைக் கிராமத்தில் பிறந்த ஜீ. எஸ். அதாவது கம்வாரி சரத் பெர்னாந்து, நீர்வர்ண சித்திரக் கலையில் நுட்பத்திறன்களை வெளிக்காட்டிய பிரபல்யம் வாய்ந்த ஒரு ஓவியக் கலைஞர் ஆவார்.
- ரிச்சர்ட் ஹென்ரிக்கஸ் எனும் ஓவியக் கலைஞரிடத்தே ஓவியக்கல்வி பயின்ற அவர் முதல் சுவரோவியக் கலையினூடாக சித்திரக் கலைத்துறையில் பிரவேசித்த ஒருவராவார்.
- தொடர்ந்தும் எம். சார்லிஸ், முதலியார் அமரசேகர போன்ற கலைஞர்களிடத்தே ஓவியக்கலை பயின்ற அவர் நீர் வர்ண ஊடகம் தொடர்பான பரந்த அறிவைப் பெற்ற சிறந்த ஒரு சித்திரக் கலைஞராக தனது தனித்துவத்தை உறுதிப்படுத்திக் கொண்டார்.
- கருத்துப்பட ஓவியக் கலையின் (Cartoon) திறமை காட்டிய அவர் இலங்கையின் முதலாவது சித்திரக் கதையைப் படைத்தவர் ஆவார்.
- வணிக விளம்பர ஓவியக் கலைஞர் என்ற வகையில், அவர் வணிக விளம்பரச் சுவரொட்டிகள், பெயர்ச்சுட்டிகள், புத்தக அட்டைகள் போன்றவற்றையும் படைப்பதிலும் பங்களித்துள்ளார்.
- நீர்வர்ண ஊடக நுட்ப முறையைக் கையாண்டு இவரால் படைக்கப்பட்ட சித்திரங்கள், ஐரோப்பிய கலாநிலைய சித்திரக் கலையின் செல்வாக்குடன் தமக்கே உரித்தான இயற்கைவாதச் சித்திரக் கலைப்பாணியில் படைக்கப்பட்ட ஆக்கங்களாக முக்கியத்துவம் பெறுகின்றன.
- நீர் வர்ணப் பயன்பாட்டின் பொருட்டு ஐரோப்பிய தரைக் காட்சி அமைப்பின் தழுவல் பெறப்பட்டுள்ளது.
- இலங்கைச் சூழலின் இயற்கை அமைப்பை மிக அழகாக வெளிக்காட்டி இருப்பது, இவரது நிர்மாணிப்புக்களில் வெளிப்படுகின்ற விசேச பண்புகளாகும்.
- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த சித்திர ஆக்கங்களுள் பின்வரும் நீர் வர்ண ஊடக சித்திரங்கள் மிகச் சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன.
    - ஓட்டுச்சூளை
    - கடலாதெனிய
- கலைஞர் ஜீ. எஸ். பெர்னாந்து படைத்த, நீர்வர்ண ஊடக சித்திர ஆக்கங்களின் பாணி, சித்திர அடிப்படைகள், சித்திரிப்பு முறையியல் ஆகியவற்றைப் பின்வருமாறு இனங்கண்டு கொள்ளலாம்.
    - சித்திரத்தில் ஆழமும் தூரநோக்கு இயல்புகளும் வெளிப்படுத்தப்பட்டிருந்தல்.
    - மனித மெய்நிலைகள் லலிதத்தையும், உணர்வு வெளிப்பாட்டையும் கொண்டிருத்தல்.
    - முப்பரிமாண இயல்புகளுடன் பிரகாசமான நிறங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தல்.

**ஓட்டுச்சூளை**



- தேசிய கலா பவனத்தில் நிரந்தரமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இந்த ஓவியம் ஐரோப்பிய இயற்கைவாதப் பாணி சார்ந்த ஒரு படைப்பாகும்.
- கடதாசியில் நீர்வர்ணத்தினால் தீட்டப்பட்ட ஒரு கலைப்படைப்பாகும்.
- ஓவியத்தில் காட்டப்பட்டுள்ள ஓட்டுச்சூளையையும், சூழவுள்ள பிரதேசத்தையும் சித்திரிப்பதற்காக, பிரகாசமான வர்ணங்கள் முப்பரிமாண இயல்பில் நீர்வர்ண தடங்கள் முறையில் உயர்வான வெளிப்பாட்டுத்தன்மையுடன் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- தளத்தின் மீது உருவங்களைச் சித்திரிப்பதற்காக, முன்னணி, இடையணி, பின்னணி ஆகிய மூன்று பகுதிகளிலும் உருவங்களைத் தாபிப்பதன் மூலம் சித்திரத்தின் ஆழமும் தூரநோக்கு இயல்புகளும் சித்திரிக்கப்பட்டுள்ளன.
- இப்படைப்பு மீது இயற்கைவாதப்பாணியின் பண்புகளும், ஐரோப்பிய நிலத்தோற்ற ஓவியங்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

## கடலாதெனிய - விஜயோத்பாயா



- இந்த ஓவியம் கொழும்பு தேசிய கலாபவனத்தில் நிரந்தரமாக காட்சிக்கு வைக்கப் பட்டுள்ள ஒரு கலைப்படைப்பாகும்.
- நீர்வர்ண ஊடகத்தையும் ஐரோப்பிய இயற்கைவாத நுட்ப முறைகளையும் பயன்படுத்தி இது படைக்கப்பட்டுள்ளது.
- ஐரோப்பிய கலாநிலையச் சித்திரக் கலைக் கோட்பாட்டின் இயல்புகளான ஆழத்தைக் காட்டும் தூரநோக்கு இயல்புகள், முப்பரிமாண இயல்புகள் போன்றவை பயன்படுத்தப் பட்டுள்ளமை இந்த ஓவியத்தின் சிறப்பியல்பாகும்.
- தளத்தின் மீது உருவங்களைச் சித்திரிக்கும்போது முன்னணி, இடையணி, பின்னணிகளில் உருவங்களைத் அமைத்து தூரநோக்கு இயல்புகள் வெளிக்காட்டப்பட்டுள்ளமையும் இந்த ஓவியத்தின் ஒரே சிறப்பியல்பாகும்.
- பிரகாசமான வர்ணங்களைக் கொண்டு, முப்பரிமாண இயல்புகளை உள்ளடக்கி, நீர் வர்ணப் பிரதேச (Patoh) முறை கையாளப்பட்டுள்ளது.
- இப்படைப்பு மீது இயற்கைவாதப் பாணியின் பண்புகளும் ஐரோப்பிய நிலத்தோற்ற ஓவியங்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார்.**

**செயற்பாடு 6.1.4 : " கே. கனகசபாபதி படைத்த கலை ஆக்கங்களை மதிப்போம்."**

**பாடவேளை** : 1

**கற்றற் பேறுகள்:**

- கலைஞர் கே. கனகசபாபதி படைத்த கலை ஆக்கங்களைப் பெயரிடுவார்.
- அப்படைப்புக்களின் கலைப்பாணி சார்ந்த இயல்புகளை விளக்குவார்.
- அவரது படைப்புக்களுக்காக கிடைத்த செல்வாக்குகளை விவரிப்பார்.
- ஓவியங்களுக்காக அவர் பயன்படுத்திய வர்ணங்களின் தன்மையைத் தேடியறிவார்.
- கலைஞர் கே. கனகசபாபதி படைத்த ஓவியங்களின் கலைத்துவப் பண்புகளை மதிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கலைஞர் கே. கனகசபாபதி படைத்த வர்ணச் சித்திரங்கள்
  - வாசிக்கும் பிள்ளை (Reading boy)
  - சேவற்சண்டை (Cock fight)
- இணைப்பு 6.1.4.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.1.4.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.1.4.1**

- கலைஞர் கே. கனகசபாபதி படைத்த ஓவிய ஆக்கங்களை மாணவருக்குக் காட்சிப் படுத்துக.
- அப்படைப்புக்களின் பின்னணி தொடர்பாக மாணவரிடம் வினவி, ஓவியங்களின் கருப்பொருள், பெற்ற செயற்பாடுகள், பாணி, நுண்முறைகள் ஆகியன பற்றி மாணவரிடம் வினவுக.
- சுதேச ஓவியக் கலைஞர்களின் படைப்புகளை நயப்பதன் முக்கியத்துவம் பற்றி மாணவருக்கு அறிவூட்டம் செய்க.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.4.2**

- இணைப்பு 6.1.4.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.4.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.4.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- கலைஞர் கே. கனகசபாபதி படைத்த கலை ஆக்கங்கள் பற்றி மீட்டாய்வு நடத்துக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனஞ் செலுத்தி, இணைப்பு: 6.1.4.1, இணைப்பு: 6.1.4.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- கலைஞர் கே. கனகசபாபதி படைத்த ஓவியங்களைப் பெயரிடுதல்.
- அவரது ஓவியங்களின் கலைத்துவப் பண்புகளைத் தேடியறிதல்.
- நவீன சித்திரக் கலையில் புதியதொரு பாணியை அறிமுகஞ் செய்த ஒரு கலைஞராவார் என்பதைக் குறிப்பிடுதல்.
- அவரது படைப்புக்கள் மீது ஐரோப்பிய கலை மரபின் செல்வாக்கை விவரித்தல்.
  கலைஞர் கே. கனகசபாபதி படைத்த ஓவியங்களை நயந்து மதித்தல்.

**இணைப்பு 6.1.4.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள கலைஞர் கே. கனகசபாபதி படைத்த கலைப்படைப்புக்களை கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
  - (1) கலைஞர் கே. கனகசபாபதி தொடர்பான விவரங்களைச் சுருக்கமாகத் தருக.
  - (2) கலைஞர் கே. கனகசபாபதி படைத்த பிரபல்யம் வாய்ந்த ஓவிய ஆக்கங்களைப் பெயரிடுக.
  - (3) பின்வரும் விடயங்களின் கீழ் கலைஞர் கே. கனகசபாபதி படைத்த கலை ஆக்கங்களை மதிப்பீடு செய்க.
    - (i) கருப்பொருள்
    - (ii) கலைப்பாணி
    - (iii) செல்வாக்கு
    - (iv) நுட்பமுறை
    - (v) கலைத்துவப் பண்புகள்
      - உருவப் பயன்பாடு
      - வர்ணப் பயன்பாடு
      - தளப் பயன்பாடு
      - உணர்வு / பாவ வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்க.

**இணைப்பு 6.1.4.2:**

## வாசிப்புப் பத்திரம்

### கே. கனகசபாபதி (1915-1995)

- கலைஞர் கே. கனகசபாபதி இருபதாம் நூற்றாண்டு நடுப் பகுதியைச் சேர்ந்த இலங்கையின் நவீன சித்திரக் கலைத்துறையில் முன்னோடியாகச் செயற்பட்ட ஒரு சித்திரக் கலைஞர் ஆவார்.
- 1915 யாழ்ப்பாணம், உரும்பிராய்க் கிராமத்தில் பிறந்த கனகசபாபதி முதலில் பலாலி ஆசிரியர் கல்லூரியில் சித்திரக் கலை தொடர்பான துறைசார் கல்வியைப் பெற்றார்.
- இவர் பலாலி ஆசிரியர் கல்லூரியில் சித்திரக்கலை விரிவுரையாளராகவும் கடமையாற்றி யுள்ளார்.
- அவர் சித்திரக் கலைத்துறையில் மேலும் ஈடுபடுவதற்காக பிற்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இயங்கிய வின்சர் சித்திரக் கலைகழகத்தில் இணைந்து கொண்டார். மீண்டும் மேலதிக கல்வியின் பொருட்டு கொழும்பு தொழினுட்பக் கல்லூரியில் சித்திரக் கலைத்துறையில் கல்வி பயின்றார்.
- அவரது ஆரம்ப காலச் சித்திரங்களில் ஐரோப்பிய அக்கடமிக் சித்திரக் கலையின் யதார்த்தவாத கலை ஆக்கங்களின் செல்வாக்கு காணப்பட்டதாயினும், அவரது பிற்காலப் படைப்புக்களில் கனவடிவவாத கலைப்பாங்கின் செல்வாக்குகளைக் காணமுடிகின்றது.
- கனவடிவவாத கலைத்துவப் பண்புகளைக் கொண்ட, தமக்கேயுரித்தான ஒரு பாணியை உருவாக்கிய கே. கனகசபாபதி, 43 குழுவின் கண்காட்சிகளில் பங்குபற்றிய ஒரு சித்திரக் கலைஞர் ஆவார்.
- 1995 இல் இவ்வுலகை நீத்த கலைஞர் கே. கனகசபாபதியின் வாசிக்கும் பிள்ளை, சேவற்சண்டை, ஓய்வெடுத்தல், நிலத்தோற்றம் (Landscape) போன்ற சித்திரங்கள், சிறந்த கலைப்படைப்புக்களாக மதிக்கப்படுகின்றன.

**வாசிக்கும் பிள்ளை**



- கலைஞர் கே. கனகசபாபதியினால் படைக்கப்பட்ட 'வாசிக்கும் பிள்ளை' எனும் ஓவியம், கன்வஸ் மீது எண்ணெய் (தைல) வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.
- மரபுரீதியான இயல்புகளுடன் கனவடிவவாதக் கலைப்பாங்கின் செல்வாக்கைப் பெற்று இப்படைப்பு ஆக்கப்பட்டுள்ளது.
- கனவடிவ வாதக் கலைப்பண்புகளின்படி ஓவியத்தின் பின்னணியானது, கோடுகளாலான ஒரு தளமாகக் காட்டப்பட்டுள்ளது.

- ஒன்றுக்கொன்று வேறுபட்ட வடிவங்களும் வெவ்வேறு திசைமுகங் கொண்ட முகங்களும் ஒரு தனி வர்ணப் பின்னணியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- இவ்வோவியத்தில் ஆழமும் முப்பரிமாணத் தன்மையும் கோடுகள் மற்றும் வர்ணந் தீட்டல் நுட்ப முறையில் காட்டப்பட்டுள்ளது.
- ஓவியத்தின் பிரதான உருவை விட, பின்னணியானது கனவடிவவாத கலைச் செல்வாக் குடன் துண்டுகளாக்கப்பட்டுள்ளது.
- ஓவியத்தில் காட்டப்பட்டுள்ள பிள்ளை பெரும்பாலும் பாணி சார்ந்த வடிவங்களைக் கொண்டு காட்டப்பட்டுள்ளது.
- இவ் ஓவியத்தில் பச்சை நிறமே பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு பச்சை நிறப்பேதங்களுடன் கபில நிறமும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- தடிப்பான, ஆழமான கோடுகளும், நிறங்களும், தாளமும் சிறப்பாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதோடு, அதன் மூலம் கருப்பொருளை மேலும் முனைப்பாகவும் உணர்வுபூர்வ மாகவும் காட்ட முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

**சேவற்சண்டை**



- கலைஞர் கே. கனகசபாபதி படைத்த இந்த ஓவியத்தின் கருப்பொருள் ‘சேவற்சண்டை’ ஆகும்.
- இச்சித்திரமானது கன்வஸ் மீது எண்ணெய் (தைல) வர்ணத்தினால் ஆக்கப்பட்டுள்ள கனவடிவ வாதப்பாணியைக் காட்டும் ஒரு படைப்பாகும்.
- சேவல்களைக் காட்டுவதற்காக இருபரிமாண தளவுருவங்களே பயன்படுத்தப்பட்டுள்ள போதிலும் முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுமாறு வர்ணந் தீட்டப்பட்டுள்ளது.
- ஓவியத்தின் உருவங்களைச் சூழவும், பின்னணியிலும் இடப்பட்டுள்ள கோடுகளின் தடிப்பான, ஆழமான தன்மைக்கேற்ப, சேவற்சண்டையின் துரிதமும், சந்தமும் வெளிக்காட்டப் படுகின்றன. அச்சித்திரப் பண்புகள் ஓவியத்தின் வெளிப்பாட்டுத் தன்மையை வலுப் படுத்துவதோடு, மேலும் பொருளுள்ளதாகவும் ஆக்குகின்றன.
- கனவடிவவாத ஓவியப்பாணியின் செல்வாக்குடன் கேத்திரகணித தளவடிவங்கள் பிராணி உருவங்களிலும் பின்னணியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- பிரதானமாக கபிலநிறம் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, அந்நிறத்தின் பேதங்களை வெளிப் படுத்துமாறு இந்த ஓவியத்தில் நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- சித்திர ஊடகத்தில் சேவல்களைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள கோடுகளை யும் தளவுருவங்களையும் ஒத்த கோடுகளும் தளவுருவங்களும் பின்னணியிலும் பயன் படுத்தப்பட்டுள்ளமையால், சித்திரத்தின் முன்னணியும், பின்னணியும் ஒத்திசையச் செய்யப் பட்டுள்ளமையைக் காண முடிகிறது.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :** **தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார்.**

**செயற்பாடு 6.1.5 :** **" கலைஞர் ஏ. மார்க் படைத்த ஆக்கங்களை மதிப்போம்."**

**பாடவேளை :** 1

**கற்றற் பேறுகள்:**

- கலைஞர் ஏ. மார்க் இன் படைப்புகளைப் பெயரிடுவார்.
- கலைஞர் ஏ. மார்க் இன் படைப்பாக்கப் பின்னணியைத் தேடியறிவார்.
- கலைஞர் ஏ. மார்க் இன் படைப்புக்களில் காணப்படும் கலைப்பாணி இயல்புகளை விவரிப்பார்.
- கலைஞர் ஏ. மார்க் இனது படைப்புக்களின் கலைத்துவப் பண்புகளை மதிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- ஏ. மார்க் கலைஞரது படைப்புக்கள்
  - மனிதனும் நாய்களும் (சிற்பம்)
  - சகுந்தலை (ஓவியம்)
- இணைப்பு 6.1.5.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.1.5.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.1.5.1**

- கலைஞர் ஏ. மார்க் இன் படைப்புக்களின் ஒளிப்பிரதிகளை வகுப்பில் காட்சிப்படுத்தி, அவற்றின்பால் மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- அப்படைப்புக்களின் கருப்பொருள், நுட்ப முறைகள், ஓவியர் பெற்ற செல்வாக்கு ஆகியனவற்றை மாணவரிடம் வினவுக.
- சுதேச ஓவியக் கலைஞர்களின் படைப்புக்களை மதிப்பதன் முக்கியத்துவத்தை விவரிக்குக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.5.2**

- இணைப்பு 6.1.5.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.5.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.5.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- ஏ. மார்க் கலைஞரின் படைப்புக்கள் குறித்து மீட்டாய்வு நடத்துக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனஞ் செலுத்தி, இணைப்பு: 6.1.5.1, இணைப்பு: 6.1.5.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- கலைஞர் ஏ. மார்க் இன் படைப்புக்களைப் பெயரிடுதல்.
- கலைஞர் ஏ. மார்க் இன் படைப்புக்களின் கலைப்பாணியைத் தேடியறிதல்.
- கலைஞர் ஏ. மார்க் இன் படைப்பாக்கத் துறையில் புதிய பாணியொன்றினை ஏற்படுத்திய ஓவியக் கலைஞர் ஆவார் எனக் கூறுதல்.
- கலைஞர் ஏ. மார்க் படைப்புக்கள் பெற்ற செல்வாக்குகளை விவரித்தல்.
- கலைஞர் ஏ. மார்க் இனது படைப்புக்களின் கலைத்துவப் பண்புகளை நயந்து மதிப்பிடுதல்.

**இணைப்பு 6.1.5.1:**

## செயற்பாட்டுப் பத்திரம்

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள கலைஞர் ஏ. மார்க் படைத்த படைப்புக்களை கவனமாக அவதானிக்குக.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்க.
- பின்வரும் விடயங்களின் கீழ், ஏ. மார்க் கலைஞரின் படைப்புக்களை மதிப்பீடு செய்க.
  - (i) கருப்பொருள்
  - (ii) கலைப்பாணி
  - (iii) செல்வாக்கு
  - (iv) நுட்பமுறை
  - (v) கலைத்துவப் பண்புகள்
    - உருவப் / தளவடிவப் பயன்பாடு
    - வர்ணப் பயன்பாடு
    - தளப் பயன்பாடு / வெளிப் பயன்பாடு
    - உணர்வு / பாவ வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்க.

**இணைப்பு 6.1.5.2:**

## வாசிப்புப் பத்திரம்

### ஏ. மார்க் (1933-2000)

- இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நவீன கட்புலக் கலைகளின் முன்னோடியாகச் செயற்பட்ட ஒரு கலைஞராக ஏ. மார்க் முக்கியத்துவம் பெறுகின்றார்.
- 1933 இல் யாழ்ப்பாணம், குருநகரில் பிறந்து 2000 இல் உயிர்நீத்த ஏ. மார்க் ஓவியக் கலையிலும், சிற்பக் கலையிலும் திறமை காட்டிய ஒரு கலைஞராவார்.
- கொழும்பு அரச கலைக் கல்லூரியில் ஓவியக் கலைத்துறையில் உயர்கல்வி பெற்றார்.
- யாழ்ப்பாணத்தில் ''விடுமுறைக்கால ஓவியக் கழகம்'' எனும் பெயரில் ஒரு சங்கத்தைத் தாபித்து சித்திர வகுப்புக்களை நடத்தியதோடு, சித்திரக் காட்சிகளையும் நடத்தினார்.

- அவரது ஓவியப் படைப்புக்களின் இயல்புகளுக்கமைய அவற்றைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்.
  (1) நிறங்களை அடிப்படையாகக் கொண்ட காலம்
  (2) கோடுகளை அடிப்படையாகக் கொண்ட காலம்
- நிறங்களை அடிப்படையாகக் கொண்ட காலத்தில் இருட்காலம், வெண்காலம், நீலக் காலம் (Dull Period, White Period, Blue Period) எனும் வெவ்வேறு காலங்கள் காணப் பட்டன.
- கோடுகளை அடிப்படையாகக் கொண்ட காலம், கனவடிவவாதக் காலம் எனப்படுகிறது.
- பஸ்ரல் வர்ணம், ஒட்டுச்சித்திரம், கலப்புச்சாதனம், நீர் வர்ணம் என்பனவற்றைப் பயன் படுத்தி பொதுவாக, கடதாசியின் மேல் இவர் ஓவியங்களை வரைந்துள்ளார்.
- அவரது ஓவியப் படைப்புக்களுள்,
  - சகுந்தலை
  - தாண்டவம்
  - காவடியாட்டம்
  - ராகமாலிகை ஆகிய படைப்புக்கள் சிறப்பானவையாகும்.
- இவரது சிற்பப் படைப்புக்களில் கனவடிவவாதப் பண்புகளுக்கு மேலதிகமாக ஹென்ரி மூரினது தளவடிவங்களின் செல்வாக்கையும் காண முடிகின்றது. அச்செல்வாக்குகளுடன் தமக்கே உரிய நவீன பாணியில் நவீன உத்திகளைக் கையாண்டு தமது ஆக்கங்களைப் படைத்துள்ளார்.

**சகுந்தலை (ஓவியம்)**



- கலைஞர் ஏ. மார்க் படைத்த ஓவியங்களுள் சிறப்பிடம் பெறுவது ‘‘சகுந்தலை’’ எனும் ஓவியமாகும்.
- காளிதாசரினால் புனையப்பட்ட சாகுந்தலம் காவியத்தில் பிரதான பாத்திரமாகிய சகுந்தலை இந்த ஓவியத்தின் கருப்பொருளாகக் கொள்ளப்பட்டுள்ளது.

- பஸ்ரல் ஊடகத்தைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ள இப்படைப்பு இயல்பான தன்மையை விஞ்சிச் சென்று, மோடிப்படுத்தல் (Abstract) சார்ந்த கலைத்துவப் பண்புகளைக் காட்டி நிற்கின்றது.
- கனவடிவவாதப் பாணியின் இயல்புகள் இப்படைப்பின் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளது.
- கனவடிவவாத தளவுருவங்களும் இளநிறங்களும் இப்படைப்பாக்கத்துக்கு இருபரிமாண இயல்புகளைக் கொடுத்த போதிலும், உருவத்தைச் சூழ இடப்பட்டுள்ள தடித்த கோடுகள் காரணமாக முப்பரிமாண இயல்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- சித்திரத்தின் பின்னணிக்காக இடப்பட்டுள்ள வர்ணம் தளம் முழுவதிலும் பரம்பியுள்ளவாறு நீட்டப்பட்டுள்ளது.
- படைப்புக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒட்டுமொத்த நிறம், தளவுருவங்கள், கோடுகள் ஆகியன மூலம் சகுந்தலையின் உள்ளார்ந்த உணர்வு வெளிப்பாடுகளைக் காட்டுவதில் கலைஞர் எடுத்துள்ள முயற்சி பாராட்டத்தக்கதாகும்.

**மனிதனும் நாய்களும் (சிற்பம்)**



∴

- கலைஞர் ஏ. மார்க் படைத்துள்ள இச்சிற்பம் புதியதொரு நுட்ப முறையைக் கையாண்டு படைக்கப்பட்டுள்ளது.
- முன்னங்கால்களை உயர்த்திப் பின்னங்கால்களில் நிற்கும் நிலையில் உள்ள இரண்டு நாய்களுடன் இருக்கும் மனித உரு இந்த ஆக்கத்தில் காட்டப்பட்டுள்ளது.
- நாய்களின் உருவங்களை விடச் சிறியதாக மனிதனின் உருவம் காட்டப்பட்டுள்ளது.
- கலைஞர் ஏ. மார்க் அவருக்கே உரிய பாணியில் இச்சிற்பத்தைப் படைத்துள்ளார்.

- நவீன கலைப் பிரயோகங்களைக் கொண்ட இக்கலைப்படைப்பு மீது கனவடிவவாதக் கலைப் பண்புகளும் கலைஞர் ஹென்ரி மூரினது கலைப் படைப்புக்களின் இயல்புகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.
- இப்படைப்புக்காக சூழலில் கிடந்து பொறுக்கியெடுத்த பொருள்கள் (Found Object) அதாவது பிளாத்திக்குப் போத்தல்கள், பிளாத்திக்குக் குழாய்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.
- நீளமான, கோறையுடைய பிளாத்திக்குப் போத்தல்களால் உருவங்கள் சந்தத்துக்கு இசைவாகவும் சமனிலையாகவும் வெளியில் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் வெளித் துருத்திய மற்றும் உட்குழிந்த பகுதிகளுடன் இப்படைப்பு ஆக்கப்பட்டுள்ளது.
- விவரமான தன்மை குறைவான, எளிய வடிவங்களைக் கொண்ட எளிமையான வெளிப்பாடானது இக்கலைப் படைப்பின் முக்கிய பண்பாகும்.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார்.**

**செயற்பாடு 6.1.6 : “ கலைஞர் திஸ்ஸ ரணசிங்ஹவின் படைப்புக்களை மதிப்போம்.”**

**பாடவேளை** : 1

**கற்றற் பேறுகள்:**

- கலைஞர் திஸ்ஸ ரணசிங்ஹவின் கலைப் படைப்புகளைப் பெயரிடுவார்.
- கலைஞர் திஸ்ஸ ரணசிங்ஹவின் சிற்பங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- புடைப்புச் சிற்பக்கலையில் புதிய போக்குகளைக் காட்டி நிற்கும் படைப்புக்கள் பற்றித் தேடியறிவார்.
- புதிய ஆக்கப் பாணிக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஊடகம், சிற்ப அடிப்படை அம்சங்கள், நுட்பமுறைகளை விவரிப்பார்.
- கலைஞர் திஸ்ஸ ரணசிங்ஹவின் படைப்புக்களின் கலைப்பண்புகளை மதிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கலைஞர் திஸ்ஸ ரணசிங்ஹவின் சிற்பக் கலைப்படைப்புக்கள்
  - கடினச் செயல் - சிற்பம்
  - கொழும்பு, றோயல் கல்லூரி, “நவரங்கஹல” மண்டப குறைபுடைப்புச் செதுக்கு வேலைப்பாடு.
- இணைப்பு 6.1.6.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.1.6.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.1.6.1**

- பொருத்தமான ஒரு முறையைக் கையாண்டு திஸ்ஸ ரணசிங்ஹ கலைஞரின் படைப்புக் களின்பால் மாணவரது கவனத்தைத் திருப்புக.
- அவரது படைப்புக்களின் ஒளிப்படங்களைத் திரட்டுமாறு மாணவர்க்கு ஆர்வமூட்டுக.
- அப்படைப்புக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள ஊடகம், சிற்பக்கலை அடிப்படைகள், நுட்ப முறைகள் தொடர்பாக மாணவரிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.6.2**

- இணைப்பு 6.1.6.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.6.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.

- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- விடையளிப்பதற்காக மாணவர்க்குத் துணைபுரிக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.6.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- திஸ்ஸ ரணசிங்ஹ கலைஞரின் கலைப் படைப்புக்கள் பற்றி மீட்டாய்வு நடத்துக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனஞ் செலுத்தி, இணைப்பு: 6.1.6.1, இணைப்பு: 6.1.6.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- சிற்பக் கலையில் புதியதொரு பாணியையும் போக்கையும் தோற்றுவிப்பதில் முன்னோடியாகச் செயற்பட்ட திஸ்ஸ ரணசிங்ஹ கலைஞரின் படைப்புக்கள் பற்றித் தேடியறிதல்.
- திஸ்ஸ ரணசிங்ஹ கலைஞரின் படைப்புக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சிற்பக்கலைக் கோட்பாடு இயல்புகளை விவரித்தல்.
- திஸ்ஸ ரணசிங்ஹ கலைஞரின் ஆக்கபூர்வமான கருப்பொருள்கள் தொடர்பாக விவரித்தல்.
- திஸ்ஸ ரணசிங்ஹ கலைஞரது படைப்புக்களில் கலைத்துவப் பண்புகளை மதிப்பிடுதல்.

**இணைப்பு 6.1.6.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள கலைஞர் திஸ்ஸ ரணசிங்ஹவின் படைப்புக்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
- கலைஞர் திஸ்ஸ ரணசிங்ஹவின் படைப்புக்களில் காணப்படும் சிறப்பியல்புகளை இனங் கண்டு கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
  - (1) கலைஞர் திஸ்ஸ ரணசிங்ஹ பற்றிய சுருக்கக் குறிப்பு எழுதுக.
  - (2) அவரது பிரபல்யப் படைப்புக்களையும், அவை காணப்படும் இடங்களையும் பெயரிடுக.
  - (3) அவ்வொவ்வொரு படைப்பையும் பின்வரும் விடயங்களின் கீழ் மதிப்பீடு செய்க.
    - (i) கருப்பொருள்
    - (ii) கலைப்பாணி
    - (iii) செல்வாக்கு
    - (iv) ஊடகம்
    - (v) நுட்பமுறை
    - (vi) கலைத்துவப் பண்புகள்
      - ஒழுங்கமைப்பின் இயல்பு
      - லயம், புறஇயல்பு
      - உணர்வு / பாவ வெளிப்பாடும் முழுமையான வெளிப்பாடும்
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 6.1.6.2:**

## வாசிப்புப் பத்திரம்

### திஸ்ஸ ரணசிங்ஹ (1925)

- இருபதாம் நூற்றாண்டில் இலங்கை சிற்பக் கலையில் புதியதொரு மரபைத் தோற்றுவிப்ப தில் முன்னின்ற ஒரு சிறந்த கலைஞராக திஸ்ஸ ரணசிங்ஹ இனங்காணப்பட்டுள்ளார்.
- உள்நாட்டிலும், சருவதேச ரீதியிலும் புகழ் பரப்பியுள்ள திஸ்ஸ ரணசிங்ஹ, 1925 இல் நீர்கொழும்பு நகரையண்டிய யோகியானா எனும் கிராமத்தில் பிறந்தார்.
- மருதானைத் தொழினுட்பக் கல்லூரியில், ஜே டீ. ஏ. பெரேரா இன் கீழ்ச் சித்திரக் கலை பயின்ற அவர் இங்கிலாந்து சென்று செல்சியா கலைக் கல்லூரியிலும் (Chelsea School of Art), 1961 இல் றோயல் கலைக் கல்லூரியிலும் (Royal College of Art) சிற்பக் கலையைப் பயின்றார்.
- அக்கலைக் கல்லூரிகளில் பெற்ற கல்வி மற்றும் ஐரோப்பாவின் புதிய கலைப் படைப்புக் களின் செல்வாக்கினூடு திஸ்ஸ ரணசிங்ஹ தமக்கேயுரித்தான சிற்பக் கலைப் பாணியொன்றினை உருவாக்கிக் கொண்டார்.
- சிற்பக் கலைப் படைப்புக்களில் பொதுவாகக் காணப்படும் இயற்கையாக, இயல்பான வடிவங்களை விட வேறுபட்ட கருத்துநிலையான உருவங்களின் சேர்மானத்தாலான உருவங்களே அவரது படைப்புக்களுக்கு அடிப்படையாக அமைந்தன.
- இலங்கைச் சிற்பக் கலையின் பாரம்பரியமாக ஊடகங்களை மாற்றியமைத்து, வெண்கல ஊடகத்தையும் வார்ப்பு முறையையும் அறிமுகஞ் செய்தார்.
- இலங்கைக் கலைஞர் ஒருவர் பெற்ற மிக உயர்வான சருவதேச விருது, 1963 இல் பிறேசில் நாட்டில் நடைபெற்ற ‘சாவோபோலோ’ கண்காட்சிக்காக முன்வைத்த “குற்றப் பரிகாரம்” (Penance) எனும் உலோகத்தாலாக்கப்பட்ட சிற்பத்துக்குக் கிடைத்தது.
- திஸ்ஸ ரணசிங்ஹ கலைஞன் படைப்புக்களுள் அடிப்படையாக அமைந்த கருப் பொருள்கள் பின்வரும் வெவ்வேறு பரப்புகளைச் சேர்ந்தவையாகும்.
  - பிரமுகர்களின் பிரதிமைச் சிற்பங்கள் - பரணவித்தான சிற்பம்
  - சமய எண்ணக்கருக்களைக் காட்டும் சிற்பங்கள் (பௌத்த, இந்து)
    - கடினச் செயலைக் காட்டும் சிற்பம், குற்றப்பரிகாரம், கணேஷ சிற்பம்
  - வரலாற்றைக் காட்டும் படைப்புக்கள்
    - கொழும்பு றோயல் கல்லூரி ‘நவரங்கஹல’ மண்டபத்தின் குறைபுடைப்புச் செதுக்கல் வேலைப்பாடு.
- இலங்கைச் சிற்பக் கலையில் நவீன அணுகுமுறையில் திஸ்ஸ ரணசிங்ஹ தாபித்த சிற்பக் கலைப்பாணியானது தற்கால சிற்பக் கலைஞரின் படைப்பாக்கங்கள் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளமையைக் காண முடிகிறது.

## கடினச் செயல் (துஷ்கர கிரியா)



- கடினச் செயல் எனும் இச்சிற்பம் திஸ்ஸ ரணசிங்ஹ கலைஞரது மிகச் சிறந்த ஒரு படைப்பாகப் போற்றப்படுகின்றது.
- சித்தார்த்த போதிசத்துவரின் கடினச் செயலைக் காட்டும் இச்சிற்பத்தின் மூலம் அக் கருத்தைக் காட்டுவதற்காக, கரைந்து தேய்ந்து போன சதைப்பகுதிகளைக் கொண்ட உடலின் எலும்புத்தொகுதி நன்கு உருவாக்கப்பட்டுள்ளது.
- இயற்கையான மனித உருவத்தின் அக, புற கட்டமைப்பை விட மேலாக உள்ளுணர்வு களைக் காட்டத்தக்கவாறான யதார்த்த பாணியிலான வடிவமைப்புக்கள் இச்சிற்பத்தில் அடங்கியுள்ளன.
- இயற்கைவாத கலைப்பிரயோகம் இக்கலைப் படைப்பில் பயன்படுத்தப்படவில்லை.
- இக்கலைப் படைப்பு மீது கருத்துநிலை / அருவ கலைப் பண்புகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளமைக் காண முடிகின்றது.
- இவ்வடிவங்கள் குறைகருத்து நிலையான (Semi-ABSTRACT) மற்றும் குறைவெளிப்பாட்டு வடிவங்களின் சேர்மானத்தினாலானவை என்பது கலை விமர்சகர்களின் கருத்தாகும்.
- நவீன கலைப் பிரயோகங்களைக் காட்டும் இச்சிற்பப் படைப்பு வெண்கல ஊடகத்தில் வடிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு றோயல் கல்லூரி - குறை புடைப்புப் படைப்பாக்கம்



- கொழும்பு றோயல் கல்லூரி 'நவரங்கஹல' மண்டபத்தில் உள்ள இப்படைப்பு, புடைப்புச் சிற்பக் கலையில் புதுப்பரிமாணத்தை ஏற்படுத்திய ஒரு படைப்பாகும்.
- ரெறாகொட்டா முறையில் உருவாக்கப்பட்டுள்ள இப்படைப்பின் கருப்பொருள் 'இலங்கையில் நாடகக் கலையின் வரலாறு' ஆகும்.
- நாடகக் கலை வரலாற்றின் நான்கு கட்டங்கள் இங்கு சேர்மானஞ் செய்யப்பட்டுள்ளது.
- கனவுருக் கலைத்துவப் பண்புகள் இப்படைப்பின் மீது செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது விமர்சகர்களின் கருத்தாகும்.
- கருத்து நிலையான கனவுருவவாத தளவடிவங்களோடு, பாணி சார்ந்த தளவடிவங்களும் இப்படைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த ரெறாகொட்டா படைப்புக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள நிறங்கள் படைப்பின் அழகையும் கருத்து வெளிப்பாட்டுத் திறனையும் கனவுருவவாத முனைப்புறுத்தியுள்ளது.

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.1 :** **தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார்.**

**செயற்பாடு 6.1.7 :** **" கலைஞர் எச். ஏ. கருணாரத்னவின் படைப்புக்களை மதிப்போம்."**

**பாடவேளை :** 1

**கற்றற் பேறுகள்:**
- கலைஞர் எச். ஏ. கருணாரத்னவின் நிர்மாணிப்புக்களைக் குறிப்பிடுவார்.
- கலைஞர் எச். ஏ. கருணாரத்னவின் கலைப்படைப்புக்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- சித்திரக்கலையின் புத்துணர்ச்சியை ஏற்படுத்திய நிர்மாணங்களைக் கற்றறிவார்.
- புதிய ஆக்கபூர்வமான நிர்மாணத்துக்கான ஊடகப் பயன்பாடு, அடிப்படை நுட்ப முறைகள் என்பனவற்றை விபரித்துக் கூறுவார்.
- கலைஞர் எச். ஏ. கருணாரத்னவின் நிர்மாணிப்புக்களில் காணப்படும் கலைப் பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- கலைஞர் எச். ஏ. கருணாரத்னவின் நிர்மாணங்கள்
  - சந்தபாயா (சந்திரன் உதயம்)
  - பெயர் இடப்படாத (Untitled)
- இணைப்பு 6.1.7.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.1.7.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.1.7.1**
- பொருத்தமான ஒரு முறையைக் கையாண்டு கலைஞர் எச். ஏ. கருணாரத்னவின் நிர்மாணிப்புகளை அவதானிக்கச் செய்க.
- அவரது ஓவியங்களை சேகரிக்கும்படி மாணவர்களைப் பணிக்க.
- அந்நிர்மாணங்களை செய்ய உபயோகித்த ஊடகங்கள், மூல அங்கங்கள், நுட்பமுறை களை மாணவர்களிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.7.2**
- இணைப்பு 6.1.7.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.7.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.
- விடையளிப்பதற்காக மாணவர்க்குத் துணைபுரிக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.7.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- கலைஞர் எச். ஏ. கருணாரத்னவின் நிர்மாணிப்புகள் பற்றிய தகவல்களை மீளாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்கள் குறித்துக் கவனஞ் செலுத்தி, இணைப்பு: 6.1.7.1, இணைப்பு: 6.1.7.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- கலைப்பாணியுடன் புத்துணர்ச்சியை உருவாக்க முன்னின்று உழைத்த கலைஞன் எச். ஏ. கருணாரத்னவின் நிர்மாணிப்புகளை ஆராய்ந்தறிதல்.
- எச். ஏ. கருணாரத்னவின் நிர்மாணிப்புகளில் உபயோகித்துள்ள ஊடகம், சிற்பக்கலை கோட்பாடுகளின் பண்புகள் என்பவற்றை விபரித்துக் கூறல்.
- அவரது நிர்மாணிப்புகளின் தொனிப்பொருள்களை விபரித்துக் கூறல்.
- கலைஞர் எச். ஏ. கருணாரத்னவின் நிர்மாணிப்புகளில் உள்ள கலைப் பண்புகளை மதிப்பிடல்.

**இணைப்பு 6.1.7.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள எச். ஏ. கருணாரத்ன கலைஞரின் நிர்மாணிப்புக்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள்.
- எச். ஏ. கருணாரத்ன கலைஞரின் நிர்மாணிப்புக்களில் காணப்படும் சிறப்பியல்புகளை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
  - (1) எச். ஏ. கருணாரத்ன கலைஞர் பற்றிய சுருக்கக் குறிப்பு எழுதுங்கள்.
  - (2) அவரது பிரபல்யமான படைப்புக்களையும், அவை காணப்படும் இடங்களையும் பெயரிடுக.
  - (3) அவ்வொவ்வொரு நிர்மாணிப்பையும் பின்வரும் விடயங்களின் கீழ் மதிப்பீடு செய்க.
    - (i) கருப்பொருள்
    - (ii) கலைப்பாணி
    - (iii) செல்வாக்கு
    - (iv) நுட்பமுறை
    - (v) கலைத்துவப் பண்புகள்
      - உருவங்கள் / தளவடிவங்களின் பயன்பாடு
      - வெளிப்பயன்பாடு / தளப்பயன்பாடு
      - உணர்வு / பாவ வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.


**இணைப்பு 6.1.7.2:**

## வாசிப்புப் பத்திரம்

### எச். ஏ. கருணாரத்ன (1929)

- இலங்கைச் ஓவியக் கலையில் புதிய மரபை உருவாக்குவதில் முன்னோடியாகச் செயற்பட்ட ஒரு தலைசிறந்த ஓவியக்கலைஞராக எச். ஏ. கருணாரத்ன இனங்காணப் படுகிறார்.
- உள்நாட்டிலும், சருவதேச ரீதியிலும் புகழ் பரப்பியுள்ள எச். ஏ. கருணாரத்ன, 1929 இல் களுத்துறைப் பிரதேச பண்டாரகமைக் கிராமத்தில் பிறந்தார்.
- 1952 இல் அரச நுண்கலைக் கல்லூரியில் சித்திரக் கலையைப் பயின்ற எச். ஏ. கருணாரத்ன, பிற்காலத்தில் அக்கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி உள்ளார்.
- அவரது படைப்பாக்கங்களில் அவர் யப்பானிலும், அமெரிக்காவிலும் பெற்ற சித்திரக் கலைக் கல்வி பெரிதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளது.
- இலங்கையில் தற்காலக் கலைகளின் வெளிப்பாட்டு ஒழுங்கமைப்புக்குப் பதிலாக அமெரிக்க ஓவியக் கலைப் போக்குக்களில் ஒன்றான அரூப கலை (Abstract) கருத்து நிலை சித்திரக் கலைப்பாணிக்கு அமைவாக புதிய சித்திரப் பாஷையை உருவாக்கிய கலைஞர் ஆவார்.
- அவரது படைப்பாக்கக் கலைப்பாணியில், மையநிலை, ஒழுங்கமைப்பு கிடையாது. தளம் முழுதும் வடிவமைப்புக்கள் சிதறி அமைக்கும் ஒழுங்கமைப்பைக் கொண்டது.
- எச். ஏ. கருணாரத்ன கலைஞர் பெரும்பாலும் தமது படைப்புக்களுக்காக கருப்பொருட் களெதையும் வழங்குவதில்லை. மேலும் படைப்புக்கள் மூலம் எதனையும் தெளிவாகக் கூறுவதோ, கூறாமலிருப்பதோ இல்லை.
- எனவே அவரது படைப்புக்கள் மறைந்த நிலைக்குட்பட்டு பார்ப்போரின் சிந்தனைக்கு இடமளித்துள்ளார்.
- தொடக்கத்தில் அவரது படைப்புக்கள் எண்ணெய் (தைல) வர்ண கன்வஸ் படைப்புக் களாயினும் அவரது பிற்காலப்பட்ட படைப்புக்கள் மூலம் ஒன்றுக்கொன்று வேறுபட்ட வெவ்வேறு பொருள்கள் இருபரிமாணத் தளத்தில் காட்டப்படுவதைக் காணலாம்.
- ஆணிகள், காட்போட், நூல், துணித்துண்டுகள் போன்ற பல்வகைப் பொருட்களைப் படைப்பாக்க ஊடகமாகப் பயன்படுத்தி உள்ளதுடன், அவற்றின் ஊடாக எதிர்மாறான மேற்பரப்பு இயல்பை (texture) பல்வேறு இரசனையில் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.
- அவர் படைத்த ஓவியங்களுள்,
    - சந்திர காந்தக்கல்
    - மலர் மணம்
    - வெண்முகில்
    - சந்திரோதயம்
    - ஒரு மலரின் மணம்
    - அறுவடை
    - சந்திரோதயம்

**சந்திரோதயம்**



- எச். ஏ. கருணாரத்ன அவர்களால் 1980 களில் ஆக்கப்பட்ட ஒரு படைப்பாக "சந்திரோதயம்" காணப்படுகிறது.
- எண்ணெய் (தைல) வர்ண ஊடக, கன்வசு ஓவியமான இது அவரது ஆரம்ப காலப் படைப்புகளுள் ஒன்றாகும்.
- இந்த ஓவியத்தின் மத்தியில் ஒழுங்கமைப்பு காட்டப்படாததுடன், தளம் முழுவதும் வடிவங்களைப் பரப்பி ஒழுங்கமைப்பை வெளிப்படுத்தியுள்ளார்.
- அரூப நிலையான (Abstract) வெளிப்பாட்டுக் கலைப்பாணி இயல்புகள் அவரது இந்தப் படைப்புக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது.
- இயற்கையின் திட்டவட்டமான ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திர வெளிப்பாட்டுக்கான கருப் பொருளாகக் கொள்வதை இது காட்டுகின்றது.
- இக்கலைப்பாணியின்படி வர்ண இரேகைகள், தள வடிவங்கள் ஆகியவற்றின் ஒழுங்கமைவு வழியே 'சந்திரோதயம்' எனும் கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது.
- வானத்தில் உதித்த சந்திரன், அச்சந்திர ஒளி விழுந்த தளங்களின் அழகு என்பன இப்படைப்பின் வர்ணம், இரேகைகள், தள வடிவங்கள் மூலம் காட்டப்பட்டுள்ளது.
- இந்த ஆக்கத்தில் சமய உணர்வுடன் கூடிய சாந்தமான ரசனையை உருவாக்குகின்றதாக விமர்சகர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

## பெயரிடாத ஆக்கம் (Untitled)



- எச். ஏ. கருணாரத்ன (2008) அவர்களால் ஆக்கப்பட்ட இப்படைப்பு ஒரு 'பெயரிடாத' ஆக்கமாகும்.
- இது சிலையின் இயல்பைக் கொண்ட, ஒருங்குசேர்ப்பு நுட்ப முறையில் நிர்மாணிக்கப் பட்ட படைப்பாகும்.
- அதற்காக உலோகத்தகடுகள், கம்பி, ஆணி போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- கரடான, சொரசொரப்பான மூலப்பொருள்களைப் பயன்படுத்தி இருத்தல் இப்படைப்பின் விசேட தன்மையாகும்.
- அவரது படைப்பாக்க கருத்துநிலை, கலைப்பாணி (Abstract) இயல்புகளை இப்படைப்பில் காணலாம்.
- கலைஞரினால் இப்படைப்புக்காக, விவரங்கள் குறைவான, யோக நிலையைக் காட்டு கின்ற, அடிப்படைப் பண்புகளைக் கொண்ட, வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- எளிமையான, குறியீட்டு ரீதியான தன்மை வெளிக்காட்டப்பட்டுள்ள ஒரு படைப்பாகும்.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.2 : சுதேசிய அச்சு ஊடகங்கள் சார்ந்த கலை அம்சங்களை நயப்பார்.**

**செயற்பாடு 6.2.1 : " செய்தித்தாள் காட்டூன் கலைஞர்களின் நிர்மாணிப்புகளை மதிப்பிடுவோம்."**

**பாடவேளை** : 1

**கற்றற் பேறுகள்:**

- காட்டூன் கலைஞர்களின் நிர்மாணிப்புகளை ஆராய்ந்தறிவார்.
- ஒவ்வொரு கலைஞரினதும் தனித்துவமான கலைப்பாணியை விபரித்துக் கூறுவார்.
- காட்டூன் ஓவியங்களுக்குக் காரணமான நிகழ்ச்சிகள், காட்சிகளின் தன்மை என்பன பற்றி ஆராய்வார்.
- காட்டூன் கலைஞர்களின் நிர்மாணிப்புகளில் உள்ள கலைப்பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- செய்தித்தாள் காட்டூன் கலைஞர்களின் படைப்புகள் (படங்கள்)
  - யூனுஸ்
  - ஒப்ரி கொலற்
  - கெமிலஸ் பெரேரா
  - டப்ளியூ. விஜேசோம
  - சி. சிவஞானசுந்தரம்
- இணைப்பு 6.2.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.2.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.2.1.1**

- செய்தித்தாள் காட்டூன் கலைஞர்களின் நிர்மாணிப்புகளை அவதானிக்கச் செய்க.
- அக்காட்டூன் கலைஞர்களின் நிர்மாணிப்புகளில் காணப்படும் சிறப்பான கலைப்பண்புகளை ஆராய்ந்தறியச் செய்க.
- செய்தித்தாள் காட்டூன் கலைஞர்களுடைய நிர்மாணிப்புகளின் தொனிப்பொருள், கலைப் பாணி என்பவை பற்றி மாணவர்களிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.1.2**

- இணைப்பு 6.2.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.2.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.1.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- காட்டுன் கலைஞர்களுடைய நிர்மாணிப்புகள் பற்றி மீளாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை கவனம் செலுத்தி இணைப்பு 6.2.1.1, இணைப்பு 6.2.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- தேசிய செய்தித்தாள் காட்டுன் சித்திரக் கலையின் புத்துணர்ச்சியை ஏற்படுத்த முன்னோடியாக இருந்த காட்டுன் ஓவியக் கலைஞர்களைக் குறிப்பிடுதல்.
- அக்கலைஞர்களின் நிர்மாணிப்புகளை விபரித்துக் கூறல்.
- தெரிவு செய்யப்பட்ட நிர்மாணிப்புகள் சிலவற்றின் கலைப்பண்புகளை ஆராய்ந்தறிதல்.
- காட்டுன் ஓவியக் கலைஞருக்கு முதன்மையாக அமைந்த விடயப்பொருள் நிகழ்ச்சி என்பவற்றை விபரித்துக் கூறல்.

**இணைப்பு 6.2.1.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள செய்தித்தாள் கருத்துப்பட (காட்டுன்) ஓவியக் கலைஞர் களின் படைப்புகளை நன்கு அவதானித்து இரசிக்குக.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்க.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுக.
  - (1) கருத்துப்பட (காட்டுன்) ஓவியக் கலை பற்றி சுருக்கமாக விளக்குக.
  - (2) கீழே உள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| கலைஞர் | கருத்துப்படப் படைப்பு பாத்திரம் | விசேட இயல்புகள் |
|---|---|---|
| ஒப்ரி கொலற்<br>ஜி.ஃ.பரி யூனுஸ்<br>விஜேசோம<br>கெமிலஸ் பெரேரா<br>சி. சிவஞானசுந்தரம் | | |

- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 6.2.1.2:**

**வாசிப்புப் பத்திரம்**

- செய்தித்தாள்களை மையமாகக் கொண்டு உருவாகிய சிறப்பான ஒரு படைப்பாக்கக் கலையே கருத்துப்படச் (காட்டுன்) சித்திரக் கலையாகும் (cartoon).
- செய்தித்தாள்களில் கருத்துப்படச் (காட்டுன்) சித்திரத்திற்கு சிறப்பான இடம் காணப்படு கிறது. சிலபோது செய்தித்தாள்களில், ஆசிரியர் தலையங்கத்தை விடவும் கூடுதலான முக்கியத்துவம் கருத்துப் (காட்டுன்) படத்துக்கு வழங்கப்படுவதுண்டு.
- பெருமளவு சொற்களைப் பயன்படுத்திக் கூறவேண்டிய பல கருத்துக்கள் கருத்துப் (காட்டுன்) படமொன்றின் மூலம் இலகுவாக வெளிப்படுத்தப்படும்.

- நடப்புச் சமூகத்தின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு குறைபாடுகளை விகட உணர்வுடன் விவரணப்படுத்துவதே கருத்துப் (காட்டூன்) படத்தின் குறிக்கோளாகும்.
- எவரும் கிரகிக்கத்தக்கதாக இருத்தல் என்பது கருத்துப் படங்களின் சிறப்பியல்பாகும்.
- கருத்துப் படங்களின் வெற்றியும் கவர்ச்சியும், அதில் கலந்துள்ள விகடத் தன்மையின் வலிமையிலேயே தங்கியிருக்கும்.
- உருவங்களின் செயற்பாடு விகடத்தன்மை என்பன வெளிப்பாட்டின் மீது பங்களிக்கும் அம்சங்களாகும்.
- சமூக, அரசியல் நிலைமையை விவரணப்படுத்தும்போது அதற்காகக் குறித்த தனியாள் களின் நடத்தைக் கூறுகளை, கருத்துப் (காட்டூன்) படங்கள் மூலம் மிகச் சிறப்பாக வெளிக் காட்டலாம்.
- சம்பவங்களை எடுத்துக்காட்டுவதற்காக மொழியைப் பயன்படுத்தும் விதமும் வேறுபட்ட தாகும்.
- இலங்கைக் கருத்துப் (காட்டூன்) படப் படைப்பாக்கத்துறையின் முன்னோடிக் கலைஞர் களுள்,
  - ஓப்ரி கொலற்
  - யூனூஸ்
  - விஜேசோம
  - கமிலஸ்
  - சி. சிவஞானசுந்தரம்

  ஆகியோர் குறிப்பிடத்தக்க சிலராவர்.

## ஓப்ரி கொலற் (1920 - 1992)

- இலங்கைச் செய்தித்தாள் கருத்துப் (காட்டூன்) படக் கலையின் முன்னோடியாக ஓப்ரி கொலற் கருதப்படுகின்றார்.
- சமூக, பொருளாதார துறைகளை விகடத்துக்கு உள்ளாக்கும் வகையில் கருத்துப் (கார்டூன்) படங்கள் படைத்த கலைஞர் இவர் ஆவார்.
- ஓப்ரி கொலற் முதன்முதலாக 1945 இல் த ரைம்ஸ் ஒப் சிலோன் (The Times of Ceylon) எனும் செய்தித்தாளுக்கு கருத்துப் (காட்டூன்) படம் வரைந்துள்ளார்.
- ஓப்ரி கொலற் 43 குழுவைச் சேர்ந்த ஒரு கலைஞர் ஆவார்.
- அவர் வரைந்த 43 ஆம் குழுவின் உறுப்பினர்களைக் காட்டும் கருத்துப் (காட்டூன்) படம் மிகச் சிறந்த ஒரு படைப்பாகக் கருதப்படுகின்றது.





## ஜி:.ப்ரி யூனூஸ் (1932 - 2003)

- கலைஞர் ஓப்ரி கொலற் வழிகாட்டலுடன், அரசியல் கருத்துப் படக் கலைத்துறைக்கு வந்த காத்திரமான ஒரு காட்டூன் படக் கலைஞராக யூனூஸ் விளங்குகிறார்.
- தொடக்கத்தில் அத்த (ඇත්ත) எனும் சிங்களச் செய்தித்தாளில் பணியாற்றிய அவர் பிற்காலத்தில் ராவய (රාවය) எனும் சிங்கள மொழிச் செய்தித்தாளில் பணியாற்றினார்.
- அவரால் படைக்கப்பட்ட சுவாரசியமான காட்டூன் படப் பாத்திரம் ‘அப்புஹாமி’ (අප්පුහාමි) ஆகும்.






## டபிள்யூ. ஆர். விஜேசோம (1925 - 2006)


- 1930 களின் ஆரம்பத்திலிருந்து காட்டூன் படக் கலைத்துறையில் பிரபல்யம் பெற்ற ஒரு கலைஞர் விஜேசோம ஆவார்.
- 1950 ஆம் தசாப்தத்தில் ‘த ரைம்ஸ் ஒப் சிலோன்’ (The Times of Ceylon) எனும் செய்தித்தாளில் காட்டூன் படங்களை வெளியிட்டு புகழ் பெற்றிருந்தார்.
- அவர் ‘‘புஞ்சி சிஞ்ஞோ’’ (පුංචි සිංඤෝ) எனும் பெயரில் படைத்த காட்டூன் படங்கள் பொதுமக்களிடையே பிரபல்யம் பெற்றிருந்தன.
- தேசிய உடை தரித்தவராக தொடக்கத்தில் படைக்கப்பட்ட ‘புஞ்சி சிஞ்ஞோ’ பாத்திரம் படிப்படியாக உடல் மெலிந்து முள்ளுந் தோலுமாகி கந்தல் உடை அணிந்து இறுதியில் இன்றைய வாழ்க்கை நிலையை நினைவூட்டுவதாக உள்ளது.






## கமிலஸ் பெரேரா (1939)


- இவர் சமகால காட்டுன் படக் கலைஞர்களுள் ஜனரஞ்சகமான ஒரு கலைஞராவார்.
- இவர் படைத்த ஜனரஞ்சகமான பல கருத்துப்படப் பாத்திரங்கள் உள்ளன.
- அவற்றுள் 'கஜமேன்' (ගජමෑන් ) பாத்திரம் மிகப் பிரபல்யமானது.
- அதுதவிர சிரிபிரிஸ் (සිරිබිරිස්), தக்கொத் பத்மாவதி (දැක්කොත් පද්මාවතී), மகோடிஸ் துமா ( මගෝඩිස් තුමා), பட்டோ ( පැටෝ), டிக்கா (ටික්කා), தொங்சேதங் ( දොං සේතං), சிமோனா (සිමෝනා), லபயா (ලපයා), கொட்டிங் அய்யா (ගොඩිඩිං අයියා), ஸ்வீட்டி (ස්වීටි), செல்லங்சேன (සෙල්ලං සේන) போன்றவை பெரிதும் பிரபல்யம் பெற்றுள்ளன.






## சி. சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்) 1924 - 1996

- 1924 - 1996 வரையில் வாழ்ந்த சி. சிவஞானசுந்தரம் பிரபல்யம் வாய்ந்த தமிழ்க் கருத்துப் (காட்டூன்) படக் கலைஞராகக் கருதப்படுகின்றார்.
- அவர் சித்திரக்கலை தொடர்பாக பம்பாய் சேர். ஜே. ஜே. கலைக்கல்லூரியில் (Sir J. J. School of Arts) பயிற்சி பெற்றார். இந்தியாவில் இருந்த காலத்தில், திரு. ராஜா ரவிவர்மா அவர்களிடம் சித்திரம் வரைவதில் பயிற்சி பெற்றார்.
- அவர் ‘லோக்கசத்த’ எனும் மராட்டிய மொழிச் செய்தித்தாள், பிலிட்ஸ் (Blitz), கொன்ச் (Conch) ஆகிய ஆங்கிலச் செய்தித்தாள்கள், பல தமிழ்ச் செய்தித்தாள்களிலும் காட்டூன் படக் கலைஞராகச் செயற்பட்டுள்ளார்.
- 33 வருட காலம் ‘சிரித்திரன்’ எனும் செய்தித்தாளை வெளியிட்டதோடு, அச்செய்தித் தாளுக்குக் காட்டூன் படங்கள் வரைந்தமையால், ‘சிரித்திரன் சுந்தர்’ எனும் பெயரில் பிரபல்யமடைந்தார்.
- அவரால் படைக்கப்பட்ட சவாரித்தம்பர், சின்னக்குட்டி, மைனர் மச்சான் போன்ற பாத்திரங்கள் ஜனரஞ்சகமானவை.





| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | **6.0 :** | **சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | **6.2 :** | **சுதேசிய அச்சு ஊடகங்கள் சார்ந்த கலையம்சங்களை நயப்பார்.** |
| **செயற்பாடு** | **6.2.2 :** | **"புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களை மதிப்பிடுவோம்."** |
| **பாடவேளை** | **:** | 1 |

**கற்றற் பேறுகள்:**

- புத்தக அட்டை கதை விளக்கச் சித்தரம் வடிவமைக்கும் கலைஞர்களைக் குறிப்பிடுவார்.
- அக் கலைஞர்களின் நிர்மாணங்கள், தகவல்கள் என்பவற்றைச் சேகரிப்பார்.
- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைத்தலுக்கு அடிப்படையாக அமைந்த கலைப்பாணிக்குரிய இயல்புகள், நுட்ப முறைகள் பற்றி விபரித்துக் கூறுவார்.
- ஒழுங்கமைத்த முறைகளையும் கோட்பாட்டு இயல்புகளையும் விளக்குவார்.
- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திர வடிவமைப்புகளின் கலைப் பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திர ஓவியக் கலைஞர்கள்
  - சுமன திசாநாயக்க
  - வை. சிவசுப்பிரமணியம்
- இணைப்பு 6.2.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.2.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.2.2.1**

- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களின் நிர்மாணிப்பு களை வகுப்பில் காட்சிப்படுத்தி அவை பற்றி மாணவர்களிடம் வினவுக.
- அந்நிர்மாணிப்புகள் பற்றி கற்றறிவதன் முக்கியத்துவத்தை கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.2.2**

- இணைப்பு 6.2.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.2.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்கச் செய்க.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.2.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களின் நிர்மாணிப்புகள் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களைக் குறிப்பிடுவார்.
- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களின் நிர்மாணிப்புகள், அவை பற்றிய தகவல்கள் என்பவற்றை சேகரித்தல்.
- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரங்களை வடிவமைக்க அடிப்படையாக அமைந்த கலைப்பாணிக்குரிய இயல்புகளை விபரித்துக் கூறல்.
- ஒழுங்கமைத்துள்ள முறைகளையும் கோட்பாட்டுப் பண்புகளையும் விளக்குதல்.
- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களுடைய நிர்மாணிப்பு களில் காணப்படும் கலைப் பண்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 6.2.2.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- உங்களிடம் வழங்கப்பட்ட புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களின் படைப்புக்களை நன்றாக நோக்குக.
- உங்களிடம் வழங்கப்பட்ட வாசிப்புப் படிவத்தை அவதானமாக வாசிக்குக.
- புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களின் படைப்புக்களில் காணப்படும் சிறப்பியல்புகளை இனங்காண்க.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுக.
  - (1) புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலையை சுருக்கமாக விளக்குக.
  - (2) புத்தக அட்டை கதை விளக்கச் சித்திரம் வடிவமைக்கும் கலைஞர்களின் பெயர் களைக் குறிப்பிடுக.
  - (3) கிழே உள்ள விடயங்களை உள்ளடக்கி படைப்புக்களை மதிப்பிடுக.
    - (i) கலைப்பாணி / தழுவல்
    - (ii) ஊடகம்
    - (iii) கலைத்துவப் பண்புகள்
      - உருவங்களை உபயோகித்தல்
      - வர்ணங்களை உபயோகித்தல்
      - தளப் பிரயோகம்
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 6.2.2.2:**

## வாசிப்புப் பத்திரம்

**சுமன திசாநாயக்க (1922 - 1995)**

- இவர் 1922 இல் மாத்தறை, கம்புறுப்பிட்டிக் கிராமத்தில் பிறந்தார்.
- கொழும்பு தொழினுட்பக் கல்லூரியில் கலை பயின்று, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலும் சித்திரக் கலைப் பயிற்சி பெற்றுள்ளார்.
- கல்வித்திணைக்களத்தில் சித்திரக் கலைப் பரிசோதகராகவும், நூல் வெளியீட்டுச் சபையில் சித்திரக் கலைப் பணிப்பாளராகவும் சேவையாற்றினார்.
- சிறுவர் நூல்களுக்காகப் புதியதொரு பாணியில் சித்திரங்களைப் படைத்த ஒரு கலைஞராக இவர் சிறப்புப் பெறுகின்றார்.
- எண்ணெய் (தைல) வர்ணம், நீர் வர்ணம், அக்கிரலிக்கு போன்ற வெவ்வேறு ஊடகங் களைப் பயன்படுத்தி ஆக்கங்கள் படைத்துள்ளார்.
- இவரது ஆக்கங்கள் இரண்டு வகை:

  எண்ணெய் வர்ணச் சித்திரம்

  கதைக் காட்சிச் சித்திரம்
- எளிமையான, நவீன வடிவங்களைக் கொண்ட பற்றிக் (Batik) ஆக்கங்களுக்கான ஆரம்ப கால முன்னோடியும் ஆவார்.
- அவர் படைப்பாக்கத்தின்போது எளிய, அரூப நிலையான தளவுருவங்களையும், நிறங்களையும் மிகவும் ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்தியுள்ளார்.
- இவ்வுலகு சாராத எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டு, தத்ரூபமான உணர்வு களை வெளிப்படுத்தும் வகையிலும், நயப்புக்கு வழிகோலும் வகையிலும் இவரது படைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது.
- புத்தக அட்டைகள், கதைக் காட்சிச் சித்திரங்கள், சிறுவர் நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றுக்காக எளிய தளவடிவங்களைக் கொண்டு சித்திரங்கள் படைத்துள்ளமை யைக் காண முடிகின்றது.





**வைத்தீஸ்வரன் சிவசுப்பிரமணியம் (ரமணி) (1942)**

- 1942 இல் யாழ்ப்பாணம், அளவெட்டியில் பிறந்த சிவசுப்பிரமணியம், 1961 இல் யாழ்ப்பாண "விடுமுறைக் கால ஓவியக் கழகத்தில்" அடிப்படை ஓவியக் கல்வி பெற்று, அரச கலைக் கல்லூரியில் ஓவியக் கலையில் உயர்கல்வி பயின்றார்.
- அரச கலைக் கல்லூரியில் வரைதல், ஓவியம் தீட்டல் தொடர்பாக மேலும் பயின்று, பிற்காலத்தில் அழகியற்கல்விப் பிரதிப் பணிப்பாளர் பதவியையும் வகித்தார்.
- இவர் ஓவியங்களை மட்டுமன்றி பல சிற்பங்களையும் வடித்துள்ளார்.
- இயற்கைவாத பாணியுடன் நவீன நுட்ப முறைகளையும் கலந்து தமக்கே உரித்தான பாணியில் அவர் ஆக்கம் படைத்துள்ளார்.
- 'ராதா' எனும் செய்தித்தாளுக்காக முதன் முதலாக விளக்கப்படமொன்றினைப் படைத்தார். பின்னர் பல தமிழ்ச் செய்தித்தாள்களுக்கும் சித்திரங்கள் படைத்துள்ளார்.
- புத்தக அட்டை வடிவமைப்பில் புதிய சோதனைகளைச் செய்த அவர் தமிழ் புத்தகங்களுக்கு புத்தக அட்டையை வடிவமைத்தார்.
- பின்னர் கல்வி அமைச்சின், கல்வி வெளியீட்டுத் திணைக்களப் பாடநூல்கள் உட்பட பல்வேறு நூல்களுக்கு அட்டைகளை வடிவமைத்துள்ளார்.


  இவரது படைப்புக்கள் தமக்கே உரிய தனித்துவமான பாணியில் படைக்கப்பட்டுள்ளவையாகும்.






**நான்காந்தர தமிழ்மொழிப் பாடநூலொன்றுக்காக அவர் ஆக்கிய புத்தக அட்டை**



**'பாட்டுத் திறத்தாலே' எனும் நூலுக்கு அவர் ஆக்கிய அட்டை**

**தேர்ச்சி 6.0 :** **சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3 :** **தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு கலைஞர்களின் கலைப் படைப்புக்களை மதிப்பிடுவார்.**

**செயற்பாடு 6.3.1 :** **"ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் ஓவியங்களை நயப்போம்."**

**பாடவேளை :** 1

**கற்றற் பேறுகள்:**
- ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் ஓவியங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- நவீன சித்திரக் கலைக்காக அவர் ஆற்றிய பணியையும், கலை செயற்பாடுகள் பற்றியும் கற்றறிவார்.
- நிர்மாணங்களுக்காக அடிப்படையாக அமைந்த கலைப்பாணியும், ஒழுங்கமைந்துள்ள கோட்பாட்டு விதிகளையும் விபரித்துக் கூறுவார்.
- ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் ஓவியங்களிலுள்ள கலைப்பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் வர்ண ஓவியங்கள்
  - குவர்ணிகா
  - அவிக்னொனின் யுவதிகள்
- இணைப்பு 6.3.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.3.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.3.1.1**
- ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் வர்ண ஓவியங்கள் உள்ள படங்களை அவதானிக்கச் செய்க.
- அவ்வோயியங்களின் செல்வாக்கு, தொனிப்பொருள், கலைப்பாணி பற்றி மாணவர்களிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.3.1.2**
- இணைப்பு 6.3.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.3.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்கச் செய்க.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.3.1.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- பத்திரிகை ஓவியக் கலைஞர்களுடைய நிர்மாணிப்புகள் தொடர்பான விடயங்களை மீளாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் ஓவியங்களை குறிப்பிடல்.
- ஓவியங்களை நிர்மாணிக்க ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோ பெற்ற செல்வாக்கை விபரித்துக் கூறல்.
- அந்நிர்மாணிப்புகளின் கலைப்பாணியை விளக்குதல்.
- ஓவியங்களின் தொனிப் பொருள்களை விளக்குதல்.
- ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் ஓவியங்களில் காணப்படும் கலைப் பண்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 6.3.3.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் நிர்மாணிப்புகளை நன்றாக நோக்குக.
- உங்களுக்கு வழங்கப்பட்ட வாசிப்புப் படிவத்தை அவதானமாக வாசிக்க.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுக.
  - (1) ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோ பற்றிய சிறிய விளக்கம் ஒன்றைத் தருக.
  - (2) கீழே தரப்பட்ட விடயங்களைக் கருதி ஓவியக் கலைஞன் பப்லோ பிக்காசோவின் நிர்மாணிப்புகளை அர்த்தமுள்ள விதத்தில் மதிப்பிடுக.
    - (i) தொனிப்பொருள்
    - (ii) பாணி
    - (iii) செல்வாக்கு
    - (iv) நுட்பமுறை
    - (v) கலைப் பண்புகள்
      - உருவங்களை ஒழுங்கமைத்தல்
      - வர்ணங்களை உபயோகித்தல்
      - இரேகைகள் கையாண்ட விதம்
      - தளப் பிரயோகம்
      - பாவ வெளிப்பாடு / உணர்வு வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 6.3.1.2:**

## வாசிப்புப் பத்திரம்

### பப்லோ பிக்காசோ (1881 - 1973)

- ஐரோப்பிய சித்திரக் கலையில் கனவடிவுவாதப் போக்கை அறிமுகஞ் செய்த முதன்மையான சித்திரக் கலைஞராக, பப்லோ பிக்காசோ (Pablo Picasso) திகழ்கின்றார்.
- இவர் 20 ஆம் நூற்றாண்டின் புகழ்பூத்த சித்திரக் கலைஞர்களுள் முதலிடம் பெறுகின்றார்.
- பப்லோ பிக்காசோவின் தந்தை, ஒரு சித்திர ஆசிரியர் ஆவார். மகன் பிக்காசோவின் சித்திரக்கலை ஆற்றலை இனங்கண்ட அவர், மகனைச் சித்திரக்கலையின்பால் வழிப் படுத்தினார்.
- பாரிஸ் நகரத்துக்குச் சென்று 1893-1900 வரையில் அங்கு மூத்த கலைஞர்களுடன் கூட்டாகச் செயற்பட்டவாறு சித்திரக்கலை பயின்றமையே பிக்காசோவின் வாழ்க்கையில் முக்கியமான திருப்புமுனையாக அமைந்தது.
- அவ்வாறு சித்திரக் கலை பயின்றதன் விளைவாக அவரது சித்திரக் கலைப் படைப்புக் களின் வெவ்வேறு வரையறைகளைக் காண முடிகின்றது.
  - நீலக்காலம் (Blue Period - 1901-1904)
  - இளஞ்சிவப்புக்காலம் (Rose Period - 1905-1906)
  - கனவடிவவாதக்காலம் (Cubism Period - 1907 இன் பின்னர்)
- நீலக் காலத்திலும் இளஞ்சிவப்புக் காலத்திலும் பப்லோ பிக்காசோ வரைந்த படைப்புக் களின் கருப்பொருள் இடத்துக்கிடம் சென்று வித்தை காட்டுபவர்கள், வீதி மக்கள், சஞ்சாரம் செய்யும் நடிக நடிகைகள், வறியோர், பிச்சைக்காரர் போன்றோராவர்.
- நீலக் காலத்தில் நீலநிறத்திலும், இளஞ்சிவப்புக் காலத்தில் இளஞ்சிவப்பு நிற சாயல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சித்திரங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள மனித உருவங்கள் யதார்த்தபாணியை சார்ந்தவை.
- ஆபிரிக்க நீக்ரோ சிற்பங்கள் வேட முகங்களின் செல்வாக்கைப் பெற்ற பப்லோ பிக்காசோ, 1906 இன் பின்னர் படைத்த படைப்புக்கள் புதிய பாணியிலான தன்மைகளைக் காட்டி நிற்பவையாகும்.
- 1906 இன் பின்னர் தோன்றிய படைப்புக்களில் காணப்படும் கேத்திரகணித தளவுருவங் களும், தட்டை வர்ணப் பயன்பாடும், வெளிப்புறத்தே உள்ள கோடுகளைக் கொண்ட உருவங்களும், கனவடிவவாதப் பாரம்பரியத்தின் சிறப்பான படைப்புக்களுள் அடங்கும்.
- கனவடிவவாதச் சித்திரக் கலையைத் தோற்றுவித்த பிக்காசோவின் சிறப்பான சில படைப்புக்களாக,
  - அவிக்னோனின் யுவதிகள்
  - வயலின் இசைப்பவர்
  - புலம்பும் பெண்
  - குவார்னிக்கா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## அவிக்னோனின் யுவதிகள் ஓவியம்



- ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த பப்லோ பிக்காசோவினால் 1907 இல் வரையப்பட்ட இந்த ஓவியம் ''அவக்னோன் யுவதிகள்'' எனப்படுகிறது.
- சித்திரக் கலை வரலாற்றில் புதிய நிர்மாணிப்பையும், பாணியையும் கொண்ட புதிய காலத்தை உருவாக்கிய ஆக்கமாகும்.
- 'அவிக்னோனின் யுவதிகள்' கனவடிவவாதப் போக்கின் முதலாவது படைப்பாகக் கருதப்படு கின்றது.
- வேடமுக மற்றும் சிற்பக் கலையின் செல்வாக்குடன் இந்த ஓவியம் படைக்கப்பட்டுள்ளது.
- ஸ்பெயின் நாட்டில் பார்சிலோனா நகரின் அவிக்னோன் எனும் வீதியில் வாழ்ந்த விலை மாதர்களின் வாழ்க்கையே, கலைஞர் பிக்காசோ இந்த ஓவியத்துக்கான கருப்பொருளாகக் கொண்டுள்ளார்.
- ஐந்து பெண் உருவங்களைக் கொண்ட இப்படைப்பில் உள்ள உருவங்களில் இயற் பண்பை மீறிச் சென்று கனவடிவவாத இயல்புகள் காட்டப்பட்டுள்ளன.
- உடலின் வெளிப்புற அழகுக்குப் பதிலாக, விலைமாதரின் அகஇயல்புகளை வெளிக் காட்ட முயற்சி செய்யப்பட்டுள்ளது.
- அதற்காக ஆபிரிக்க வேடமுகங்களின் தன்மையின் செல்வாக்கு பெறப்பட்டு, விலைமாத ரின் உணர்வுகளை அழுத்திக் காட்ட அவற்றின் வெளிப்பாட்டுப் பண்பை பயன்படுத்த பிக்காசோ முயற்சி செய்துள்ளார்.
- வேடமுகங்களில் உள்ள கோடுகள் பெண்களில் எதிர் நிலைகளையும், உள நிலைகளையும் சிறப்பாக வெளிக்காட்டுவதில் கலைஞர் வெற்றி கண்டுள்ளார்.
- எல்லையற்ற நிறப்பிரிப்பு, ஆழ்ந்த சித்திரிப்பு ஆகிய ஓவியத்தின் கருத்து வெளிப்பாட்டை முனைப்புறுத்துவனவாக அமைந்துள்ளன.

- இயல்பான தொலைநோக்கு, முப்பரிமாண இயல்புகள் ஆகியன பயன்படுத்தப்படவில்லை. விடயப்பொருள் சார்ந்த தொலைநோக்கையும், முப்பரிமாண இயல்புகளையும் உள்ளடக்கி இவ் ஓவியம் படைக்கப்பட்டுள்ளது.
- எண்ணெய் வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தி கன்வஸ்துணி மீது வரையப்பட்டுள்ள இந்த ஓவியம், தற்போது நியுயோர்க் நகரில் நவீன கலைக்கூடத்தில் (Museum of Modern Art) நிரந்தரமான ஒரு கலைக் காட்சிப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

**குவார்னிக்கா ஓவியம்**



- 1937 இல் படைக்கப்பட்ட குவர்னிக்கா ஓவியம், முதலாம் உலகமகாயுத்த காலத்தில் குவர்னிக்கா எனும் நகர் மீதான குண்டு வீச்சை அடிப்படையாகக் கொண்ட ஒரு படைப்பாகும்.
- யுத்தத்தின் அகோரத்தைக் காட்டும் காத்திரமான, சிறப்பான ஒரு படைப்பாக இதனைக் குறிப்பிடலாம்.
- தனிமை, அவல ஓலம், உரிமையைக் கோரி கோசமிடல், மாண்டோரைக் கட்டி யணைத்தல் போன்ற உணர்வுகள் இந்தப் படைப்பில் நன்கு வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- ஓவியத்தில் உணர்வுகளைக் காட்டுவதற்காக பிக்காசோ பயன்படுத்தியுள்ள உருவப் பகுதிகளின் இணைப்பு இங்கு சிறப்பிடம் பெறுகின்றது.
- குதிரை, மாடு மற்றும் ஆண், பெண் உருவப் பகுதிகள், மின்குமிழ் போன்ற சிதைந்த உருவங்களாக திரட்சியாக்கப்பட்டுள்ள விதமும் இங்கு சித்திரிக்கப்பட்டுள்ளன.
- சித்திரத்தின் உருவங்கள் கனவடிவவாத மாதிரிக்கு அமையச் சித்திரிக்கப்பட்டுள்ளன.
- அதனூடாக உருவங்களின் புற உடலழுகுக்குப் பதிலாக உள்ளுணர்வுகள் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- தட்டையான தளத்தின் மீது வெவ்வேறு தளவுருவங்கள், கலைக் கல்லூரி சார்ந்த யதார்த்தவாத முறைப்படி, இயல்பான தூரநோக்கு, முப்பரிமாண இயல்பு ஆகியவற்றை விட வேறுபட்ட விதத்தில் சித்திரிக்கப்பட்டுள்ளன.
- வரையறைப்பட்ட இருண்ட நிறத் தொடரான, நரை, வெள்ளை, கறுப்பு நிறச்சாயங்களைப் பயன்படுத்திச் சித்திரத்தின் ஒரு தனி நிறத்தன்மை கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
- அதியதார்த்தவாத இயல்பு வெளிப்பாடுகளும் இப்படைப்பின் மூலம் காட்டப்படுகின்றது.
- யுத்த அனுபவங்களைக் கொண்டு பிக்காசோவினால் வரையப்பட்ட 135 x 275 சென்றிமீற்றர் அளவுடைய இந்த சிறப்பான கலைப்படைப்பு தற்போது ஸ்பெயின் நாட்டு மட்ரிட் நகர கலைக்கூடமொன்றில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 6.0 : சமய பண்பாட்டு அம்சங்கள், உள்நாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3 : தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு கலைஞர்களின் கலைப் படைப்புக்களை மதிப்பிடுவார்.**

**செயற்பாடு 6.3.2 : "சிற்பக் கலைஞன் ஹென்ரி மூரின் நிர்மாணங்களை மதிப்பிடுவோம்."**

**பாடவேளை :** 1

**கற்றற் பேறுகள்:**
- சிற்பக் கலைஞன் ஹென்ரி மூரின் நிர்மாணங்களை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- நவீன சிற்பக் கலைக்காக அவர் ஆற்றிய பணியையும், கலை செயற்பாடுகள் பற்றியும் கற்றறிவார்.
- நிர்மாணங்களின் கலைப்பாணியையும், ஒழுங்கிணைப்புப் பண்புகளையும் விபரித்துக் கூறுவார்.
- சிற்பக் கலைஞன் ஹென்ரி மூரின் நிர்மாணிப்புகளில் காணப்படும் கலைப்பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சிற்பக் கலைஞன் ஹென்ரி மூரின் கலைப் படைப்புக்கள்
  - அரச குடும்பம்
  - சாய்ந்திருக்கும் பெண்
- இணைப்பு 6.3.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 6.3.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 6.3.2.1**
- சிற்பக் கலைஞன் ஹென்ரி மூரின் சிற்பங்கள் உள்ள படங்களை அவதானிக்கச் செய்க.
- அச்சிற்பங்களின் செல்வாக்கு, தொனிப்பொருள், கலைப்பாணி பற்றி மாணவர்களிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.3.2.2**
- இணைப்பு 6.3.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.3.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்கச் செய்க.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.3.2.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- அவர்கள் திரட்டிய தகவல்களை உள்ளடக்கி மீளாய்வில் ஈடுபடுக.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- சிற்பக் கலைஞன் ஹென்றி மூரின் நிர்மாணிப்புகளைக் குறிப்பிடுதல்.
- அந்நிர்மாணிப்புகளின் கலைப்பாணியை விளக்குதல்.
- நிர்மாணிப்பின் தொனிப்பொருள்களை ஆராய்தல்.
- சிற்பக் கலைஞன் ஹென்றி மூரின் நிர்மாணிப்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 6.3.2.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- சிற்பக் கலைஞன் ஹென்றி மூவரின் நிர்மாணிப்புகளை நன்றாக நோக்குக.
- உங்களுக்கு வழங்கப்பட்ட வாசிப்புப் படிவத்தை அவதானமாக வாசிக்க.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுக.
  - (1) சிற்பக் கலைஞன் ஹென்றி மூர் பற்றி சுருக்கமாக விளக்குக.
  - (2) கீழே உள்ள விடயங்களை உள்ளடக்கி நிர்மாணிப்புகளை மதிப்பிடுக.
    - (i) கருப்பொருள்
    - (ii) கலைப்பாணி
    - (iii) செல்வாக்கு
    - (iv) ஊடகம்
    - (v) நுட்பமுறை
    - (vi) கலைப் பண்புகள்
      - உருவங்களைப் பயன்படுத்தல்
      - லயம், புறஇயல்பு
      - பாவ வெளிப்பாடு, உணர்வு வெளிப்பாடு, ஒட்டுமொத்த வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 6.3.2.2:**

**வாசிப்புப் பத்திரம்**

**ஹென்றி மூர் (1898 - 1986)**

- ஹென்றி மூர் (Henry Moore) 1898 இல் இங்கிலாந்தில் யோக்ஷயர் பிராந்திய காசல் போட் நகரில் பிறந்தார்.
- கிரேக்க - உலோக கலை மற்றும் மறுமலர்ச்சிக் காலத்தில் காணப்பட்ட மரபுரீதியான சிற்பக் கலைப் படைப்புக்களின் பின்னர் புதியதொரு பாணியில் சிற்பக் கலையை உலகுக்கு அறிமுகஞ் செய்த பெருமை கலைஞர் ஹென்றி மூரைச் சாரும்.
- அதுவரையில் காணப்பட்ட கட்புல யதார்த்தத் தன்மையிலிருந்து வேறுபட்ட கருத்து நிலையான உருவங்களைச் சிற்பக் கலையில் அறிமுகஞ் செய்த கலைஞர் என ஹென்றி மூரைக் குறிப்பிடலாம்.
- அவரது மனிதச் சிற்பங்கள் இயற்கையான தோற்றம், இயற்கையான பருமன் ஆகிய இயல்புகளிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றமை தெளிவான ஒரு விடயமாகும்.
- மனித உருவத்தின் உடல் வடிவம் மிக எளிமையான வகையில் படைக்கப்பட்டிருத்தல் ஒரு சிறப்பியல்பாகும்.

- பாரிய உடலைக் கொண்ட மனித உருவங்களில் சிறியதாக தலையைக் காட்டுதல் ஹென்றி மூரின் படைப்புக்களின் தனிச் சிறப்பாகும்.
- ஆரம்ப காலப் படைப்புக்களில் மனித உருவங்கள் தெளிவாக வடிக்கப்பட்டபோதிலும் பின்னர் படிப்படியாக, எளிமையான வடிவங்களிலும் அவை வரையறுக்கப்பட்டன.
- ஹென்றி மூரின் சிற்பங்களின் அடிப்படையான கருப்பொருள் மனித உருவமாகும். அவ்வாறான சிற்பங்களுள்,
    - அரச குடும்பம் (King and Queen)
    - சாய்ந்து படுத்திருக்கும் பெண்

  ஆகியன முக்கிய இடத்தைப் பெறுகின்றன.
- அவரது சிற்பங்களுள் பெரும்பாலானவை பூங்காவில் வைப்பதற்கான சிற்பங்களாகவே ஆக்கப்பட்டுள்ளன.
- பாரிய அளவுடையதாகப் படைக்கப்பட்ட மனித உருவங்கள் பல பகுதிகளைக் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளன.
- சிற்பங்களைப் படைப்பதற்காக பயன்படுத்தும் மூலப்பொருள்களை மாற்றிய அவர், பாரம்பரியமாக பயன்படுத்திய கல்லிற்கு பதில் மரம், உருக்கு போன்ற பொருள்களை பிரதியீடு செய்து கொண்டார். வெயில், மழை, காற்று போன்றவற்றுக்கும் ஈடுகொடுக்கத் தக்க வகையில் ஊடகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- மூலப்பொருள்களை மாத்திரமன்றி, சிற்பக் கோட்பாடுகள் மற்றும் நுட்பமுறைகளையும் அவர் மாற்றியமைத்தார்.

**அரச குடும்பம் (KING AND QUEEN)**



- இயல்பான தத்ரூபமான உருவங்களைக் காட்டுவதற்குப் பதிலாக அரூப நிலையான (Abstract) உருவங்களைப் பயன்படுத்திப் படைத்த ஒரு சிற்பமாக அரச குடும்பம் எனும் சிற்பத்தைக் குறிப்பிடலாம்.
- இங்கு மனித உருவங்கள் இயற்கையான தோற்றம், இயற்கையான அளவுத்திட்டம் ஆகியவற்றிலிருந்து விலகி ஆக்கப்பட்டுள்ளன.

- அமர்ந்திருக்கும் நிலையில் ஆக்கப்பட்டுள்ள இச்சிற்பத்தில் ஆண், பெண் உருவங்கள் கலைஞருக்கே உரித்தான பாணியில் படைக்கப்பட்டுள்ளன.
- மனித உருவங்கள் மிக எளிமையான மற்றும் சில பகுதிகளைக் கொண்டதாகப் புனையப்பட்டுள்ளன.
- பாரிய உடலும், சிறிய தலையுமாக உருவங்கள் ஆக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.
- மரபுரீதியான சிற்பக்கலை மூலப்பொருள்களுக்குப் பதிலாக, வெண்கல ஊடகம் பயன் படுத்தப்பட்டுள்ளது.
- வெண்கலத்தைக் கொண்டு வார்ப்பு நுட்பமுறையைப் பயன்படுத்தி இப்படைப்பு ஆக்கப் பட்டுள்ளது.
- இச்சிற்பம் ஒரு பூங்காச் சிற்பமாகப் படைக்கப்பட்டுள்ளது.

## சாய்ந்து படுத்திருக்கும் பெண் (Reclining figure)



- சாய்ந்த நிலையில் இருப்பதைப் போன்று வடிக்கப்பட்டுள்ள இச்சிற்பத்திலும் அரூப நிலைசார் (Abstract) அணுகுமுறை காணப்படுகின்றன.
- இயற்கையான தோற்றம், இயற்கையான அளவுத்திட்டம் போன்றவற்றுக்கு அப்பாற்பட்ட வடிவங்களைப் பயன்படுத்துதல் ஹென்றி மூரின் படைப்புக்களின் ஒரு சிறப்பியல்பாகும்.
- ஊடகம், சிற்பம் வடித்தற் கோட்பாடுகள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்காக எடுக்கப் பட்ட ஒரு முயற்சியாக இப்படைப்பைக் குறிப்பிடலாம்.
- நீண்ட அல்லது துளை கொண்ட வடிவங்கள், சந்தத்துக்கு அமைவாகவும், சமநிலை யாகவும் வெளியுடன் இணைத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- வெண்கல ஊடகத்தில் உலோக வார்த்தல் நுட்ப முறையைக் கையாண்டு நிர்மாணிக்கப் பட்ட படைப்பாகும்.
- வெளித்துருத்திய, உட்புதைந்த பகுதிகளைக் கொண்டதெனினும் விரிவான தன்மை குறைவான, எளிமையான வடிவங்களை இப்படைப்பில் காணலாம்.
- மனித உடலின் உடலுறுப்புக்களின் வடிவங்கள் எளிமையாக வடிக்கப்பட்டிருத்தல், மனித உடலின் வடிவத்துக்குச் சார்பாக தலை சிறியதாகக் காட்டப்பட்டிருத்தல் போன்ற ஹென்றி மூரின் சிற்பக் கலைப் படைப்புக்களின் சிறப்பியல்புகளையும் இதில் காணலாம்.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.1 : அனுராதபுரக் காலச் சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கல் வேலைப்பாடுகள், கட்டடக் கலை படைப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.1.1 : "சிகிரியா ஓவியங்களின் அழகை நயப்போம்."**

**பாடவேளை :** 1

**கற்றற் பேறுகள்:**

- சிகிரியாவின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வார்.
- சிகிரியா ஓவியங்களின் கருப்பொருள் பற்றிய பல்வேறுபட்ட கருத்துக்களை விமர்சிப்பார்.
- ஆக்கபூர்வ கலைப்பாணிக்கான ஊடகம், நுட்பமுறை என்பவற்றை விளக்கிக் கூறுவார்.
- சிகிரியா ஓவியங்களின் கலைப் பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சிகிரியா ஓவியங்களைக் கொண்ட புகைப்படங்கள், இறுவட்டுகள், கணனிப் பொறிகள்
- இணைப்பு 7.1.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.1.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.1.1.1**

- சிகிரியா ஓவியங்களைச் சித்திரிக்கும் படங்களை மாணவர்களுக்குக் காண்பித்து அவர்களை பாடத்தில் அவதானம் செலுத்தச் செய்க.
- மாணவர்கள் சிகிரியா பற்றி முன்னர் அறிந்துள்ள விடயங்களை கேட்டறிக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.1.2**

- இணைப்பு 7.1.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- அதனை வாசிக்கும்படி மாணவர்களைப் பணிக்க.
- வரலாற்று முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துக.
- படங்களைக் காண்பித்து கலந்துரையாடி பாட உள்ளடக்கத்தை உறுதிப்படுத்துக.
- இணைப்பு 7.1.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்கச் செய்க.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.1.3**

- பொருத்தமான முறையைக் கொண்டு விடைகளை மதிப்பீட்டுக்குட்படுத்துக.
- தவறான பதில்களை திருத்தி மொத்த வினாக்கொத்துக்கும் சரியான விடைகளைப் பெற்றுக் கொள்க.
- பாடத்தின் சுருக்கத்தை வழங்கி மீளாய்வில் ஈடுபடுக.
- சிகிரியா பற்றி மேலதிகத் தகவல்களை சேகரிக்கும்படி மாணவர்களைப் பணிக்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.1.1.1, 7.1.1.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- சிகிரியா ஓவியங்களின் கலைப் பண்புகளை இரசித்து நயத்தல்.
- சிகிரியா ஓவியங்கள் மீது செல்வாக்கு செலுத்திய மரபை விபரித்துக் கூறல்.
- சிகிரியாவின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்தறிவார்.
- ஆக்கபூர்வமான கலைப்பாணிக்கு அனுகூலமாக அமைந்த ஊடகம், நுட்பமுறைகள் என்பவற்றை விபரித்துக் கூறல்.

**இணைப்பு 7.1.1.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்ட சிகிரியா ஓவியங்களை நன்றாக நோக்குக.
- உங்களுக்கு வழங்கப்பட்ட வாசிப்புப் படிவத்தை அவதானமாக வாசிக்க.
- சிகிரியா ஓவியங்களில் உள்ள விசேட பண்புகளை இனங்காண்க.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
  - (1) சிகிரியாவில் காணக்கூடிய வாஸ்து விஞ்ஞானத்தின் பிரிவுகளையும் ஓவியங்களை விவரிக்குக.
  - (2) சிகிரியாவின் வரலாற்றுப் பின்னணியை சுருக்கமாக விளக்குக.
    - காலம் / நூற்றாண்டு
    - அனுசரணை வழங்கியவர்
  - (3) பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு சிகிரியா ஓவியங்களை மதிப்பார்.
    - (i) சம்பிரதாயம் / கலைப்பாணி
    - (ii) நுட்பமுறை
    - (iii) கலைப்பண்புகள்
      - வர்ண உபயோகம்
      - இரேகைகள் கையாண்ட விதம்
      - தளத்தின் மீது உருக்கள் உபயோகித்துள்ள விதம்
      - பாவ வெளிப்பாடு
  - (4) சிகிரியா ஓவியங்களின் கலைத்துவ வெளிப்பாடு தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள அபிப்பிராயங்கள், வியாக்கியானங்களை விபரிக்குக.

- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.1.1.2:**

**சிகிரியா**

## வாசிப்புப் பத்திரம்

- மாபெரும் கலைக்கூடமான சிகிரியா மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்துக் குரிய இனாமலு கோரளையில் அமைந்துள்ளது.
- கி.பி. 5ம் நூற்றாண்டில் அநுராதபுர கால தாதுசேன மன்னனின் மகனான காசியப்பன் மன்னனால் கட்டப்பட்டதாகும்.
- இலங்கையின் சித்திரக் கலை வரலாற்றில் செந்நெறிப் பண்புகளை இவ் ஓவியங்கள் கொண்டுள்ளன.
- ஆசியாவில் உள்ள தொல்பொருள் முக்கியத்துவமுள்ள ஸ்தானங்களில் ஒன்றான இது ஓர் உலக மரபுரிமையாக உள்ளது.
- இங்குள்ள கட்டிட கலை அமைப்புக்களிடையே வில்வளைவு, படிவரிசை, அகழி, குளம் என்பனவற்றைக் கொண்ட கற் பூங்கா சிறப்பானதாகும்.
- சிகிரியாக் குன்றின் அடிவாரத்தில் உள்ள சிங்கப் பாதங்கள், கண்ணாடிச் சுவர், குன்றின் உச்சியில் உள்ள அரசமாளிகை இடிபாடுகள் போன்றவை கட்டடக் கலைத்துறை முக்கியத்துவமுள்ள அம்சங்களாகும்.












## சிகிரியா மலை





- சிகிரியாக் குன்றின் மேற்குப்புற குடைவுகளில் உள்ள பெண் உருவங்களே சிகிரியா ஓவியங்களாகப் பிரபல்யமடைந்துள்ளன.
- சிகிரியாவில் மங்கையர் உருவங்கள் ஏறத்தாழ 500 வரையப்பட்டிருந்த தாக சிகிரியா சுவர்க் கவிதைகள் கூறினாலும் தற்போது ஏறத்தாழ இருபத்தி இரண்டு ஓவியங்களே மீதியாக உள்ளன. அதிலும் முழுமையாக அமைந்த ஓவியங்கள் ஒரு சில மட்டுமே இருக்கின்றன.
- சிகிரியாக் குன்றின் மேற்குப்புறத்தில் குடைவுகளுக்குள்ளேயும் அடிவாரத்தில் உள்ள குகைகளிலும் இவ்வாறான ஓவியங்கள் உள்ளன.
- ஓவியங்களை வரையப் பொருத்தமான விதத்தில் சாந்து பூசி கற்பாறை ஒப்பமாக்கப் பட்டுள்ளது.
- அதற்காக வைக்கோல், உமி, களிமண், தாவர நார் வகைகள், தாவர பசை (பிசின்) சுண்ணாம்பு ஆகியன பயன்படுத்தி சாந்துக் கலவை தயாரிக்கப்பட்டது. கரடுமுரடான மேற்பரப்பைக் கொண்ட கற்பாறை மீது சாந்து பூசி ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.
- சாந்து உலர முன் ஓவியங்கள் வரையப்பட்டதாக நம்பப்படுகிறது. அந்நுட்ப முறை பிரெஸ்கோ புவனோ என அழைக்கப்படுகிறது. இந்நுட்ப முறையைத் தவிர டெம்பரா அல்லது உலர்ந்த சாந்து மீது பிரெஸ்கோ சிகோ முறை உபயோகிக்கப்பட்டுள்ளதென அறிஞர்கள் கூறுகின்றனர். சிலர் உலர் சாந்து மீது வரையப்பட்டதென கருத்து வெளியிட்டுள்ளனர்.
- சிகிரியா ஓவியங்களின் கலைப்பாணி பற்றிய கருத்துகளை வழங்கிய அறிஞர்கள் இது இந்திய அஜந்தா சித்திரப் பாரம்பரியத்தைச் சேர்ந்தது எனக் கூறுகின்றனர். பெரும்பாலும் அஜந்தா ‘அப்சரா’ வடிவங்களுக்கு சமமான இருள் வர்ணச் சாயல், ஒளிப்பான வர்ணச் சாயல் பெண் வடிவங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**குறிப்பு:**

- **பிரெஸ்கோ (புவனோ):** ஈரச் சுண்ணாம்புச்சாந்து மீது கனிப்பொருள்களால் தயாரிக்கப் பட்ட வர்ணங்களைப் பயன்படுத்தி வரையும் முறை.
- **பிரெஸ்கோ சிக்கோ:** உலர் சுண்ணாம்புச்சாந்து மீது கனிப்பொருள்களால் தயாரிக் கப்பட்ட வர்ணங்களைப் பயன்படுத்தி வரையும் முறை.
- **டெம்பரா:** உலர் சாந்து மீது பிணைப்பு ஊடகத்துடன் (பசையுடன்) கலந்து தயாரித்த வர்ணங்களைப் பயன்படுத்தி வரையும் முறை.





### சிகிரியா ஓவியங்களின் கலைப் பண்புகள்

- மங்கையர்களே சிகிரியா ஓவியங்களின் தொனிப்பொருளாக அமைகின்றனர்.
- இவை உடலின் மேற்பகுதி மட்டும் தெரியும் உருவங்களாக உள்ளன.
- இவ்வுருவங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்ட தன்மையை கொண்டிருக்கின்றன. இதன் மூலம் ஓவியரின் தேர்ச்சி, நுட்ப முறை என்பன பிரதிபலிக்கின்றன.
- இம் மங்கையரின் உருவங்கள் தனித்தனியாகவும், சோடியாகவும் ஒழுங்கிணைத்து வரையப்பட்டுள்ளன.
- பெண்களின் அரைக்குக் கீழே மேகக் கூட்டங்களால் மறைக்கப்பட்ட தன்மையில் இவை வரையப்பட்டுள்ளன.
- எல்லா உருவங்களும் முழுவதுமாக அல்லது சற்று சாய்வாக திரும்பிய நிலையில் உள்ளவாறு சித்தரிக்கப்பட்டுள்ளன. நேரே பார்த்துக் கொண்டு இருக்கும் விதத்தில் எவ் உருவமும் வரையப்படவில்லை.
- பல வடிவப் பூத்தட்டுகள், பூங்கொத்துகள் ஏந்திய மங்கையர்களையே உருவங்கள் சித்தரிக்கின்றன.
- அலங்கார ஆடைஅணிகலன்கள் அணியப்பட்டு இருக்கும் இவர்களின் கைகள், தலை என்பவற்றை அலங்கரிப்பதற்காக தாமரை, அலரி, நீல அல்லி போன்ற மலர்களை ஓவியர் உபயோகித்துள்ளார்.
- மஞ்சள், கபில நிறம், சிவப்பு, பச்சை, கறுப்பு வர்ணங்களை உபயோகித்து முப்பரிமாணத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.
- ஓவியங்களை வர்ணம் தீட்ட சிவப்பு, பச்சை, மஞ்சள் வர்ணங்களை பிரதானமாக உபயோகித்துள்ளார்.
- மங்கையரின் உடலை மஞ்சள், சிவப்பு வர்ணங்களால் வர்ணம் தீட்டியுள்ளார். இருளான மங்கையர்களை நீல நிறத்தைக் கொண்ட இருளான பச்சை வர்ணம் உபயோகித்து வரைந்துள்ளார்.
- உருவங்களைச் சுற்றி உயிர்த்துடிப்புள்ள இரேகைகளை சந்தத்துடன் வரைந்துள்ளார். வேகம், அளவு என்பன சிறு இரேகைகள் மூலம் காட்டப்பட்டுள்ளன. தடிப்பமான சிறு இரேகைகள் முப்பரிமாணத் தன்மையை தோற்றுவிக்கின்றன.

### சிகிரியா ஓவியங்கள் பற்றிய அறிஞர்களின் முரண்பாடான கருத்துகள்:

**பேராசிரியர் செனரத் பரணவித்தான**

சிகிரியா குபேரரின் குபேரபுரியை சித்தரிக்கின்றது. இவ்வுருவங்கள் குபேரரின் மகள்மார்களான மேகலதா (மேகம்), விஜ்யுலதா (மின்னல்) ஆகியோரைக் குறிப்பதாகவும், நீல நிற மங்கையர்கள் மேகலதா ஆவதோடு பொன்னிறத்தில் உள்ள மங்கையர்கள் விஜ்யுலதா (மின்னல்) ஆவார்கள் எனவும் கூறியுள்ளார். சிகிரியா ஓவியங்கள் தொடர்பான பல முரண்பாடான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் கூடுதலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளவை இவரது கருத்துகளேயாகும்.

**H. C. P. பெல்**

காசியப்ப மன்னனின் அரசிகளும் பணியாளர்களும் சித்தரிக்கப்பட்டுள்ளதெனக் கூறுகிறார். H. C. P. பெல் அவர்களின் கருத்துப்படி அரசகுல மாதர்கள் பொன்னிறத்திலும் பரிவாரப் பெண்கள் நீல நிறத்திலும் காட்டப்பட்டுள்ளனர். அவர்கள் பிதுரங்கல விகாரையை வணங்க செல்லத் தயாராகிய நிலையில் கைகளில் மலர் ஏந்திய வண்ணம் இருப்பதாகக் காட்டியிருக்கிறார்.

**ஆனந்த குமாரசுவாமி**

இம் மங்கையர்கள் தெவ கன்னியர்கள் (அப்சரா) என்பதை கூறுகிறார். காரணம் இதில் உள்ள எல்லாக் கன்னியர்களும் இடையின் கீழ்ப்பகுதி முகிற்கூட்டங்களால் மூடி இருக்கும் தன்மையில் காணப்படுவதும், மலர்களை தூவும் மலரேந்திய கன்னியர்களை காரணமாகக் காட்டி இதனைக் குறிப்பிடுகின்றார்.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.1 : அனுராதபுரக் காலச் சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கல் வேலைப்பாடுகள், கட்டடக் கலை படைப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.1.2 : “ அனுராதபுர புத்தர் சிலைகள்.”**

**பாடவேளை : 2**

**கற்றற் பேறுகள்:**

- அனுராதபுர காலப் புத்தர் சிலைகளைப் பெயரிடுவார்.
- அனுராதபுர காலப் புத்தர் சிலைகளின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- படைப்பாக்கப் பணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்கள், நுட்ப முறைகளை விபரிப்பார்.
- புத்தர் சிலைகளின் கலைத்துவப் பண்புகளை மதிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- அனுராதபுர புத்தர் சிலைகள்
  - சமாதி புத்தர்சிலை
  - தொலுவிலை புத்தர்சிலை
  - அவுக்கனை புத்தர்சிலை
  - பன்குளிய புத்தர்சிலை
- இணைப்பு 7.1.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.1.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.1.2.1**

- அனுராதபுரக் காலத்தைச் சேர்ந்த சிறப்பான புத்தர்சிலைகளில் ஒளிப்படங்கள் தொடர்பாக மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
- அவை தொடர்பாக மாணவருடன் கலந்துரையாடுக.
- மாணவரது அவதானிப்பு தொடர்பான தகவல்களை சேகரிக்கும்படி கூறுக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.2.2**

- இணைப்பு 7.1.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வினவப்பட்ட வினாக்களுக்கு வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.
- தமக்கிடையே கலந்துரையாடி, சரியான விடைகளைக் கண்டறியுமாறு வழிப்படுத்துக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.2.3**

- மாணவர்கள் விடைகளைக் கண்டறிந்த பின்னர். எழுமாறாகத் தெரிவு செய்த சில மாணவர்களின் விடைகளை வினவி மதிப்பிடுக.
- ஒட்டுமொத்தப் பாடத்தை மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.1.2.1, 7.1.2.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- அனுராதபுரக் கால சிலைகளைப் பெயரிடுதல்.
- சிலைகளைப் படைப்பது தொடர்பாக கிடைத்த செல்வாக்குகளை விவரித்தல்.
- கலைப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்பமுறைகளையும் விவரிக்குக.
- புத்தர் சிலைகளின் கலைத்துவப் பண்புகளை மதித்தலும் கிரகித்தலும்

**இணைப்பு 7.1.2.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள புத்தர் சிலைப் படைப்புக்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்குங்கள்.
- அனுராதபுர புத்தர் சிலைப் படைப்புக்களின் சிறப்பியல்புகளை இனங்காணுங்கள்.
- பின்வரும் அட்டவணையைப் பிரதிசெய்து பூர்த்தி செய்க.

**01. வரலாற்றுப் பின்னணியுடன் புத்தர் சிலைகளை இனங்காணல்.**

| புத்தர் சிலை | யுகம்/ காலம் | பாரம்பரியம் / பாணி | ஊடகம் | நுட்பமுறைகள் |
|---|---|---|---|---|
| சமாதி சிலை | | | | |
| தெலுவில சிலை | | | | |
| பன்குளிய சிலை | | | | |
| அவுக்கண சிலை | | | | |

**02. புத்தர்சிலைகளின் கீழ் கலைத்துவப் பண்புகளை இனங்காணல்.**


| புத்தர் சிலை | மெய்ந்நிலைகள் | முத்திரைகள் / ஆசனமுறை | தலையணி | காவியுடை | உணர்வு வெளிப்பாடு |
|---|---|---|---|---|---|
| சமாதி சிலை | | | | | |
| தெலுவில சிலை | | | | | |
| பன்குளிய சிலை | | | | | |
| அவுக்கண சிலை | | | | | |

- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.1.2.2:**

## வாசிப்புப் பத்திரம்

### சமாதி புத்தர்சிலை








- அனுராதபுர அபயகிரி விகாரை வளவில் மஹாமேவுனா பூங்காவில் (களச்சோடியின் அருகே) அமைந்துள்ள சமாதி புத்தர் சிலை.
- புத்தர் சிலையின் ஆன்மீகத் தன்மை, சமாதிப்பண்பு போன்றவற்றை நன்கு காட்டும் சிலையாகும். இலங்கையில் உள்ள தனிச் சிறப்பான ஒரு புத்தர் சிலையாகும்.
- பெரிய காது, பாதி மூடிய கண்கள், முகத்தின் சாந்தம், 'பெருங்கருணை' போன்ற சிறப்பியல்புகளை வெளிக்காட்டுவதில் கலைஞர் வெற்றி கண்டுள்ளார்.
- கி.பி. 4ம், 5ம் நூற்றாண்டில் மன்னன் மகாசேனனின் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது.
- செதுக்கல் முறையில் வடிக்கப்பட்டுள்ள இப்புத்தர்சிலை முழுப்புடைப்பாகச் செதுக்கப் பட்டுள்ளது.
- உடலின் ஒரு பக்கத்தை மட்டும் மறைத்திருக்கும் காவியுடை மடிப்புக்கள் இல்லாத துடன் உடலுடன் ஒட்டிய தன்மையையும் காட்டுகின்றது.
- உயரிய பாவ வெளிப்பாடும் முழுநிறைவும் இதன் தரத்தை மேம்படுத்தி நிற்கின்றன.
- புத்தரது கேசம் நத்தைச்சுருள் அமைப்பும், உச்சியில் குடுமியும் காணப்படும்.
- சமாதி நிலையில், தியான முத்திரையில் வீராசன முறையில் அமர்ந்திருக்கும் வகையில் இக்கற்சிலை வடிக்கப்பட்டுள்ளது.
- இந்திய குப்தர் காலக் கலைப் பண்புகளின் செல்வாக்கு இதற்குக் கிடைத்துள்ளதாகக் கருதப்படுகின்றது.

# தொலுவில புத்தர்சிலை



- அனுராதபுரம் தொலுவிலப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சிலையே தெலுவிலச் சிலை எனப்படுகிறது.
- அனுராதபுரக் காலத்தில் கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் காணப்படும் இச்சிலை, அனுராதபுர சமாதி புத்தர்சிலையை ஒத்த தன்மைகளைக் கொண்டுள்ளது.
- தியான முத்திரையில், சமாதி நிலையைக் காட்டி நிற்கும் இச்சிலை வீராசன முறையில் அமர்ந்திருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அழகிய மலர்ச்சியான தன்மையைக் காட்டும் இச்சிலை, உயர்வான பாவ வெளிப்பாட் டைக் கொண்டது.
- தலைமுடி நத்தைச்சுருள் அமைப்பையும், உச்சியில் குடுமியையும் கொண்டிருக்கும்.
- பெரிய காது, பாதி மூடிய கண்கள் ஆகியன இச்சிலையின் சிறப்பியல்புகளாகும்.
- உடலின் ஒரு பக்கத்தை மாத்திரம் மறைந்திருக்குமாறும் உடலுடன் ஒட்டியிருக்குமாறும் காவியுடை செதுக்கப்பட்டுள்ளது.
- தற்போது இச்சிலை கொழும்பு அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.
- இது ஒரு வகைக் கருங்கல்லில் பூரண புடைப்பு நுட்பமுறையில் ஆக்கப்பட்டுள்ளது.
- குப்த மரபின் பண்புகள் இச்சிலையில் காணப்படுவதாக விமர்சகர்கள் கருத்து வெளி யிட்டுள்ளனர்.


**அவுக்கன புத்தர்சிலை**





- அநுராதபுரக் காலத்திற்குரிய இப்புத்தர் சிலை நின்ற நிலைப் புத்தர் சிலைகளிடையே விசேட இடத்தைப் பெறுகிறது.
- கி.பி. 5 ஆம் நூற்றாண்டிற்கும் 8 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட படைப்பாகும்.
- கலா வாவிக்கு அருகே அவுக்கனை எனும் கிராமத்தில் உள்ளது.
- கருங்கற் பாறையில் முழுப் புடைப்புச் சிலையாக வடிக்கப்பட்டுள்ளது.
- பத்மாசனமொன்றின் மீது நிற்குமாப்போன்று வடிக்கப்பட்டுள்ள இச்சிலை ஏறத்தாழ 38 அடி 10 அங்குல உயரமானது.
- வலது கையினால் அபய முத்திரை காட்டப்பட்டுள்ளதோடு, இடது கையினால் காவியுடை மடிப்பும் தாங்கப்பட்டுள்ளது.
- உடலின் ஒரு பக்கத்தை மாத்திரம் மறைத்துள்ள காவியுடை சந்தத்துடன் கூடிய சுருக்குகளின் கோலத்தினால் அழகு பெற்றுள்ளதோடு, உடலோடு ஒட்டிய தன்மையையும் காட்டி நிற்கிறது.
- தலையின் மீது தீச்சுடர் அலங்காரம் இடப்பட்டுள்ளது. இது பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட ஓர் அம்சமாகும் எனும் அபிப்பிராயம் காணப்படுகின்றது.
- இச்சிலையில் இந்திய அமராவதி கலை மரபின் பண்புகளின் தாக்கம் காணப்படுவதாக கலை விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
- புத்தரின் மகா புருஷ இயல்பு சிறப்பாக வெளிக்காட்டப்பட்டு உள்ள சிலையாகும்.

**பன்குளிய புத்தர்சிலை**





- அனுராதபுர யுகத்தைச் சேர்ந்த இப்புத்தர்சிலை தர்ம போதனை செய்வதைக் காட்டும் ஒரு சிறப்பாகும்.
- இப்புத்தர்சிலை அனுராதபுர பன்குளிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள அசோக்காராமய விகாரையில் உள்ளது.
- இது ஒரு கற்சிலையாகும்.
- வீராசன முறையில் அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிலை முழுப்புடைப்பாக ஆக்கப்பட்டுள்ளது.
- வலது கையினால் 'விதர்க்க' முத்திரையும் இடது கையினால் 'கடகஹஸ்த' முத்திரையும் காட்டப்பட்டுள்ளதெனக் கருதப்படுகின்றது.
- பெரிய நீண்ட காதுகள், பாதி மூடிய கண்கள், சாந்த குணம் போன்றவை இச்சிலையின் சிறப்பியல்புகளாகும்.
- புத்தரின் பெருங்கருணையுடன் கூடிய ஆன்மீனப்பண்பு இச்சிலையில் காட்டப்பட்டுள்ளது.
- உடலின் ஒருபக்கத்தை மாத்திரம் மறைக்கும் காவியுடை மடிப்புக்களற்று உடலுடன் ஒட்டியவாறு அமைந்துள்ளது.
- நத்தைச்சுருள் அமைப்புடைய கேசம், உச்சியில் 'உஷ்ணிசய' எனும் உச்சிக் குடுமி இடப்பட்டிருக்கின்றது.
- இதன் மீது 'தலையணி' அமைப்பு இருந்துள்ளதற்கு சான்றுகள் உள்ளதாக விமர்சகர்கள் கருத்து வெளிப்படுத்துகின்றனர்.

  கி.பி. 5-6 ஆம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இப்புத்தர்சிலை குப்தர் கலைப்பாணியின் இயல்புகளைக் கொண்டுள்ளது என்பது விமர்சகர்களின் கருத்தாகும்.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.1 : அனுராதபுரக் காலச் சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கல் வேலைப்பாடுகள், கட்டடக் கலை படைப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.1.3 : "இசுறுமுனியா செதுக்கல் கலைப்படைப்புக்கள்."**

**பாடவேளை** : 2

**கற்றற் பேறுகள்:**

- இசுறுமுனியா செதுக்கல்களை இனங்கண்டு பெயரிடுவார்.
- இசுறுமுனியினது வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- படைப்பாக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் விவரிப்பார்.
- இசுறுமுனியா செதுக்கல்களின் கலைத்துவப் பண்புகளை மதிப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இசுறுமுனியா செதுக்கல்களின் ஒளிப்படங்கள்
  - காதலர் செதுக்கல்
  - அரச குடும்பம் செதுக்கல்
  - குதிரைத் தலையும் மனித வடிவமும்
  - நீராடும் யானைச் செதுக்கல்
- இணைப்பு 7.1.3.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.1.3.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.1.3.1**

- இசுறுமுனியா விகாரைச் செதுக்கல்களைக் காட்டும் ஒளிப்படங்களை வகுப்பில் காட்சிப் படுத்தி அது தொடர்பாக மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
- இசுறுமுனியா செதுக்கல்களின் கலைப்பாணி, பெற்ற செல்வாக்குகள் ஆகியன குறித்து மாணவரின் முன்னறிவை வினவுக.
- இசுறுமுனியா செதுக்கல்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுமாறு மாணவனை வழிப்படுத்துக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.3.2**

- இணைப்பு 7.1.3.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.3.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வினவப்பட்ட வினாக்களுக்கு வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.3.3**

- மாணவர்கள் விடைகளைக் கண்டறிந்த பின்னர். எழுமாறாகத் தெரிவு செய்த சில மாணவர்களிடம் விடைகளை வினவி மதிப்பிடுக.
- ஒட்டுமொத்தச் செயற்பாட்டை மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.1.3.1, 7.1.3.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- இசுறுமுனியா செதுக்கல்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிதல்.
- இசுறுமுனியா செதுக்கல்களை இனங்கண்டு பெயரிடுதல்.
- அப்படைப்புக்களுக்கு அடிப்படையாக அமைந்த செல்வாக்கு, ஊடகங்கள், நுட்பமுறைகளை விபரித்தல்.
- இசுறுமுனியா செதுக்கல்களின் கலைப்பண்புகளை விபரித்தல்.

**இணைப்பு 7.1.3.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள இசுறுமுனியா விகாரைச் செதுக்கல் படைப்புக்கள் காட்டும் ஒளிப்படங்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்குங்கள்.
- இசுறுமுனியா செதுக்கல் படைப்புக்களில் காணப்படும் சிறப்பியல்புகளை இனங் காணுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  - (1) இசுறுமுனியா விகாரையில் செதுக்கல் படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
    - யுகம் / காலம்
    - அனுசரணை
  - (2) இசுறுமுனியா விகாரைச் செதுக்கல் படைப்புக்களைப் பெயரிடுக.
  - (3) இசுறுமுனியா செதுக்கல் படைப்புக்கள் தொடர்பான பின்வரும் விடயங்களைத் துணையாகக் கொண்டு, கலைத்துவ மதிப்பீட்டைச் செய்க.
    - ஊடகம்
    - நுட்பமுறை
    - கலைப்பாணி / செல்வாக்கு
    - கலைத்துவப் பண்புகள்
      - உருவங்களின் கையாள்கை (உடல் - மெய்நிலைப் பண்புகள், ஆடையணிகள்)
      - பாவ வெளிப்பாடு
  - (4) இசுறுமுனிய செதுக்கல் படைப்புக்களின் கலைத்துவப் பண்புகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள வியாக்கியானங்களை விபரிக்குக.

- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.1.3.2:**

## வாசிப்புப் பத்திரம்

- இசுறுமுனிய விகாரையும் அங்கு காணப்படும் செதுக்கு வேலைப்பாடுகளும் அனுராதபுர காலத்தைச் சேர்ந்தவையாகும்.
- இசுறுமுனிய விகாரை அனுராதபுர திசாவாவியினருகே ‘‘ரன் மசு’’ பூங்காவிற்கு தெற்கில் அமைந்துள்ளது.
- இது இலங்கையில் அமைக்கப்பட்ட முதல் பௌத்த வணக்கத் தலமான விகாரை எனக் கருதப்படுகிறது.
- இது மகிந்த தேரரிடம் குருத்துவம் பெற்ற அரிட்ட குமாரன் முதற் கொண்டு இசுறு குலத்தோர் 500 பேர்கள் வாழ்ந்த இடமெனவும் மகாவம்சம் கூறுகிறது. இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தேவநம்பியதீசன் மன்னனால் கட்டுவிக்கப்பட்டது என மகாவம்சம் கூறுகிறது.




- வணக்கத் தலமாக இருந்தபோதும், இங்கு காணப்படும் கலை நிர்மாணங்கள் சமயச் சார்பற்ற தொனிப்பொருள்களை கொண்டவையே.
- அரைப் புடைப்பு, சிறுபுடைப்பு நுட்ப முறையிலான மனித விலங்கு உருவங்களும் செதுக்கல்களும் இவற்றுக்கு சான்று பகிர்கின்றன.
    - காதலர் சிற்பம்
    - அரச குடும்பம் செதுக்கல்
    - குதிரைத் தலையும் மனித உருவமும்
    - நீராடும் யானைகள்
- இச்செதுக்கல் படைப்புக்களில் உருவங்களின் தன்மை, விடயப்பொருள் ஆகியவற்றைக் காட்டுவதற்காக குப்தர் மற்றும் பல்லவர் கால இந்து கலைப் பொருள்களின் செல்வாக்கு பெறப்பட்டுள்ளது என்பது விமர்சகர்களின் கருத்தாகும்.
- இசுறுமுனிய செதுக்கல்கள் இலங்கையின் அருஞ் செல்வங்களாக கருதப்படும் நிலைத்துள்ள நிர்மாணங்களாகின்றன.
- இவற்றில் காணப்படும் கலைப் பண்புகள்
    - தளத்துக்குப் பொருத்தமாகச் செதுக்கப்பட்டிருத்தல்.
    - உணர்வுகள் முகத்தினாலும் மெய்ந்நிலைகளாலும் காட்டப்பட்டிருத்தல்.
    - இயற்கையான வடிவங்களும் மெய்ந்நிலைகளும் சந்தத்துடன் வெளிப்பட்டிருத்தல்.
    - மென்மையான, ஒப்பமான முழுநிறைவைக் கொண்டிருத்தல்.

## அரச குடும்பம் செதுக்கல்



- இசுறுமுனிய செதுக்கல்களுள் அரச குடும்பக் காட்சியை சித்தரிக்கும் செதுக்கல் முக்கியத்துவம் வாய்ந்தது.
- இது 4 அடி நீளமுடைய அரைவட்ட வடிவமான கற் தகட்டில் அரைப்புடைப்பு நுட்ப முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- அரை வட்டவடிவ கற் தகட்டில் உருவங்களை சிறப்பாக ஒழுங்கமைத்து நடுவில் அரச தோரணையில் அமர்ந்திருக்கும் உரு உள்ளது.
- வலதுபுறத்தே கைகளை நெஞ்சு மீது கட்டி அமர்ந்த நிலையில் உள்ள ஓர் ஆணும், அவரின் பின்னால், மத்தியில் உள்ள உருவம் சாமரை வீசும் மற்றொருவரும் (சேவகன்) உள்ளனர்.
- பேராசிரியர் செனரத் பரணவித்தானவின் கருத்துக்கமைய இது துட்டகைமுனு மன்னனின் குடும்பமாகும்.
- அரச ஆடையணிகள் தரித்து மத்தியில் இருக்கும் உருவில் துட்டகைமுனு மன்னனும், வலதுபுறத்தே நெஞ்சு மீது கைகளைக் கட்டி நிற்கும் உருவம் குமாரன் சாலியனும் காட்டப்படுவதாக பரணவிதாரன அவர்கள் கருதப்படுகின்றன.
- அலங்கார ஆடை அணிகலன்களுடன் கூடிய உருவங்கள் லயத்துடன் செதுக்கப்பட்டுள்ளது.
- உணர்வுபூர்வ வெளிப்பாடு முகத்திலும், மெய்நிலைகளிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- மிருதுவாக அரைப்புடைப்பு நுட்ப முறையில் செதுக்கப்பட்ட ஆக்கம்.

## காதலர் சிற்பம்



- குப்த சிற்பக் கலை மரபில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இது சதுரவடிவ கற் தகட்டில் அரை புடைப்பு சிற்ப நுட்ப முறையில் செதுக்கப்பட்டுள்ளது.
- இந்நிர்மாணிப்புத் தொடர்பாக பல கருத்துகள் உள்ளன. பேராசிரியர் செனரத் பரணவித்தான தெரிவித்துள்ள கருத்தே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதில் சாலிய குமாரனும் அசோகமாலாவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகிறார். இவர்களது காதற் கதையுடன் தொடர்புள்ள 'ரன் மசு உயன' பூங்கா அண்மையில் அமைந்திருப்பதை அதற்கான காரணமாகக் காட்டியுள்ளார்.
- இந் நிர்மாணிப்பு பற்றிய ஏனையவர்களது கருத்துகள் பின்வருமாறு உள்ளன.
  - சிவ பார்வதி என்பது
  - மஞ்சுசிறீ போதிசத்துவரின் ஒரு வேடம் என்பது
  - படைவீரனும் அவனது காதலியும் என்பது
- அலங்கார ஆடைஅணிகலன்கள், ஆண்மை, சிறந்த தேக லட்சணம், உணர்வு வெளிப்பாடு, காதல் போன்ற பாவ உணர்வுகளுடன் இச்சிற்பம் பொளியப்பட்டுள்ளது.
- மென்மை, ஒப்பமான தன்மை, இயல்பான தளவடிவங்கள், சந்தத்துக்கு இசைவான தன்மையுடன் மெய்ந்நிலை வெளிப்பாடு போன்றவை இச்சிற்பத்தின் சிறப்பியல்பாகும்.

### குதிரைத்தலையும் மனித வடிவமும்



- இசுறுமுனிய விகாரைக் குளத்துடன் இணைந்த பாறைச் சுவர் மீது அமர்ந்திருக்கும் மனிதனும், குதிரை ஒன்றின் தலைப்பகுதியும் பொழியப்பட்டுள்ளது.
- மனிதன் கம்பீரமாக அமர்ந்து குளத்தை பார்த்துக் கொண்டு இருக்கும் விதம் காட்சிப் படுத்தப்பட்டிருக்கிறது.
- ‘மகாரஜ’ தோரணையில் அமர்ந்து இருப்பதாகக் கூறப்படுகிறது.
- ஆடையணிகள் மிகக் குறைவாகவும் எளிமையாகவும் காட்டப்பட்டுள்ளன. தலையணி, காதுகளிலும் கைகளிலும் ஆபரணங்கள், இடையில் குறுஆடை போன்றவை உள்ளன.
- அவரது வலது புயத்தில் மாட்டப்பட்டுள்ள கயிறு குதிரையுடன் இணைந்ததாகும். குதிரையின் தலை மாத்திரம் காட்டப்பட்டுள்ளது.
- பேராசிரியர் செனரத் பரணவிதான அவர்களின் கருத்துப்படி மனிதனும் குதிரைத்தலையும் நீரையும் அக்கினியையும் குறிக்கிறது. மனிதன் மழைக்கு அதிபதி வருணபகவான் எனவும், குதிரை மின்னலைக் குறிப்பதாக அவர் கருத்து.
- போர்வீரன் கபில ரிஷி என்னும் வேறு கருத்துக்களும் நிலவுகின்றன.
- பல்லவ சிற்ப மரபைத் தழுவி எளிமையான சுபாவத்தில் கம்பீரமான தோற்றத்துடன் பொழியப்பட்டிருப்பதும் சிறப்பாகும்.
- இது (அரைப்புடைப்பு) குறைபுடைப்பு நுட்பமுறையில் செதுக்கப்பட்டுள்ளது.
- மென்மையாகவும் மெருகுடனும் பூரணப்படுத்தி அரைப்புடைப்பு நுட்ப முறையில் பொழியப்பட்டுள்ளது.

## நீராடும் யானைகள்





- இசுறுமுனிய விகாரைக் குளத்துடன் இணைந்த பாறைச் சுவரில் இயற்கையான உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- இயற்கைக் கற்பாறையில் அரைப்புடைப்பு நுட்ப முறையில் இச்சிற்பம் செதுக்கப் பட்டுள்ளது. குளத்தில் இறங்கி நீராடும் யானைகளின் பல்வித மெய்நிலைகளின் காட்சி பாறைச் சுவரில் அரைப்புடைப்பில் செதுக்கப்பட்டுள்ளது.
- யானை உருவங்கள் நேராகவும் பக்கவாட்டிலும் அமைந்துள்ளன.
- யானைகளின் அசைவு, சந்தம், துடிப்பு என்பன வெளிப்படும் விதத்தில் ஒருங்கிணைத்து செதுக்கப்பட்டுள்ளன.
- பல்லவ சிற்ப மரபில் செதுக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் மாமல்புரத்து கங்காவரோகணச் செதுக்கல்களை ஒத்திருப்பதாக கருதப்படுகிறது.
- இயற்கை வடிவமைப்பில் மிருதுவான தன்மையில் மெய்நிலைகள் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.2 : பொலநறுவைக் காலத்துச் சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கு வேலைப்பாடுகள், கட்டட நிர்மாணிப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.2.1 : “திவங்க சிலைமனை ஓவியப் படைப்புக்களை மதிப்போம்.”**

**பாடவேளை : 1**

**கற்றற் பேறுகள்:**

- ‘திவங்க’ சிலை மனைச் சுவரோவியங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவார்.
- திவங்க சிலை மனைச் சுவரோவியங்களைப் பெயரிடுவார்.
- திவங்க சிலை மனை ஓவியங்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- படைப்பாக்கப் பணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்பமுறைகளையும் விவரிப்பார்.
- திவங்க சிலை மனை ஓவியங்களின் கலைப்பண்புகளை மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- திவங்க சிலைமனைச் சுவரோவியங்களைக் காட்டும் ஒளிப்படங்கள் / படங்கள்
  - தேவர் அழைப்பு
  - புத்தர் சங்கஸ்ஸ புரத்திங்கு வருகை தரல்.
  - ஜாதகக் கதைகள்
- இணைப்பு 7.2.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.2.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.2.1.1**

- ‘திவங்க’ சிலை மனை ஓவியங்கள் தொடர்பாக மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- திவங்க சிலை மனை ஓவியங்கள், அவை தொடர்பான தகவல்களைத் திரட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.
- அக்கலைப் படைப்புக்கள் தொடர்பாக மாணவரது முன்னறிவை வினவியறிக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.1.2**

- இணைப்பு 7.2.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வினவப்பட்ட வினாக்களுக்கு வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.1.3**

- எழுமாறாக மாணவர் சிலரது விடைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துக.
- ஒட்டுமொத்தச் செயற்பாட்டை மீட்டாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.2.1.1, 7.2.1.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- பொலனறுவைக் காலத்தைச் சேர்ந்த தலைசிறந்த ஓவியப் படைப்புக்களைக் கொண்ட 'திவங்க சிலை மனை' தொடர்பான வரலாற்றுத் தகவல்களைத் தேடியறிதல்.
- ஆக்கப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த செல்வாக்கு, ஊடகம், நுட்பமுறைகள், கலைஞர்கள் தொடர்பாகத் தேடியறிதல்.
- திவங்க சிலை மனைச் சுவரோவியங்களின் கலைத்துவப் பண்புகளை மதித்தல்.

**இணைப்பு 7.2.1.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள திவங்க சிலை மனை ஓவியப் படைப்புக்களை நன்கு அவதானி யுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்குங்கள்.
- திவங்க சிலை மனைச் சுவரோவியங்களில் காணப்படும் சிறப்பியல்புகளை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  - (1) திவங்க சிலை மனைச் சுவரோவியங்களின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
    - யுகம் / காலம்
    - அனுசரணை
  - (2) திவங்க சிலை மனையில் காணப்படும் சுவரோவியங்களைப் பெயரிடுங்கள்.
  - (3) பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு திவங்க சிலை மனை ஓவியங்களின் கலைப்பண்புகளை மதிப்பிடுக.
    - கலைப்பாணி / மரபு
    - ஊடகம்
    - கலைத்துவப் பண்புகள்
      - தளத்தின் மீது,
        - உருவப்பயன்பாடு
        - வர்ணப் பயன்பாடு
        - கோடுகளின் பயன்பாடு
        - பாவ வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.2.1.2:**

# வாசிப்புப் பத்திரம்

## திவங்க சிலை மனை ஓவியங்கள்


- கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் செய்விக்கப்பட்ட திவங்க சிலைமனை, பௌத்த ஓவியக் கலையின் சிறப்பான ஆக்கங்களைக் கொண்ட பண்டைப் பௌத்த கட்டடக்கலையாக்கமாகும்.
- பொலநறுவைக் கால, இந்து கட்டடக்கலையின் செல்வாக்கைக் கொண்ட ஒரு சிறந்த பௌத்தச் சிலைக்கூடமாக இது கருதப்படுகின்றது.
- பொலனறுவைக் கால ஓவியக்கலை தொடர்பான சிறந்த அம்சங்கள் அச்சிலைமனையில் காணப்படுகின்றது.
- இலங்கை ஓவியக்கலை வளர்ச்சியின் இரண்டு யுகங்களைச் சேர்ந்த ஓவியக்கலைப் பாணிகளை இங்கு காண முடிகின்றது.
- அர்த்த மண்டபத்தில் காணப்படும் ‘தேவாரதனாவ’ எனும் ஓவியமும், கர்ப்பக்கிரகத்தில் உள்ள ‘சங்கஸ்ஸ புரத்துக்கு வருகை தருதல்’ எனும் ஓவியமும் முன்னைய காலத்தைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன.
- பிரவேச மண்டபத்தில் காணப்படும் போதிசத்துவரைக் காட்டும் ஜாதகக் கதை ஓவியம், பிற்காலத்தில் வரையப்பட்ட ஒன்றாகக் கருதப்படுகின்றது.
- ஜாதகக் கதைச் சித்திரங்களுள் தேமிய ஜாதகம், சச ஜாதகம், அசங்கவதீ ஜாதகம், சுள்ள மதும ஜாதகம் ஆகியன பிரதானவையாகும்.
- ஆரம்ப கால ஓவியங்களாகக் கருதப்படும் கர்ப்பக்கிரக மற்றும் அர்த்தமண்டப ஓவியங்கள் அனுராதபுர ஓவியக்கலைப் பண்புகளைக் காட்டுகின்றன.
- பிரவேச மண்டபத்தில் காணப்படும் பிற்கால ஓவியங்களாக ஜாதகக் கதை ஓவியங்கள், நிரையாக வரைதல், தொடர்ச்சியான கதை, பக்கத்தோற்ற உருவம், பின்னணியாக சிவப்பு நிறப் பயன்பாடு போன்றவை ஜாதகக் கதை ஓவியங்களின் சிறப்பியல்புகளாகும்.
- திவங்க சிலை மனைச்சித்திரம் உலர் சாந்தின் மீது வரையப்பட்ட நுட்ப முறையைக் கொண்டதாகக் கருதப்படுகிறது.
- பின் செந்நெறிப் பாரம்பரியக் கலைப்பண்புகளாக இவ்வோவியங்களுக்கான அடிப்படை யாகக் கொள்ளப்பட்டுள்ளன என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

**தேவாராதனாவ ஓவியம் (தேவ அழைப்பு)**



- இவ்வோவியம் திவங்க சிலை மனையில் அர்த்த மண்டபத்தில் காணப்படுகிறது.
- தேவலோகத்தில் வசித்த போதிசத்துவருக்கு மண்ணுலகில் பிறக்கும்படி தெய்வத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பு இதில் காட்டப்படுகிறது.
- அலங்காரமான ஆடை அணிகளுடன் காட்சியளிக்கும் தேவர்களின் உருவங்கள் தளம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் உயிர்ப்புடன் வரையப்பட்டுள்ளது.
- வணங்கும் நிலையிலும், மலர் தூவும் நிலையிலும் உள்ள தேவர்கள் பொன்னிறத்தில் காட்டப்பட்டுள்ளதுடன் போதிச்சத்துவர் வடிவத்திற்கு நீலத்தை ஒத்த இளம்பச்சை நிறத்தில் உடலை வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. இவை அஜந்தா பத்மபாணி போதிசத்து வரின் உருவுக்கு ஒத்த தன்மையைக் கொண்டிருக்கிறது.
- இவற்றை சிவப்பு, கபிலநிறம், மஞ்சள் போன்ற வர்ணங்களை அதிகளவில் உபயோகித்து தீட்டியுள்ளார்.
- இடப்பரப்பில் அதிகளவிலான உருக்களை ஒழுங்கமைத்துள்ளமை அவ்வாக்கத்தில் காணக்கூடிய சிறப்பான பண்பாகும்.

**சங்கஸ்ஸபுரத்திற்கு ஏணியால் வருகை தரல்**





- இவ்வோவியம் சிலையை வைக்கத் திட்டமிட்ட இடத்தின் கர்ப்பக் கிரகத்தில் காணப்படுகிறது.
- இவ்வோவியத்தில் பிரம்மாவால் படைக்கப்பட்ட ஏணியால் புத்தபெருமான் சங்கஸ்ஸ

புரியை அடையும் காட்சியும், திவ்யராஜனுக்கு உபதேசம் செய்வதற்கு 'தவ்திசா' தேவலோகத்துக்கு வருகை தரும் காட்சியும் காட்டப்பட்டுள்ளது.

- பாரிய தளத்தில் வரையப்பட்டுள்ள இந்த ஓவியத்தில் புத்த பெருமானின் உருவம் இயல்பான அளவை விட பெரிய அளவில் வரையப்பட்டுள்ளது.
- முற்பட்ட காலப் படைப்பாகக் கருதப்படும் இது அனுராதபுர ஓவியக்கலைப் பண்புகளைக் கொண்டது.
- நிறந் தீட்டுவதற்காக சிவப்பு, கபிலம், மஞ்சள் வர்ணங்கள் அதிகளவில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.
- 'தேவாராதனாவ' ஓவியத்தின் ஒத்த கலைப்பாணியைக் கொண்டதுடன் வர்ண உபயோகமும் ஒத்திருக்கின்றன.

**தேமீக ஜாதகம்**



- தேமீக ஜாதகத்தில் போதிசத்துவரைக் காட்டும் சிறப்பான ஓர் ஓவியப்பகுதியாக இவ் வோவியத்தைக் குறிப்பிடலாம்.
- ஜாதகக் கதை ஓவியங்களுள் மிகத் தெளிவாகத் தெரியும் ஓவியப்பகுதியாக இதனை இனங்காணலாம்.
- குதிரை இரதத்தில் கை கால்களை அசைக்காது வைத்திருக்கும் தேமீக குமாரனும், குழி பறிக்க ஆயத்தமாகும் சுனந்த எனும் இரதமோட்டியும் அவனுக்கு முன்னால் போதிசத்துவர் போன்று நிற்கும் தேமீக குமாரனும் காட்டியுள்ளார்.
- நிறந் தீட்டுவதற்காக கபிலம், செங்கபிலம், மஞ்சள் ஆகிய வர்ணங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இவ்வோவியங்கள் கண்டிக்கால ஓவிய மரபைச் சேர்ந்த பண்புகளைக் கொண்டவை.
- ஓவியங்கள் நிரையாக வரையப்பட்டிருத்தல், கதைத் தொடர்ச்சி, பக்கத்தோற்ற உருவங்கள், பின்னணிக்காக சிவப்பு நிறம் பயன்படுத்தப்பட்டிருத்தல் போன்றவை ஓவியங்களில் காணப்படும் சிறப்பியல்புகளாகும்.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.2 : பொலநறுவைக் காலத்துச் சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கு வேலைப்பாடுகள், கட்டட நிர்மாணிப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.2.1 : " பொலநறுவைக் காலத்து சிலைகள்."**

**பாடவேளை : 2**

**கற்றற் பேறுகள்:**

- பொலநறுவைக் காலத்து சிலைகளைக் குறிப்பிடுவார்.
- சிலை நிர்மாணங்களின் வரலாற்றுப் பின்னணியை தேடியறிவார்.
- நிர்மாணத்துக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் விபரித்துக் கூறுவார்.
- பொலநறுவைக் காலத்து சிலைகள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- பொலநறுவைக் காலத்து சிலைகளை மதித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பொலநறுவைக் காலத்து சிலை நிர்மாணங்களின் நிழற்படங்கள்.
  - கல் விகாரைப் புத்தர் சிலைகள்
  - பொற்குள் விகாரைச் சிலை
- இணைப்பு 7.2.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.2.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.2.2.1**

- பொலநறுவைக் காலத்து சிலை நிர்மாணங்களின் நிழற்படங்கள் தொடர்பாக மாணவர் களது கவனத்தை ஈர்க்க.
- கல் விகாரை புத்தர் சிலைகளினதும், பொத்குல் விகாரை சிலைகளினதும் கலைப்பாணி, பாரம்பரியம் என்பவை பற்றி மாணவர்களிடம் வினவுக.
- கல் விகாரை புத்தர் சிலைகள், பொத்குல் விகாரை புத்தர் சிலைகள் பற்றிய தகவல்களை சேகரிக்க மாணவர்களைப் பணிக்க.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.2.2**

- இணைப்பு 7.2.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வினவப்பட்ட வினாக்களுக்கு வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.2.3**

- எழுமாறாக மாணவர் சிலரது விடைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துக.
- ஒட்டுமொத்தச் செயற்பாட்டை மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.2.2.1, 7.2.2.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- கல்விகாரை புத்தர் சிலைகளினதும் பொத்குல் விகாரைப் புத்தர் சிலைகளினதும் தகவல்களை தேடியறிதல்.
- கல்விகாரை புத்தர் சிலைகளிலும், பொத்குல் விகாரை புத்தர் சிலைகளிலும் காணப்படும் அடிப்படை இயல்புகளைத் தேடியறிதல்.
- பொலநறுவைக் காலத்து புத்தர் சிலகைளையும் பொத்குல் விகாரை சிலைகளையும் நிர்மாணிக்க அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்ப முறைகளையும் விபரித்துக் கூறல்.
- கல்விகாரை புத்தர் சிலைகளினதும், பொத்குல் விகாரை புத்தர் சிலைகளினதும் கலைத்துவப் பண்புகளை மதித்து நயத்தல்.

**இணைப்பு 7.2.2.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள கல்விகாரை புத்தர் சிலைகளினதும் பொத்குல் விகாரை புத்தர் சிலைகளினதும் நிழற்படங்களை கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்குங்கள்.
- கீழே உள்ள அட்டவணையை பிரதிசெய்து பூர்த்தி செய்க.

(1) வரலாற்றுப் பின்னணியுடன் புத்தர் சிலைகளை இனங்காணல்.

| புத்தர் சிலை | காலம் நூற்றாண்டு | அனுசரணை வழங்கியவர் | பாரம்பரியம்/ கலைப்பாணி | ஊடகம் | நுட்பமுறை |
|---|---|---|---|---|---|
| சமாதி புத்தர்சிலை | | | | | |
| வித்தியாதர குகைப் புத்தர்சிலை | | | | | |
| நின்றநிலை புத்தர்சிலை | | | | | |
| துயில்நிலை புத்தர்சிலை | | | | | |

(2) ஒவ்வொரு சிலையினதும் கலைத்துவப் பண்புகளை இனங்காணல்.

| புத்தர் சிலை | முத்திரையும் மெய்நிலையும் | ஆசனமும் முறையும் | உச்சிக் குடுமி / தலையணி | காவி உடை | தலைப் பகுதிப் பண்புகள் | ஏனைய கலைத்துவப் |
|---|---|---|---|---|---|---|
| சமாதி புத்தர்சிலை | | | | | | |
| வித்தியாதர குகைப் புத்தர்சிலை | | | | | | |
| நின்றநிலை புத்தர்சிலை | | | | | | |
| துயில்நிலை புத்தர்சிலை | | | | | | |

(3) பொத்குல் விகாரை சிலை தொடர்பாக பின்வரும் விடயங்களின் கீழ் தகவல் களைத் திரட்டுக.
- காலம் / யுகம்
- ஊடகம்
- நுட்பமுறைகள்
- கலைத்துவப் பண்புகள்
  - உருவ உபயோகித்தலும், சுபாவமும் (மெய்நிலைப் பண்பு, ஆடை, அணிகலன் ஆகியவை)
- உணர்ச்சி வெளிப்பாடு

- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.2.2.2:**

## வாசிப்புப் பத்திரம்

**பொலநறுவை கல்விகாரைப் புத்தர் சிலைகள்**

- கி.பி. 12ம் நூற்றாண்டில் பொலநறுவைக் காலத்தில் மகா பாராக்கிரமபாகு மன்னன் காலத்தில் இந்த விகாரை அதாவது உத்தராராமை நிர்மாணிக்கப்பட்டது.
- கருங்கல்லில் நான்கு சிலைகள் வடிக்கப்பட்டுள்ளதால் கல்விகாரை எனப்பட்டது.
- கல்விகாரை புத்தர் சிலைகள் தேரவாத பௌத்த எண்ணக்கருவை விட மகாயான பௌத்த எண்ணக்கருவை எடுத்துக்காட்டுவதாக விமர்சகர்கள் கூறுகிறார்கள்.
- கல்விகாரை புத்தர் சிலைகளில் காணப்படும் பொதுப் பண்புகள்
  - மகாயான கலைப் பாரம்பரிய இயல்புகளை கொண்டதுடன் கருணைத் தோற்றத்தை விட வீரக் குணங்களையும், வீரத்தன்மைகளையும் கொண்டதாகக் காட்டுகிறது.
  - ஒரு பக்கத்தை மறைக்கும் உடலோடு ஒட்டிய காவியுடை சமாந்தரமாக இடப்பட்ட இரட்டைக் கோடுகளால் அமைக்கப்பட்டிருத்தல்.
  - அரைவாசி மூடிய கண்கள், நீண்ட காதுகள்
  - சுருள் தலைமுடி கொண்ட உச்சிக் குடுமியும் காட்டப்படல்.


## அமர்ந்த நிலையிலிருக்கும் பாரிய சமாதி புத்தர் சிலை





- கல்விகாரை புனித பூமிக்குள் வீராசணத்தில் அமர்ந்த நிலையில் காணப்படும் பெரிய புத்தர் சிலை இதுவாகும்.
- புடைப்புச் சிற்பமாகிய இது தியான நிலையை குறித்து நிற்கிறது.
- இதன் ஆசனத்தில் வஜிர குறியீட்டு அலங்காரங்களும், சிம்ம உருவங்களும் பொளியப்பட் டுள்ளன. இவ்வாசனம் வஜிராசனம் என அழைக்கப்படுகிறது.
- புத்தர் சிலையின் தலைக்குப் பின்னால் தாமரைப் பூ அலங்காரங்களைக் கொண்ட ஒளிச் சுடருடன் அலங்கார தோரண வேலைப்பாடும் இருக்கிறது.
- இங்கே செங்குத்தாகவும் கிடையாகவும் அமைந்த தூண்களும், சிறிய புத்தர் சிலைகளைக் கொண்ட விமான அலங்காரங்களும் உள்ளன. கிடையாக அமைந்த தூண்களின் அந்தங்களில் மகர வாயும் சிம்ம உருவமும் செதுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.
- இயல்பாக கல்லின் மீது ஒப்பமாகப் பொளியப்பட்டுள்ள இச்சிலையின் ஒரு புறத்தை மூடிய காவியுடை இரட்டைக் கோடுகளுடன் உடலுடன் ஒட்டியவாறு ஆக்கப்பட்டுள்ளது.
- நீண்ட காது, சுருள் முடியுடன் உச்சிக்குடுமி உள்ளது.
- படைப்பாளரின் பண்புகள் மகாயான பௌத்தத்தின் ஆதிக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது என்று விமர்சகர்களின் கருத்தாகும்.

### வித்தியாதர குகை புத்தர் சிலை



- முதன்முதலாக இயல்பான கல்லைக் குடைந்து நிர்மாணிக்கப்பட்ட மிகப் பெரிய குகையான வித்தியாதர குகை இலங்கையர்களின் செதுக்கற் கலையின் சிறந்த ஒரு படைப்பாகும்.
- வஜிரக் குறியீடுகளையும், சிம்ம உருவ செதுக்கல்களையும் கொண்ட வஜிராசனத்தின் மீது புத்த பெருமான் வீராசன முறையில், தியான நிலையில் அமர்ந்து இருப்பதை குகை மத்தியில் காணலாம்.
- அதிக புடைப்பாகப் பொளியப்பட்டுள்ள ஒரு சிலையாகும்.
- புத்தர் சிலையுடன் பல்வேறுபட்ட உருவங்கள் கற்சுவரில் புடைப்பு முறையில் ஒழுங் கிணைக்கப்பட்டுள்ளன.
- சிலைக்கு பின்னால் தோரணம் ஒன்று இருக்கிறது. தலைக்கு மேல் குடை வடிவம் ஒன்று உள்ளது. மேற்பக்கமாக இரு புறங்களிலும் இரு தேவர்களின் உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. கீழ்பக்கமாக இருபுறத்திலும் சாமரமேந்திய இருவர் காணப்படு கின்றனர். ஆசனத்தின் பிற்புறத்தில் இரண்டு பக்கங்களிலும் இரு சிங்க உருவங்கள் உள்ளன.
- மேற்புறமாக உள்ள தேவர்கள் பிரம்மாவும், விஸ்ணுவும் ஆவார்கள். சாமரமேந்திய வடிவங்கள் ‘வித்தியாதரர்கள்’ என்பது விமர்சகர்களின் கருத்தாகும்.
- கூரை அமைப்பிலும், சுவர்களிலும் தேவர்களின் உருவங்கள் அதிகம் இருந்ததாக சான்றுகள் உள்ளன. இந்திரஜால குகையில் சாக்கிய கடவுளை புத்தர் சந்திக்கும் நிகழ்வு கூரையிலும் சுவர்களிலும் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- இரட்டைக் கோடுகளாக காவியுடை செதுக்கப்பட்டுள்ள கால்கள் வீராசன முறையிலும் கைகள் தியான முறையிலும் உள்ளன.
- உயர் புடைப்பு நுட்ப முறையுடன் நிர்மாணிக்கப்பட்ட சிலை 4 அடி 7 அங்குலம் உயரமுடையது.
- நுணுக்கமாகப் பொளியப்பட்டுள்ள சிலையின் ஒரு பக்கத்தை மாத்திரம் மறைக்கும் காவியுடை, இரட்டைக் கோடுகளால் காட்டப்பட்டுள்ளது.
- நீண்ட காதுகள், சுருள் முடி மீது உச்சிக்குடுமி காட்டப்பட்டுள்ளது.
- சிலையினால் காட்டப்படும் படைப்பாக்க அம்சங்கள் மூலம் மகாயான எண்ணக்கருக்களை வெளிக்கொணர முயற்சி செய்யப்பட்டுள்ளது என்பது விமர்சகரின் கருத்தாகும்

## நின்ற நிலை சிலை





- தாமரை பீடத்தின் மீது மூவளைவுகளுடன் (திரிவங்க) நின்ற நிலையாக நிர்மாணிக்கப் பட்ட இச்சிலை அதிபுடைப்புச் சிலையாகப் பொளியப்பட்டுள்ளது.
- ஒப்பமாக வடிக்கப்பட்டுள்ள சிலையின் காவியுடையின் மடிப்புகள் சமாந்தரமான இரட்டைக்கோடுகளால் அமைக்கப்பட்டது.
- சிலையின் கைகள் நெஞ்சின் மீது குறுக்காக கட்டப்பட்ட நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் செனரத் பரணவித்தான அவர்கள், இச்சிலை 'பிறரின் துக்கத்திற்கு துக்கித்தல் தன்மை' வெளிப்படும் வகையில் செதுக்கப்பட்டுள்ளது என்கிறார்.
- புத்தபெருமானின் பரிநிர்வாணத்தை (இறப்பை) இட்டு வேதனைப்படும் இது ஆனந்த தேரரின் சிலை எனக் கருதப்படுகிறது.
- இச்சிலையில் காணப்படும் முத்திரை பற்றி வேறு கருத்தும் நிலவுகின்றது.
- நீளமான காதுகள், குடுமி, சற்று சுருண்ட முடி, தாமரை மீது வீற்றிருத்தல் ஆகியவற்றைக் கருதி இச்சிலை புத்தர் சிலை எனக் கருதப்படுகிறது. ஏனெனில் தெய்வீக வடிவங்கள் மாத்திரமே தாமரை மலர் மீது காட்டப்படும்.

## துயில்நிலைப் புத்தர் சிலை








- கல்விகாரையின் வலதுபுற ஓரத்தில் காணப்படும் இது துயில் நிலையில் இருக்கும் புத்தர் சிலை ஆகும்.
- இச்சிலை புத்த பெருமானின் பரிநிர்வாண நிலையைக் காட்டுவதாக சிலரால் நம்பப் படுகிறது. இருந்தபோதும் இது புத்தபெருமானின் துயில் நிலை என்பது தற்போதைய விமர்சகர்களின் கருத்தாகும்.
- உயர்வான கலைப்பண்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சுருட்டை முடியைக் கொண்டது. சமாந்தரக் கோடுகளைக் கொண்ட அலை வடிவ மடிப்புகளுடன் காவியுடை நிர்மாணிக் கப்பட்டுள்ளது.
- தலை வைத்துள்ள தலையணைப்பகுதி பதிந்து இருப்பது போல் நுணுக்கமான முறையில் காட்டியுள்ள விதம் அற்புதமானது.
- இக்கற்சிலை அதிபுடைப்புச் சிலையாகப் பொளியப்பட்டுள்ளது.

## பொத்குல் விகாரைச் சிலை







- பொலநறுவை பராக்கிரம சமுத்திரத்துக்கு அருகில் உள்ள பொத்குல் விகாரைக்கு முன்னால் இக் கற்சிலை அமைக்கப்பட்டுள்ளது.
- பொலநறுவைக் காலத்தில் கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததாகக் கருதப் படுகிறது.
- நன்றாக வளர்ந்த உடல் கட்டமைப்பைக் கொண்டுள்ளதுடன், ஒரு காலை ஊன்றி மற்றைய காலை இலேசாக வைத்து மூவளைவு சுபாவத்தில் புடைக்கப்பட்டுள்ளதால் உடலின் சந்தத்தன்மை வெளிக்காட்டப்படுகிறது.
- எடுப்பான மனிதன் சிந்தனை வயப்பட்டிருப்பதோடு கண்களை தமது கைகளில் ஏந்தியுள்ள பொருளின் மீது செலுத்தியுள்ளார்.
- மார்பின் இரு புறங்கள் வரை நீண்டு வளர்ந்துள்ள தாடியும், இரு அந்தங்களிலும் கீழ்நோக்கி வளைந்துள்ள மீசையும் இச்சிலைக்கு சாந்தத் தன்மையை வழங்குவதோடு பெருமிதத் தன்மையைக் காட்டுகிறது.
- வேட்டி போன்ற ஓர் உடையினால் உடலின் கீழ்ப்பகுதி அழகுபடுத்தப்பட்டுள்ளது. இடுப்புப்பட்டி இடுப்பில் இறுக்கமாக அமைந்துள்ளமையால் வயிறு முன்தள்ளப்பட்டுக் காணப்படுகிறது.
- இச்சிலை பொலநறுவைக் காலச் சிற்பக் கலையின் உன்னத கலைப் பண்புகளைக் காட்டி நிற்கிறது.

**பொத்குல் விகாரை சிலை தொடர்பான கல்விமான்களின் கருத்துகள்:**

- பராக்கிரமபாகு மன்னனின் சிலை என்பது
- பொலநறுவையில் வாழ்ந்த குருளுகோமி எனும் ஞானியுடையது என்பது
- கபிலர் எனும் ரிஷியுடையது என்பது
- கையில் தாங்கியுள்ள பொருள் அரசைக் குறிக்கிறது என்பது செனரத் பரணவித்தான அவர்களின் கருத்தாகும்.
- புலஸ்தி ரிஷியைக் குறிக்கிறது என்பது

**தேர்ச்சி 7.0 :** **வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.2 :** **பொலநறுவைக் காலத்துச் சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கு வேலைப்பாடுகள், கட்டட நிர்மாணிப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.2.3 :** **" இந்துசமய சிற்பங்கள்."**

**பாடவேளை :** 2

**கற்றற் பேறுகள்:**

- பொலநறுவைக் காலத்து இந்து சமய சிற்பங்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வார்.
- பொலநறுவைக் காலத்து இந்து சமய சிற்பங்களைக் குறிப்பிடுவார்.
- நிர்மாணிப்புகளுக்கு ஆதாரமாக அமைந்த கலைப்பாணிக்குரிய இயல்புகள், நுட்ப முறைகள் பற்றி விளக்குவார்.
- பொலநறுவைக் காலத்து இந்து சமய சிற்பங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- பொலநறுவைக் காலத்து இந்து சமய சிற்பங்களின் கலைப்பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பொலநறுவைக் காலத்து இந்து படிமங்களின் புகைப்படங்கள்
  - நடராஜர் சிலை
  - பார்வதி சிலை
  - விநாயகர் சிலை
  - காரைக்கால் அம்மையார்
  - சுந்தர மூர்த்தி நாயனார்
- இணைப்பு 7.2.3.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.2.3.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.2.3.1**

- பொலநறுவைக் காலத்து இந்து சமய சிற்பங்கள் பற்றி அறிவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துக.
- பொலநறுவை காலத்து இந்து சமய சிற்பங்கள் நிர்மாணித்தல் தொடர்பாக அமைந்த தொனிப்பொருள், கலைப்பாணி, மரபு பற்றி மாணவர்களிடம் வினவுக.
- பொலநறுவை காலத்து இந்து சமய சிற்பங்களைப் பற்றிய தகவல்களை சேகரிக்கும்படி மாணவர்களைப் பணிக்க.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.3.2**

- இணைப்பு 7.2.3.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.3.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவருக்கு அறிவுறுத்துக.
- வினவப்பட்ட வினாக்களுக்கு வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.3.3**

- எழுமாறாக மாணவர் சிலரது விடைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துக.
- ஒட்டுமொத்தச் செயற்பாட்டை மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.2.3.1, 7.2.3.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- பொலநறுவை காலத்து இந்து சமய சிற்பங்கள் உருவான வரலாற்றுப் பின்னணியை ஆராய்தல்.
- நிர்மாணிப்புகளின் கலைப்பாணிக்குரிய இயல்புகள், ஊடகம், நுட்ப முறைகள் என்பன வற்றை விபரித்தல்.
- பொலநறுவைக் காலத்து இந்து சமய சிற்பங்களின் கலைப்பண்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 7.2.3.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொலநறுவைக் காலத்து இந்து சமய சிற்பங்களை நன்றாக நோக்குக.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்குங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
  (1) பொலநறுவைக் காலத்து இந்து சமய சிற்பங்களைக் குறிப்பிடுக.
  (2) இக்காலத்தின் ஒவ்வொரு ஆக்கங்களைப் பற்றியும் விளக்கிக் கூறுக.
    - காலம், நூற்றாண்டு
    - கிடைக்கப் பெற்ற இடம்
  (3) நிர்மாணித்த சிற்பங்களின் கலைப்பாணிக்குரிய இயல்புகளுக்கு அடிப்படையாக அமைந்த பின்வரும் விடயங்கள் பற்றி விபரிக்க.
    - மரபு
    - ஊடகம்
    - நுட்பமுறைகள்
    - கலைப்பண்புகள்
      - உருவங்களின் இயல்பு
        (உடல், மெய்நிலை இயல்பு, ஆடை ஆபரணம் ஆகியவை)
      - உணர்வு வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.2.3.2:**

## வாசிப்புப் பத்திரம்

### நடராஜர் சிலை



- இந்து சமயத்திற்குரிய சிலைகளுள் ஒன்றான நடராஜர் சிலை முழுமுதற் கடவுளான சிவனது (ஈஸ்வரனது) தாண்டவ நடன அமைப்பை வெளிப்படுத்தி நிற்கிறது.
- பொலநறுவை 1ம் சிவ ஆலயத்தில் கிடைக்கப் பெற்ற இந்த நடராஜர் சிலை கொழும்பு அரும்பொருட்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது.
- வெண்கலத்தை ஊடகமாகப் பயன்படுத்தி தனிநிலைச் சிற்பமாக உலோகத்தை வார்த்து மிகப் பழமை வாய்ந்த நுட்ப முறையைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட உன்னதமான படைப்பாகும்.
- சமநிலைத் தன்மை பேணும் விதத்தில் சிற்பக் கோட்பாடுகளுக்கிணங்க தீச்சுடர் வளையத்தின் மத்தியில் வேகமான நடனத்தில் ஈடுபட்டிருக்கும் விதத்தை உயரிய கலைப்பாணியுடன் காட்டப்பட்டுள்ளது.
- இச்சிலையின் பாதங்கள் மற்றும் கைகளால் காட்டப்படும் முத்திரைகளும் குறியீடுகளும் வருமாறு:
  - நான்கு கரங்களைக் கொண்டது. உடுக்கை (மேளம்) ஏந்திய மேல் வலக்கரம் பிரபஞ்சத்தின் படைப்பையும், அக்கினி ஏந்திய மேல் இடக்கரம் அழித்தலையும் குறித்து நிற்கின்றன.
  - தூக்கிய இடது கை காத்தலையும், பூமியை நோக்கியிருக்கும் வரத ஹஸ்த முத்திரையுடன் கூடிய வலது கை அருளலையும் குறித்து நிற்கிறது.
- நீண்ட கேசத்தினுள் உள்ள கங்காதேவி (கடற்கன்னி) உருவம் கங்கை நதியைக் குறிக்கிறது. தலை கிரீடத்தில் அணிந்துள்ள பிறைச் சந்திரன், கங்காதேவி, நாகம், மனித மண்டை ஓடு என்பன காட்டப்பட்டுள்ளன.

- முழுஉருவமும், தீச்சுவாலை பரப்பும் வில் வளைவொன்றினுள் அமைந்துள்ளது. பத்மா சனமொன்றின் மீது அமைந்துள்ளது. பத்மாசனமொன்றின் மீது அமைந்துள்ள இணைக்கப் பட்ட மகர வாய்களின் மூலம் இவ்வில் வளைவு ஆக்கப்பட்டுள்ளது.
- இளமையும் துடிப்பும் காட்டும் இச்சிலையில் வலக்காதில் ஆண் அணியும் குழையும் இடக்காதில் பெண் அணியும் தோடும் காட்டப்பட்டுள்ளன. கழுத்தில் ஆபரணங்கள் அணிந்து இருப்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**பார்வதி சிலை (சிவகாமசுந்தரி சிலை)**



- இச்சிலை சிவபெருமானின் பத்தினியான பார்வதி தேவியைக் குறிப்பதாகும். பர்வதத்தில் (மலையில்) பிறந்ததால் பார்வதி எனப்பட்டதாகக் கூறப்படுகிறது. சிவபெருமானின் பத்தினி (மனைவி) ஆனதால் சிவசக்தி, சிவகாமசுந்தரி எனும் பெயர்களாலும் குறிப்பிடப் படுகின்றன.
- பொலநறுவை 5 ஆம் இலக்க சிவனாலயத்தில் கண்டெடுக்கப்பட்டது. இது தற்போது பொலனறுவை நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. பெண்மையின் நளினம் வெளிப்படும் வகையில் உயர்வான சிற்பப் பண்புகளுடன் வார்க்கப்பட்ட சிலையாகும்.
- கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்குரியது. இந்த வெண்கலப் படிமம், வெண்கல ஊடகத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வார்ப்புச் சிலையாகும்.
- வலது கை கடக ஹஸ்த முத்திரையைக் காட்டி நிற்கிறது. இடது கை லோக ஹஸ்த முத்திரையுடன் கீழே தொங்கவிடப்பட்டுள்ளது.
- தலையில் நீண்ட கிரீட (மகுட) அலங்காரம், உடலை ஒட்டிய ஆடைகள், அலங்காரமான ஆபரணங்கள் சிலையின் அழகை மேம்படுத்திக் காட்டுகின்றன.
- நளினம், மென்மை, அழகு வெளிப்படும் விதத்தில் திரிபங்க (மூவளைவு) நிலையில் அழகாக அமைக்கப்பட்ட இச்சிலை மேன்மையான ஒரு படைப்பாகக் கொள்ளப்படுகிறது.

## விநாயகர் சிலை



- இப்படிமம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படும். இது ஒரு பிள்ளையார் சிலை ஆகும். பொலநறுவை 5 ஆம் இலக்க இந்து ஆலயத்தில் கண்டெடுக் கப்பட்ட ஓர் இந்துசமயச் சிலையாகும்.
- வெண்கல ஊடகத்தைப் பயன்படுத்தி வார்ப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
- சிவபெருமானினதும் பார்வதி அம்மாளினதும் மூத்த மகனே விநாயகர் ஆவார் எனக் கருதப்படுகிறது.
- யானை முகத்தையும் பெரிய உதரத்தையும் கொண்ட பிள்ளையார் புத்திக்கும் எழுத்து அறிவுக்கும் அதிபதியாவதுடன் விக்கினங்களைப் போக்குபவராகவும் கருதப்படுகிறார்.
- நான்கு கரங்களை உடையவர். மேல் (பின்பக்க) வலக் கையில் கோடரியும், மேல் (பின்புற) இடக் கையில் அரிச்சுவடியும், முன்பக்க வலக் கையில் உடைந்த தந்தமும், முன்பக்க இடக்கையில் மாங்கனி ஒன்றையும் ஏந்தி நிற்பது காட்டப்படுகிறது.
- தாமரை மலரின் மத்தியில் ராஜாசனப்பாங்கில் நிருமாணிக்கப்பட்டுள்ளது.

**காரைக்கால் அம்மையார் (படிமம்)**



- காரைக்கால் அம்மையார் எனப்படும் இச்சிலை பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த இந்து சமய சிலைகளில் ஒன்றாகும்.
- பொலநறுவை இல 5 ஆம் சிவாலயத்தில் கண்டெடுக்கப்பட்டு தற்போது அநுராதபுரம் நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.
- சிவபெருமான் மீது கொண்ட மிகுந்த இறைபக்தி காரணமாக தமது இயல்பான பேரழகெல்லாம் நீங்கி, என்பு வடிவம் தரும்படி வரம் கேட்டு மெலிந்து எலும்புந் தோலுமாக மாறிய ஒரு பெண்ணையே இது குறித்து நிற்கிறது.
- மெலிந்த விகாரமான உடலுடன் அமர்ந்து கைகளினால் தாளத்தை இசைப்பது காட்டப்பட்டுள்ளது.
- இச்சிலை இலங்கையின் இந்துசமயக் கலைப் படைப்புக்களுள் சிறப்பாக கற்பனை வெளிப்பாட்டைக் கொண்ட ஒரு படைப்பாகக் கருதப்படுகின்றது.
- கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இச்சிலை வெண்கலத்தில் வார்த்தல் நுட்ப முறையில் ஆக்கப்பட்டுள்ளன.

## சுந்தரமூர்த்தி நாயனார்




- இந்த வெண்கலச் சிலை சுந்தரமூர்த்தி நாயனார் எனும் சிவ பக்தனைக் குறிக்கின்றது.
- பொலனறுவைக் காலத்தில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு இந்துசமயச் சிலையாகும்.
- பொலனறுவை 5 ஆம் சிவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட இது தற்போது கொழும்பு அரும்பொருட்சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
- இவர் சைவசமயத்திலுள்ள அறுபத்தி மூன்று குரவர்களில் ஒருவராவார். இவர் சிவபெருமான் மீது தேவாரங்களை இயற்றி ஆலயம் ஆலயமாகச் சென்று அவற்றைப் பாடியுள்ளார்.
- மங்களகரமான வஸ்திரங்கள், ஆபரணங்கள் அணிந்து மணவாள கோலத்தில் அமைக்கப் பட்டுள்ளது.
- இளமை, எடுப்பான தன்மையுடன் அழகுற அமைந்த திரிபங்க (மூவளைவு) நிலையில் உள்ள பத்மாசன பீடத்தின் மீது அமைந்த ஒரு சிலையாகும்.
- மனித உடற் பாகங்களை தத்துரூபமாக அங்க இலட்சணங்களுடன் இயற்கையாக தோன்றும் விதத்தில் அமைக்கப்பட்ட ஒரு உலோகச் சிலை எனக் கருதப்படுகிறது.
- கைகளால் கடக ஹஸ்த முத்திரை காட்டப்படுகின்றது. பத்ர பீடம் மீது பொருத்தப்பட்ட வட்டமான தாமரை மலர் மீது மூவளைவு நிலையில் உள்ள ஒரு நிற்கும் நிலைச் சிலையாக இது வடிக்கப்பட்டுள்ளது.
- வெங்கல ஊடகத்தால் திண்ம வார்த்தல் நுட்ப முறையைப் பயன்படுத்தி இருக்கும் இது இந்து கலை நிருமாணங்களிடையே விசேடமான கலை இயல்புகளை வெளிக் காட்டும் நிருமாணிப்பாகக் கருதப்படுகின்றது.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.2 : பொலநறுவைக் காலத்துச் சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கு வேலைப்பாடுகள், கட்டட நிர்மாணிப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.2.4 : " பொலநறுவை காலத்து கட்டட நிர்மாணம்."**

**பாடவேளை : 2**

**கற்றற் பேறுகள்:**

- பொலநறுவைக் காலத்து கட்டட நிர்மாணங்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந் தறிவார்.
- கட்டட நிர்மாணத்தின் கலைப்பாணிக்குரிய இயல்புகள் நுட்ப முறைகள் என்பன வற்றை விளக்கிக் கூறுவார்.
- பொலநறுவை காலத்து கட்டட நிர்மாணங்கள் தொடர்பான தகவல்களை சேகரிப்பார்.
- பொலநறுவை காலத்தின் கட்டட நிர்மாணங்களின் கலைப் பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பொலநறுவைக் காலத்து கட்டட நிர்மாணங்களின் புகைப்படங்கள்
  - நிசங்கலதா மண்டபம்
  - பொலநறுவை வட்டதாகே
  - சிவாலயம் - 1 ஆம் இல. ஆலயம்
    - 2 ஆம் இல. ஆலயம்
- இணைப்பு 7.2.4.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.2.4.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.2.4.1**

- பொலநறுவைக் காலத்து கட்டட நிர்மாணங்கள் பற்றி அறிவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துக.
- பொலநறுவை காலத்து கட்டட நிர்மாணங்கள் நிர்மாணித்தல் தொடர்பாக அமைந்த தொனிப்பொருள், கலைப்பாணி, மரபு பற்றி மாணவர்களிடம் வினவுக.
- பொலநறுவை காலத்து கட்டட நிர்மாணங்களைப் பற்றிய தகவல்களை சேகரிக்கும்படி மாணவர்களைப் பணிக்க.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.4.2**

- இணைப்பு 7.2.4.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.4.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வினவப்பட்ட வினாக்களுக்கு வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.4.3**

- எழுமாறாக மாணவர் சிலரது விடைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துக.
- ஒட்டுமொத்தச் செயற்பாட்டையும் மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.2.4.1, 7.2.4.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- பொலநறுவை காலத்து கட்டட நிர்மாணங்கள் உருவான வரலாற்றுப் பின்னணியை ஆராய்தல்.
- நிர்மாணிப்புகளின் கலைப்பாணிக்குரிய இயல்புகள், ஊடகம், நுட்ப முறைகள் என்பன வற்றை விபரித்தல்.
- பொலநறுவைக் காலத்து கட்டட நிர்மாணங்களின் கலைப்பண்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 7.2.4.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள பொலநறுவை காலத்து கட்டட நிர்மாணங்களை நன்றாக நோக்குக.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து விளங்குங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
  (1) பொலநறுவைக் காலத்து கட்டட நிர்மாணங்களைக் குறிப்பிடுக.

  (2) பொலநறுவைக் காலத்து விசேட கட்டட நிர்மாணங்களின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
    - காலம் / யுகம்
    - அனுசரணை

  (3) அவ்வொவ்வொரு நிர்மாணிப்புப் பற்றியும் கலைத்துவ மதிப்பீட்டைச் செய்க.
    - ஊடகம்
    - ஆக்கபூர்வமான தன்மை கலைத்துவ அம்சங்கள்

- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

இணைப்பு 7.2.4.2:

## வாசிப்புப் பத்திரம்

### நிசங்க லதா மண்டபம்











- இலங்கைக் கட்டட நிர்மாணத் துறையின் உன்னத படைப்பெனக் கொள்ளப்படும் இது கி.பி. 12 ஆம் நூற்றாண்டு (கி.பி.1187-1196) காலப் பகுதிக்குரியது.
- பொலநறுவையை ஆட்சி செய்த நிசங்கமல்ல எனும் அரசனால் கட்டுவிக்கப்பட்டது.
- இம்மண்டபம் செவ்வக வடிவமுடையது.
- அனுராதபுர ஜேதவனாராமயக்கு அருகில் உள்ள நிர்மாணங்களுக்கு ஒத்ததாக சுற்றிவர கற்கிராதி வேலி அமைக்கப்பட்டுள்ளது.
- இம்மண்டபத்தின் மத்தியில் நீர்குமிழி வடிவ சிறிய தாதுகோபம் ஒன்றும் அதற்கு நுழைவதற்காக ஒரு வாயிலும் காணப்படுகிறது. தாதுகோபத்தின் அடியில், அமர்ந்து வணங்கும் மனித உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.
- அலங்காரத் தூண்களே இக்கட்டடத்தின் சிறப்பான நிர்மாணங்களாகின்றன. ஒரு கற்றூண் 7 அடி உயரமுடையது.
- இத்தூண்கள் அதுவரையில் காணப்பட்டவாறாக செங்குத்தாக அல்லாமல் இயற்கை யிலுள்ள வடிவங்களைக் கொண்டு லயத்துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- தாமரைத் தாவரத்தின் பண்புகளைச் சந்தத்திற்காக பயன்படுத்தி இத்தூண்கள் நிர்மாணிக் கப்படுகின்றது.
- தூண்களின் உச்சி பாதி மலர்ந்த தாமரை மலரின் சுபாவத்தைக் காட்டுகிறது.
- இலங்கை கட்டட நிர்மாணத் துறையின் உன்னத படைப்பாகக் கொள்ளப்படும் இது நிசங்கமல்ல அரசன் தர்ம போதனையை செவிமடுக்கவும், புனித தந்தத்தை வழிபடவும், பிரித் செவிமடுக்கவும் என சமயத் தேவைகளுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகக் கல்வெட்டு களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பொலநறுவ வட்டதாகே**





- பொலநறுவை தலதா மண்டபத்துக்கு நுழைந்ததும் இடப்புறத்தில் வட்டதாகே எனும் வட்டவடிவ தாது மண்டபத்தைக் காணலாம்.
- தலதா மண்டபத்தில் உள்ள கல்வெட்டில் குறிப்பிடப்பட்டதற்கிணங்க, பொலநறுவை வட்டதாகே நிசங்கமல்ல அரசனுடைய நிர்மாணிப்பாகக் கொள்ளப்படுவதோடு, பராக்கிரமபாகு மன்னனது நிர்மாணிப்பாக இருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகிறது.
- வெயில் மழை என்பவற்றில் இருந்து பாதுகாப்புப் பெற தூபியை சுற்றி அமைக்கப்பட்ட வட்டதாகே, சைத்தியகர தூபகர, வட்டதாதுகெய எனவும் குறிக்கப்படுகிறது.
- இது சிறிய அளவிலான தூபிகளுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.






- வட்டதாகேக்கு நுழைகையில் 1வது முற்றப் பகுதியை அடுத்துள்ள 2ம் முற்றப் பகுதியின் மத்தியில் தாதுகோபம் ஒன்றுள்ளது. 1ம் முற்றப் பகுதிக்கு நுழைய ஒரு வாயில் மட்டுமே உள்ளது. 2ம் முற்றப் பகுதிக்கு நுழைய 4 வாயில்கள் உள்ளன. இவை காவற்கல், சந்திரவட்டக்கல், கைபிடிச்சுவர் மற்றும் அலங்கார படிவரிசைகள் கொண்டதாக துவார மண்டபம் நிருமாணிக்கப்பட்டுள்ளது.
- பொலநறுவை காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கலைப் படைப்பான சந்திரவட்டக் கல்லையும், நாகராஜ உருவமுடைய காவற்கல்லையும் பிரதான முற்றப் பகுதிக்கு நுழையும் வட்டதாகேயின் வடக்கு வாயிலில் காணலாம். படிவரிசைகளின் செங்குத்தான பரப்புகளில் அலங்காரமான குள்ள உருவங்கள் (வாமன) செதுக்கப்பட்டுள்ளன.
- மேல்மாடியில் நன்கு இதழ்கள் கொண்ட அலங்கார பினரமலர் வேலைப்பாடுகளுடன் கூடிய கல்வேலி ஒன்று காணப்படுகிறது.
- தாதுகோபத்தின் நாற்றிசையில், நாற்றிசையை நோக்கிய வண்ணமுள்ள தியான நிலையில் உள்ள நான்கு புத்தர் சிலைகளைக் காணலாம்.
- பொலநறுவைக் காலத்து புத்தர் சிலைகளிடையே சிறந்த நிருமாணங்களான இவைகளில் காவியுடை சுருக்கமின்றியும் தலைமுடி சுருள்வடிவமின்றியும் காட்டப்பட்டுள்ளன.

## 1 ஆம் சிவ ஆலயம்







- 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஓர் இந்து ஆலயமாகக் கருதப்பட்ட இவ்வாலயம் தென்னிந்திய கட்டட நிர்மாண பாணியைக் கொண்டுள்ளது என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.
- இந்துக் கட்டடக்கலை இயல்புகளான மண்டபம், கர்ப்பக்கிரகம், உள்மண்டபம் போன்றவற்றை இது கொண்டுள்ளது.
- கற்களை சீராக வெட்டி, ஒன்றுடனொன்று பொருந்துமாறு இணைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பியல்பாகும். கற்களை இணைப்பதற்காக சாந்து பயன்படுத்தப்படவில்லை.
- சுவர் வெளித்தள்ளிய விதத்தில் கருங்கல்லை செதுக்கி நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் வெளித்தள்ளிய பகுதிகளையும், வெளித்தள்ளிய அமைப்பில் தூண்களையும் விமானங்களையும் காணலாம். தூண் தலைகளில் தாமரை மலர் அமைப்பையும் கொண்டிருக்கும்.
- சிகரம் செங்கற்களால் ஆக்கப்பட்டிருந்தது என்பதை இன்று மீதியாக உள்ள காரணங்கள் மூலம் அறிய முடிகின்றது.
- சிவன் வழிபாட்டின் பொருட்டு நிருமாணிக்கப்பட்ட வெங்கலச் சிலைகள் பல இந்த சிவாலயத்திலிருந்து கிடைத்துள்ளன.

# 2 ஆம் சிவ ஆலயம்



- பொலநறுவையில் காணக்கூடிய 2ம் சிவாலயம் 10 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் கட்டுவிக்கப்பட்டது எனக் கருதப்படுகின்றது.
- பொலநறுவைக் காலத்தைச் சேர்ந்த மிகப் பழைய ஆலயம் இதுவாகும்.

  இவ்வாலயம் 'வானவன் மாதேவி ஈசுரமுடையார்' என அழைக்கப்பட்டதாக கல்வெட்டு களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராஜ ராஜ சோழனின் பட்டத்து ராணியை நினைவு கூருவதற்காகக் கட்டப்பட்டது.
- வடிவமைக்கப்பட்ட அடித்தளத்தைக் கொண்ட அதிஸ்டானம் மீது கட்டப்பட்ட இவ்வாலயத்தின் வெளிச்சுவர்கள் ஒன்றிணைந்த தூண்களால் ஆனவை.
- அதன் முகடு 3 அடுக்குகளைக் கொண்டது. கூரை எண்கோண வடிவமுடையது. அத்தூண்களுக்கு மேலாக பிரமிட்டு போன்ற கூரை உள்ளது.
- தென் இந்தியச் சோழர்களின் கட்டட நிர்மாணப் பாணியில் அமைந்துள்ளது. இந்துக் கட்டடக்கலை இயல்புகளான மண்டபம், கர்ப்பக்கிரகம், உள்மண்டபம் போன்றவற்றை இது கொண்டுள்ளது. இவ்வாலயத்தின் கர்ப்பக்கிரகத்துள் கல்லாலான சிவலிங்கம் வைக்கப்பட்டிருக்கிறது.
- இவ்வாலயத்திலிருந்து நடராஜர் சிலை, பார்வதி சிலை என்பனவும் மேலும் பல இந்து சிலைகளும் கண்டெக்கப்பட்டுள்ளன.
- கற்களால் சீராக வெட்டி, ஒன்றுடனொன்று பொருந்துமாறு இணைக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பியல்பாகும். கற்களை இணைப்பதற்காக சாந்து பயன்படுத்தப்படவில்லை.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.3 : கண்டி காலத்து தாழ் பிரதேசப் பாரம்பரிய சித்திரங்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.3.1 : "கண்டிக் காலத்துக்குரிய தாழ்நிலப் பிரதேசத்து மரபு வழிச் சித்திரங்கள்."**

**பாடவேளை : 2**

**கற்றற் பேறுகள்:**

- தாழ்நிலப் பிரதேசத்து சித்திரக் கலை நிர்மாணங்களின் வரலாற்று பின்னணியை ஆராய்ந்தறிவார்.
- கலைப்பாணியுடன் ஆக்கபூர்வமாக நிர்மாணிக்க உதவிய ஊடகம், நுட்பமுறைகள் என்பனவற்றை விபரித்துக் கூறுவார்.
- கண்டிக் காலத்துக்குரிய தாழ்நிலப் பிரதேசத்து மரபுவழி விகாரை ஓவியங்கள் பற்றிய தகவல்களை சேகரிப்பார்.
- நிர்மாணிப்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கண்டிக் காலத்துக்குரிய தாழ்நிலப் பிரதேசத்து விகாரை ஓவியங்களின் புகைப்படங்கள்
  - கத்தளுவ விகாரை ஓவியங்கள்
  - கரகம்பிட்டிய விகாரை ஓவியங்கள்
- இணைப்பு 7.3.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.3.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.3.1.1**

- கண்டிக் காலத்துக்குரிய தாழ்நிலப் பிரதேசத்து மரபு வழி விகாரை ஓவியங்கள் பற்றி அறிய மாணவர்களைத் தயாராக்குக.
- அவ்வோவியங்களின் தொனிப்பொருள், கலைப்பாணி, கோட்பாடுகள் பற்றி மாணவர் களிடம் வினவுக.
- கத்தளுவ விகாரை ஓவியங்கள், கரகம்பிட்டிய விகாரை ஓவியங்கள், நிர்மாணிப்புகள் பற்றி தகவல்களை சேகரிக்கும்படி மாணவர்களைப் பணிக்க.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.3.1.2**

- இணைப்பு 7.3.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.3.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வினவப்பட்ட வினாக்களுக்கு வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.3.1.3**

- எழுமாறாக மாணவர் சிலரது விடைகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்துக.
- ஒட்டுமொத்தச் செயற்பாட்டை மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.3.1.1, 7.3.1.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- கண்டிக் காலத்துக்குரிய தாழ்நிலப் பிரதேசத்து மரபு வழி ஓவியங்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்தறிதல்.
- கண்டிக் காலத்துக்குரிய தாழ் நிலப் பிரதேசத்து மரபு வழி விகாரை ஓவியங்களின் அடிப்படைப் பண்புகளை விளக்குதல்.
- கண்டிக் காலத்துக்குரிய தாழ்நிலப் பிரதேசத்து மரபு வழி விகாரை ஓவியங்களின் ஊடகம், நுட்ப முறைகள் என்பவற்றை விளக்குதல்.
- கத்தளுவ விகாரை, கரகம்பிட்டிய விகாரை ஓவியங்களின் கலைப் பண்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 7.3.1.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்ட கரகம்பிட்டிய விகாரை, கத்தளுவ விகாரை ஓவியங்களை நன்றாக நோக்குக.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசிக்க.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
  - (1) கண்டிக் காலத்துக்குரிய தாழ்நிலப் பிரதேசத்து மரபுவழி விகாரை சுவர் ஓவியங் களின் வரலாற்றுப் பின்னணியை சுருக்கமாக விளக்குக.
  - (2) கத்தளுவ விகாரை, கரகம்பிட்டிய விகாரை ஓவியங்களின் வரலாற்றுப் பின்னணியை சுருக்கமாக விளக்குக.
    - காலம் / யுகம்
    - அனுசரணை
    - கலைஞர்
  - (3) கத்தளுவ விகாரை, கரகம்பிட்டிய விகாரை ஓவியங்களில் காணப்படும் சிறப்பியல்புகள் பற்றி கலையுணர்வுடன் மதிப்பிடுக.
    - கருப்பொருள் (விடயப்பொருள்)
    - கலைப்பாணி
    - நுட்பமுறைகள்
    - கலைத்துவப் பண்புகள்
      - தளத்தில் உருவங்களைப் பிரயோகித்தல்
      - வர்ண உபயோகம்
      - இரேகைகள் கையாண்ட விதம்
      - கருத்து வெளிப்பாடு

- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.3.1.2:**

## வாசிப்புப் பத்திரம்

- கண்டிக் காலத்து தாழ்நிலப் பிரதேசத்து சித்திரக் கலைப் பண்புகளைக் கொண்ட சுவரோவியங்களை நாட்டின் மேற்கு, தெற்கு கரையோரப் பிரதேசங்களில் காணலாம்.
- கி.பி. 16ம் நூற்றாண்டுக்குப் பின்னர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களின் வருகையின் காரணமாக கண்டிக் காலத்து சித்திரக் கலைப்பாணியில் மாற்றம் ஏற்பட்டு அவை மேற்கத்தேயரின் கலாசாரப் பண்புகளைக் கொண்டதாகக் காணப்பட்டன.
- 19ம் நூற்றாண்டின் இறுதியில் தாழ்நிலப் பிரதேசங்களில் பிரபல்யமாக பரவலடைந்த இவ்வோவியப்பாணி வெளிநாட்டவர்களின் செல்வாக்கையும் சமூகப் பின்னணியின் தாக்கத்தையும் கொண்டதாகக் காணப்பட்டன.
- தாழ்நிலப் பிரதேசத்தில் விகாரை ஓவியங்கள் உலர்ந்த சாந்தின் மீது ஓவியங்கள் வரையும் நுட்ப முறையைக் கொண்டு வரையப் பட்டுள்ளன.
- பிரதானமாக பௌத்த சமய நிகழ்வுகளும் பௌத்த ஜாதகக் கதைகளுமே விடயப் பொருள்களாக உள்ளன.

**தாழ்நாட்டுப் பிரதேசத்து விகாரை ஓவியங்களில் காணப்படும் பொதுப் பண்புகள்:**

- நிரைகளாக வரைந்திருந்தல், தொடர்ச்சியான கதை வெளிப்படுதல், ஒரு பக்கத்துக்கு திரும்பிய உருவங்கள்.
- உருவங்களை சுற்றி மென்மையான இரேகைகளால் நிறைவைக் காட்டியிருத்தல்.
- ஒட்டு மொத்த சித்திரத்தினுள் அளவுத் திட்டம் கவனிக்கப்படாமை.
- தூரதரிசன இயல்புகளையும் முப்பரிமாண இயல்புகளையும் காட்ட முற்பட்டிருத்தல்.
- பின்னணியை அலங்கரிப்பதற்காக பலவித அலங்கார வடிவங்களை உபயோகித்திருத்தல்.
- ஆடை அணிகலன்களை அலங்காரமாக, விளக்கபூர்வமாக காட்டியிருத்தல்.
- ஐரோப்பிய பாணியில் அமைந்த கட்டட நிர்மாணம், தளபாடங்கள், ஆடைஅணிகள் காட்டப்பட்டிருத்தல்.
- மஞ்சள், நீலம், நரை பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை போன்ற வர்ணங்களை மெல்லிய, கடும் நிறம் கொண்டதாக உபயோகித்தல், முப்பரிமாண இயல்பு வெளிப்படுத்தல்.
- பின்னணிக்குப் பொதுவாக சிவப்பு வர்ணத்தை விட சாம்பல், கறுப்பு, கடும் நீலம் போன்ற வர்ணங்களை உபயோகித்திருத்தல்.

### கத்தளுவ விகாரை ஓவியங்கள்

- தென்மாகாணத்தின் காலி நகருக்கு அண்மித்துள்ள கத்தளுவ விகாரையின் சுவரோவி யங்கள் 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலப் பகுதியைச் (கி.பி. 1886) சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.
- கடொல்கல்லே ''மகா சித்தரா'' (சிறிய சித்தரா) வும் பொட்ட சித்தராவும் கத்தளுவ விகாரை ஓவியங்கள் வரைந்த கலைஞர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.
- தாழ்நாட்டுப் பிரதேசத்து சுவரோவியங்கள் மீது ஐரோப்பிய செல்வாக்கும் சமகால சமூகப் பின்னணியின் தாக்கமும் ஏற்பட்ட விதத்தை எடுத்துக் காட்டும் ஓவியங்களாக இவை கருதப்படுகின்றன.

- கத்தளுவ விகாரையின் ஓவியங்களின் தொனிப்பொருளாக அமைந்த விடயங்களைப் பின்வருமாறு காட்டலாம்.
    - பௌத்த ஜாதகக் கதைகள் (வெஸ்ஸந்தர, மகாசுத்தசோம, தேமீய, சுள்ளபதும)
    - புத்தபெருமான் காலத்தின் சமகால சமூக நிகழ்வுகள் (மகாதன செல்வந்தரின் கதை, பட்டாசாரா கதை, நந்திய பக்தனின் கதை)
- அப்படைப்புகளுக்கு மேலதிகமாக,
    - நரகக் காட்சிகள்
    - இருபத்து நான்கு காட்சி (சூவிசிவிவறணய)
    - உட்கூரை ஓவியங்கள்
    - சுவர்க்கத்தின் காட்சிகள் போன்றவையும் வரையப்பட்டுள்ளன.

**மகாதன செல்வந்தரின் கதை - இசையும் களிப்பும்**



- கத்தழுவை விகாரைச் சுவரோவியங்களுள் ஒன்றாகும். இந்த ஓவியத்தில் மகாதன செல்வந்தரின் இல்லத்தில் நடைபெற்ற ஆடல், பாடல் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.
- கலைஞர்கள் ஐரோப்பிய முறையில் ஆடையணிந்து ஐரோப்பிய இசைக்கருவிகளை இசைப்பது காட்டப்பட்டுள்ளது.
- பின்னணியில் உள்ள கட்டடம் ஐரோப்பிய பண்புகளைக் கொண்டுள்ளது.
- ஆடைஅணிகள், இசைக்கருவிகள், கட்டட நிர்மாணங்கள், தளபாடங்கள் என்பன அக்காலக் கலைஞர் கண்ட ஐரோப்பிய பொருட்களுக்கு அமைந்ததாகக் காணப்படுகின்றன.
- தொடர்ச்சியாக கதை கூறும் முறையில் வரையப்பட்ட ஓவியத்தின் ஒரு பகுதி இதில் காட்டப்பட்டுள்ளது.
- தளத்தை முழுவதும் பயன்படுத்தி இவ்வோவியம் வரையப்பட்டுள்ளது.
- கோடுகளையும் தள வடிவங்களையும் பயன்படுத்தி சிக்கலான முறையில் வெளி நிரப்பப்பட்டுள்ளது.
- மஞ்சள், கறுப்பு, வெள்ளை, நீலம், சிவப்பு, பச்சை, கபிலநிறம் போன்ற வர்ணங்களையும், அவற்றின் வேறுபாடுகளையும் உபயோகித்து ஓவியங்கள் வர்ணம் தீட்டப்பட்டுள்ளன.
- மஞ்சள், கறுப்பு, கபிலநிறம் போன்ற வர்ணங்களை உபயோகித்து பின்னணியை வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- உருவங்களை சுற்றி கறுப்பு நிறத்தில் கோடுகள் வரையப்பட்டுள்ளன.

- வர்ணங்களை மென்மையான முறையில் உபயோகித்து முப்பரிமாணத் தன்மை வெளிக் காட்டப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்த ஓவியத்தில் உயிரோட்டமான தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- வர்ணங்கள் தட்டையாகவன்றி வர்ணத் தடங்கள் (Patches) கையாளப்பட்டுள்ளது.

**சுத்தசோம ஜாதகக் கதை - அரண்மனையில் மாதர்கள்**



- கத்தமுவை விகாரைச் சுவரோவியங்களுள் ஒன்றாகும். பிரம்மதத்த அரசனின் அரண்மனைப் பெண்கள் இருவர் அளவளாவும் காட்சி காட்டப்பட்டுள்ளது. ஒரு பெண் அரசிக்கு சாமரை விசிறுவதைக் காணலாம்.
- தொடர்ச்சித்திர முறையில் வரையப்பட்ட சித்திரத்தில் வடிவங்கள் விறைப்புப் பாங்கான தன்மையில் பக்கப்பாடாக வரையப்பட்டுள்ளது.
- அலங்கார மலர்களாலும் இரேகைகளினாலும் பெண்களின் ஆடை அணிகள் அலங்கரிக்கப் பட்டுள்ளன. விசேடமாக ஐரோப்பிய விளக்கு என்பவற்றைக் குறிப்பிடலாம்.
- கட்டட நிர்மாணம், வீட்டுத் தளபாடம் என்பவை ஐரோப்பிய பாணியில் அமைந்ததாகக் காணப்படுகின்றன.
- மஞ்சள், கறுப்பு, வெள்ளை, நீலம், சிவப்பு, பச்சை, கபில நிறம் வர்ணங்களை வர்ண பேதங்களை உபயோகித்து வர்ணம் தீட்டப்பட்டிருக்கிறது.
- உருவங்களைச் சுற்றி கறுப்பு நிறக்கோடுகள் காணப்படுகின்றன. அவை ஓவியத்தின் விரிவான தன்மைகளைக் காட்டியுள்ளன.
- பின்னணியாக கறுப்பு நிறம் பயன்படுத்தப்பட்டிருத்தல், பின்னணி வெளியை நிரப்புவதற்காக பல்வேறு அலங்கரிப்பு வடிவமைப்புகள் பயன்படுத்தப்பட்டிருப்பது இந்த ஓளிப்படத்தின் சிறப்புப் பண்பாகும்.

## கரகம்பிட்டிய சுபோதாராமய விகாரை ஓவியங்கள்

- மேல் மாகாணத்தில் தெகிவளை நகருக்கு அண்மையில் அமைந்த கரகம்பிட்டிய அதாவது சுபோதாராமய என்று அழைக்கப்படும் விகாரையில் தாழ் நாட்டு விகாரை ஓவியப் பண்புகளை கொண்ட ஓவியங்கள் உள்ளன.
- இது பொலனறுவைக் கால 1ம் பராக்கிரமபாகுவினதும் கண்டிக் கால ராஜாதிராஜசிங்க அரசன் (1795) காலத்துக்கும் உரியது.
- இவற்றில் காணப்படும் ஓவியங்கள் 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியை (கி.பி. 1897) சேர்ந்த ஓவியங்களாகின்றன.
- கரகம்பிட்டிய விகாரைச் சுவரோவியங்களில் பௌத்த ஜாதகக் கதைகள், புத்தரின் வாழ்க்கை அம்சங்கள், நரகலோகக் காட்சிகள், சூவிசி விவரணய, சுவர்க்கலோகக் காட்சி ஆகியன உள்ளன.

- **கரகம்பிட்டிய ஓவியங்களுக்குரிய விசேட பண்புகள்:**
  - இயற்கைப் பொருள்களைக் காட்ட முப்பரிமாணத் தன்மையைக் கொண்ட வர்ணங் களை உபயோகித்தல்.
  - முகில்கள், நீர் என்பன காட்ட ''இண்டிகோ'' (கருநீலம்) உபயோகித்திருந்ததோடு நீலம், வெள்ளை, கறுப்பு வர்ணங்கள் கலந்து முப்பரிமாணத் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
  - கடும் சிவப்பு, கடும் பச்சை, கறுப்பு, கபில நிறம் போன்ற வர்ணங்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.
  - தேவைக்கேற்றவாறு அவற்றின் வர்ண பேதங்களை உபயோகித்து முப்பரிமாணத் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### தூண்டுதல் (மாரன் புதல்வியர்)



- கரகம்பிட்டிய விகாரைச் சுவரோவியங்களுள் ஒன்றாகும். புத்தர்நிலை அடைவதைத் தடுக்கும் வகையில் தூண்டுவதற்காக வந்த மாரனின் புதல்வியரான பேராசை, காதல், காமம் ஆகியயோரை இது குறிக்கிறது.

- மாரன் மகள்மார் இசைக்கருவிகளை இசைக்கும் களியாட்டக் காட்சி காண்பிக்கப் பட்டுள்ளது.
- மங்கையர்கள் அணிந்திருக்கும் ஆடையணிகள், இசைக்கருவிகள், ஐரோப்பிய செல்வாக் கைத் தழுவியதாகக் காணப்படுகிறது. இவை 19 ஆம் நூற்றாண்டுச் சமூகச் சூழலைக் காட்டுகின்றன.
- தாழ்நாட்டு சித்திரக் கலையின் பொதுப் பண்புகளான அலங்காரம் விரிவான விபரம் ஆகிய பண்புகளை இவற்றிலும் காணலாம்.
- தொடர் கதை ஒன்றின் ஒரு பகுதி இங்கே சித்தரிக்கப்பட்டுள்ளது. தளத்தை முழுவதும் உபயோகித்து ஓவியம் வரையப்பட்டுள்ளது. நீல நிறப் பின்னணியை இவற்றுக்கு உபயோகிக்கப்பட்டுள்ளது.
- முப்பரிமாணத் தன்மையைக் காட்ட நுணுக்கமான வர்ண பேதங்கள் உபயோகிக்கப் பட்டுள்ளன. மஞ்சள், கறுப்பு, வெள்ளை, நீலம், சிவப்பு, பச்சை, கபிலநிறம் போன்ற வர்ண பேதங்களை உபயோகித்து வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. நுணுக்கமாக வர்ணப் பயன்பாடு மூலம் முப்பரிமாண இயல்பைக் காட்ட முயற்சிக்கப்பட்டுள்ளது.
- உருவங்களைச் சுற்றி கறுப்பு நிறக்கோடு காணப்படுவதோடு அதற்காக நீல வர்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளமை இதன் சிறப்பியல்புகளாகும்.

**சித்தார்த்தரின் பிறப்பு**



- இச்சித்திரத்தில் லும்மின் நாகலிங்கப் பூங்காவில் சித்தார்த்தரின் பிறப்பைச் சித்தரிக்கப் பட்டுள்ளது.
- கதை முறையில் சித்தார்த்தருடைய வாழ்க்கை நிகழ்வின் ஒரு சந்தர்ப்பம்.
- தொடர் சித்திர மரபில் வரையப்பட்ட இதில் மகாமாயாதேவி சேவகிப் பெண்ணுடன் நாகலிங்க மரத்தின் அண்மையில் வரும் தன்மையும், தேவி மரக்கிளையைப் பிடித் திருக்கும் நிலையில் குழந்தை பிறக்கும் தன்மையும் காட்டப்படுகிறது.

- மரங்கள் இரண்டுக்கு இடையே பிடிக்கப்பட்ட திரையினால் அவரது உடலின் கீழ்ப்பகுதி மறைக்கப்பட்டு இருப்பதுடன் பிறந்த குழந்தை தேவர்களால் வரவேற்கப்படுகிறது.
- தாழ்நாட்டு பிரதேச விகாரைச் சித்திரக்கலையின் பொதுப் பண்பான அலங்கரிப்பு விளக்கமாக சித்திரத்தில் காணப்படுகிறது.
- அழகான மலர் அலங்காரத்தைக் கொண்ட ஆடை அணிகலன் மகாமாயாதேவியை மறைத்துள்ள திரைத்துணியும் மலர்களுடன் கூடிய நாகலிங்க மரம் இரண்டும் இவ்வாக்கத்தில் காணக்கூடிய விசேட இயல்புகளாகும்.
- சித்திரத்திற்கு மஞ்சள், கறுப்பு, சிவப்பு, செம்மஞ்சள், நீலம், வெள்ளை வர்ணங்கள் பயன்படுத்தி உள்ளதுடன், பின்னணிக்கு நீலம், கறுப்பு வர்ணம் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- வர்ணத்தை தட்டையாகப் பயன்படுத்தி இருப்பினும் சில இடங்களில் நுணுக்கமாக முப்பரிமாண இயல்பு வெளிப்படுவதைக் காணலாம்.
- உருவத்தை சுற்றியும், அலங்காரக் கோலத்தை சிறப்பாக வெளிப்படுத்துதன் பொருட்டும், இரேகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.4 : இந்திய வரலாற்றுக் காலங்களில் சித்திர, சிற்ப செதுக்கல் வேலை, கட்டட நிர்மாணிப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.4.1 : "மௌர்ய காலத்துக்கும் சுங்கர் காலத்துக்கும் உரிய கலை நிர்மாணங்களை மதிப்பிடுவோம்."**

**பாடவேளை : 2**

**கற்றற் பேறுகள்:**

- மௌர்ய காலத்துக்கும் சுங்கர் காலத்துக்கும் உரிய சிறப்பான கலை நிர்மாணங்களை ஆராய்ந்து கற்பார்.
- சாஞ்சித் தோரண வேலைப்பாடுகளைக் குறிப்பிடுவார்.
- சாஞ்சித்தூபி, தோரண நிர்மாணிப்புகளின் வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.
- கலை நிர்மாணிப்பின் ஊடகம், நுட்ப முறை என்பனவற்றை விளக்குவார்.
- சாஞ்சித் தூபியினதும் தோரண நிர்மாணிப்புகளினதும் கலைப் பண்புகளை இரசித்து நயப்பார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மௌர்ய காலத்துக்கும் சங்க காலத்துக்கும் உரிய சிறப்பான கலை நிர்மாணங்களின் புகைப்படங்கள்
  - சாஞ்சித்தூபி
  - சாஞ்சித் தோரண வேலைப்பாடுகள்
  - ஐத்தன்த ஜாதக
  - புத்தர் பெருமான் சங்கஸ்சபுரத்திற்கு வருகை தரல்.
- இணைப்பு 7.4.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.4.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.4.1.1**

- மௌர்ய காலத்துக்கும் சுங்கர் காலத்துக்கும் உரிய கலை நிர்மாணங்களை மாணவர் களுக்கு காட்சிப்படுத்துக.
- அந்நிர்மாணங்கள் பற்றிய கருத்துக்களை மாணவர்களிடம் வினவுக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.4.1.2**

- இணைப்பு 7.4.1.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.4.1.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.4.1.3**

- மாணவர்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க வாய்ப்பளிக்க.
- கண்டறிந்தவை பற்றிய கருத்துகளை மாணவர்களிடம் கேட்டறிக.
- மௌர்ய காலத்துக்கும் சுங்கர் காலத்துக்கும் உரிய கலை நிர்மாணங்கள் பற்றிய விடயங்களை மீளாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.4.1.1, 7.4.1.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- மௌர்ய காலத்துக்கும் சுங்கர் காலத்துக்கும் உரிய கலை நிர்மாணங்களை தேடியறிதல்.
- சாஞ்சி தோரண வேலைப்பாடுகளைக் குறிப்பிடுதல்.
- சாஞ்சித் தூபியினதும் தோரண வேலைப்பாடுகளினதும் வரலாற்றுப் பின்னணியை ஆராய்தல்.
- நிர்மாணத்துக்கான ஊடகம், நுட்பமுறை என்பனவற்றை விளக்குதல்.
- சாஞ்சித் தூபியினதும் தோரண வேலைப்பாடுகளினதும் கலைப்பண்புகளை இரசித்து நயத்தல்.

**இணைப்பு 7.4.1.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்ட சாஞ்சித் தூபியினதும் தோரண வேலைப்பாடுகளினதும் கலை நிர்மாணங்களை நன்றாக நோக்குக.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசிக்க.
  சாஞ்சித் தூபியினதும், தோரண வேலைப்பாடுகளினதும் சிறப்பியல்புகளை இனங்காண்க.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
  - (1) சாஞ்சித் தூபியினதும், தோரண வேலைப்பாடுகளினதும் வரலாற்றுப் பின்னணியை சுருக்கமாக விளக்குக.
    - காலம் / யுகம்
    - காணப்படும் இடங்கள்
    - கிடைத்த அனுசரணை
  - (2) சாஞ்சித் தூபியின் கட்டட நிர்மாண மாதிரிப் பண்புகளை வரைந்து விளக்குக.
    - ஒழுங்கிணைப்புப் பண்புகள் (நீளம், அகலம், உயரம்)
    - ஆக்கபூர்வமான மற்றும் கலைத்துவ விடயங்கள் அம்சங்கள்
  - (3) சாஞ்சித் தோரண வேலைப்பாடுகளைக் குறிப்பிட்டு அவ்வொவ்வொரு நிர்மாணிப்பையும் பின்வரும் விடயங்களின் கீழ் மதிப்பீட்டுக்குட்படுத்துக.
    - விடயப்பொருள் (கருப்பொருள்)
    - ஊடகம்
    - நுட்பமுறைகள்
    - கலைத்துவப் பண்புகள்
      - தளத்தின் மீது உருவங்களை உபயோகித்தல்
      - உருவங்களின் தன்மை
        (மெய்நிலை, சரீரப்பண்பு, ஆடை, அணிகலன் ஆகியவை)
      - குறியீடுகளை உபயோகித்தல்
      - உணர்வு வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.


**இணைப்பு 7.4.1.2:**

## வாசிப்புப் பத்திரம்

### சாஞ்சித்தூபி



- அசோக மன்னனால் கட்டப்பட்ட இந்திய கட்டட நிர்மாணத்தின் உன்னதமான படைப்பாகும்.
- பாரத நாட்டின் மத்தியில் கலைத்துவமான அழகான மலையொன்றில் நிர்மாணிக்கப் பட்டுள்ள சாஞ்சித் தூபியும் அதன் சுற்றுப்புறமும் கலைக்கூடமாக திகழ்கின்றது.
- சாஞ்சி மகா தூபியைத் தவிர வேறு இரண்டு சைத்தியங்கள் காணப்பட்டபோதும் மகாதூபியே சிறப்பான நிர்மாணமாகும்.
- இது 120 அடி விட்டமும் 54 அடி உயரமும் கொண்டது.
- இது நீர்குமிழி வடிவமுடையது.நிலமட்டத்திலிருந்து 16 அடி உயரத்தில் சைத்தியத் தைச் சுற்றி வலம் வருவதற்கான அமைப்பு இருக்கிறது. இது 'மேதிய' எனப்படுகிறது. அதைச் சுற்றி கல்வேலி காணப்படுகிறது. வலம் வரும் பகுதியை அடைவதற்கு இரண்டு படி வரிசைகள் உள்ளன.
- 'மேதிய'யின் மீது அண்டம் (கர்பய) அமைந்திருக்கிறது. தூபியின் உச்சிப் பகுதியில் கல்வேலியைக் கொண்ட சதுரக் கோட்டம் காணப்படுகிறது. இது 'கர்மிகா' எனப்படுகிறது.
- 'கர்மிகா' வின் மத்தியில் கூர்மையான கற்றூண் காணப்படுகிறது. இது 'யூபய' அல்லது 'யஷ்டிய' என அழைக்கப்படுகிறது.




**சாஞ்சித்தூபியின் பிரதான அங்கங்கள்**

- யூபயவின் உச்சியில் வட்ட வடிவமான தட்டையான 3 கற் தகடுகள் காணப்படுகின்றன. இவை கீழே இருந்து மேல்நோக்கி உருச்சிறுத்து காணப்படுகிறது. இவை குடை (சத்திர) என அழைக்கப்படும்.


## சாஞ்சி தோரணம்

- சாஞ்சித் தூபியின் நாற்புறத்தில் அமைந்த தோரணங்கள் இந்திய கலை நிர்மாணங்களின் சிறப்பான படைப்புகளாகும் எனக் கருதப்படுகின்றது.
- சாதவாகன காலத்தைச் சேர்ந்த ஒரு படைப்பாகக் கருதப்படுகின்றது.
- சாஞ்சி தோரணங்கள் நான்கும் அமைப்பைப் பொறுத்தமட்டில் ஒரே வடிவமைப்பைக் கொண்டவை.
- உச்சியில் விலங்குருவங்களைக் கொண்ட சதுர வடிவமுடைய இரு தூண்கள் உள்ளன. அதன் மேற்பகுதியில் கிடையாகவும் சமாந்தரமாகவும் 3 கற்பாளங்கள் உள்ளன. இக் கற்பாளங்கள் உட்பக்கமாக சுருண்ட வடிவில் காணப்படுகிறது. இது கலைத்துவமாக ஓலைச்சுவடி வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவை மூன்றும் 3 சிறுகற்தூண்களால் இணைக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு செங்குத்தான தூண்களிலும் கிடையான கற்பாளங்களிலும் அலங்கார வடிவிலான சிற்பங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. பிரதானமான செங்குத்துத் தூண் உச்சியில் யானை உருவங்கள், வாமன உருவங்கள் சிங்க உருவங்கள் கொண்டதாகக் காணப்படுகின்றன. கிடையாக உள்ள முதல் கற்பாளத்துக்கும் செங்குத்துத் தூணுக்கும் இடையில் ஓரமாக ‘சாலபஞ்சிகா’ எனும் பெண்ணின் உருவம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.
- தோரணத்தின் மேலே இருக்கும் கிடையான கற்பாளத்தின் மீது திரிசூலம், மனித உருவங்கள் மற்றும் விலங்குருவங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- சாஞ்சி தோரண வேலைப்பாடுகளின் கருப்பொருள்கள்:
  - (1) ஜாதகக் கதைகள்:-
    **உ**+**ம்:** சத்தந்தஜாதக, வெஸ்ஸந்திர, மகாகபி ஜாதக
  - (2) புத்த பெருமானின் வாழ்க்கை நிகழ்வுகள்:-
    **உ**+**ம்:** ஞானம் பெறல், கபில வஸ்துவுக்கு வருகை தரல்.
  - (3) சித்தார்தரின் வாழ்க்கை நிகழ்வுகள்:-
    **உ**+**ம்:** கேசம் களைதல், இல்லறத்தைத் துறத்தல்.
  - (4) வரலாற்று நிகழ்வுகள்:-
    **உ**+**ம்:** அசோக மன்னன் ஸ்ரீ மகாபோதியை வணங்குதல், புனித சின்னங்களுக் கான கலகம்.

### சாஞ்சி தோரண வேலைப்பாடுகளில் காணப்படும் சிறப்பியல்புகள்:

- செங்குத்தாக அமைந்த கல் தூண்களில் உள்ள செதுக்கல்கள் பலகங்களுக்குள் நிர்மாணிக் கப்பட்டுள்ளதுடன் கிடையாக உள்ள கற்பாளங்களில் தொடர்ச்சியான கதை உருவாகும் விதத்தில் செதுக்கல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- இச் செதுக்கல்கள் மிகவும் நுணுக்கமான முறையில் சிறு புடைப்பு நுட்ப முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- உருவம் இன்னொரு உருவத்தை மறைத்து இருக்கும் விதத்தில் அவை நிர்மாணிக்கப் பட்டுள்ளன.
- மனித உருவங்கள், விலங்கு தாவர உருவங்கள் என்பன கொண்டு தளம் முழுவதும் இடைவெளியின்றி இச் செதுக்கல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- கலைப்பாணியுடன் கூடிய மனித உருவங்களும் இயற்கைத் தன்மையுடன் கூடிய விலங் குருவங்களும் நிர்மாணிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.
- விலங்குகளின் மெய்நிலைகள், பண்புகள், அசைவுகள் தத்துரூபமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளது.
- சாஞ்சி தோரண வேலைப்பாடுகளை நிர்மாணித்த கலைஞன் புத்தபெருமானையும், சித்தார்த்த குமாரனையும் காட்டுவதற்காக அரசமரம், குடை, தூபி, தர்ம சக்கரம், பாதச் சுவடு போன்ற குறியீடுகளை உபயோகித்துள்ளார்.


## சாஞ்சி தோரணமும் அதன் பகுதிகளும்




திரிசூலம் உள்ள தட்டு



சிங்க உருவம்



கிடையான கற்பாளங்களி
அந்தங்கள் பனையோலை
போன்று சுருட்டப்பட்டுள்
விதம்





யானை உருவங்களும்
சாலபஞ்சிக்கா உரு

நிலைக்குத்தான
கற்றூணண்கள்

கிடையான கற்பாளங்கள்

**ஐத்தன்த ஜாதகம் (வடக்குத் தோரணம், உட்புறம்)**



ஐத்தன்த
ஜாதகம்

**ஐத்தன்த ஜாதகம் - அண்மித்த தோற்றம்**



- ஐக்தன்த ஜாதகக் கதைச் செதுக்கல் சாஞ்சி தோரணத்தின் மிகச் சிறந்த ஒரு கலை ஆக்கமாகும்.
- அந்த ஜாதகக் கதையின் செதுக்கல் வேலைப்பாடுகளுள் 'ஐததன்த' ஜாதகச் செதுக்கல் வேலை சிறப்பானது. அது பல சாஞ்சி தோரணங்களில் காணப்படுகின்றது.
- வடக்குத் தோரணத்தின் ஒரு செதுக்கு வேலைப்பாடே இங்கு தரப்பட்டுள்ளது.
- இது தோரணத்தின் உட்புறத்தே மிக உயரத்தில் அமைந்துள்ள கிடையான கற்பாளங் களாகும்.
- கிடைக் கற்தகட்டின் மீது தொடர்கதை முறையில் செதுக்கப்பட்டுள்ளது.
- ஐத்தன்த ஜாதகக் கதையில் ஆல மரத்தடியில் இருக்கின்ற யானைகளை சித்தரிக்கும் காட்சி காணப்படுகிறது.
- இதில் காணப்படுகின்ற யானைகள் யாவும் இயற்கை வடிவில் உள்ளதுடன், யானைகளின் மெய்நிலை, அவற்றின் இயல்பு, சலனம். தாத்வீகத் தன்மையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- ஒன்றிற் ஒன்று மறைந்து காணப்படும் யானை வடிவங்கள் தளம் முழுதும் பரவி இருக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
- மிகச் சிறிய இடங்களையும் பயன்படுத்தி உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளது.
- யானைகள் செதுக்கலில் நுணுக்கமாகவும், மென்மையாகவும் பூரணப்படுத்தப்பட்டு உள்ள தன்மையைக் காணலாம்.

## புத்த பெருமான சங்கஸ்ஸபுரத்திற்கு வருகை தரல் (வடக்குத் தோறணத்தின் முன்பக்கம்)



- இச் செதுக்கல் வடக்குத் தோரணத்தில் உள்ளது.
- புத்த பெருமான் சங்கஸ்ஸபுரத்திற்கு வருகை தருவதைச் சித்தரிக்கும் இச் செதுக்கலில், புத்தர் பெருமானின் வடிவத்திற்கு பதிலாக அரசமரத்தை குறியீடாக காட்டப்பட்டுள்ளது. அதன்படி ஏணியின் மேலேயும், கீழேயும் அரசமரம் காட்டப்பட்டுள்ளது.
- இங்கு காணப்படும் மனித வடிவங்கள் கலைப்பாணியுடன் இயற்கை அமைப்பில் செதுக்கப்பட்டுள்ளது.
- உருவத்துக்கு உருவம் மறைந்துள்ள தன்மையில், தளம் முழுதும் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது.
- மிகச்சிறிய இடத்தைக் கூடப் பயன்படுத்தி வடிவங்கள் வரையப்பட்டுள்ளது.
- யானைத்தந்த செதுக்கல்களில் காணக்கூடிய நுட்பமாகவும், மென்மையாகவும் பூரணப்பாட்டை கொண்டுள்ளது.
- சிறுபுடைப்பு சிற்ப முறையில் நிருமாணிக்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 7.0 : வரலாற்று ரீதியான உள்நாட்டு வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்**

**தேர்ச்சி மட்டம் 7.4 : இந்திய வரலாற்றுக் காலங்களில் சித்திர, சிற்பங்களுக்கு வேலை, கட்டட நிர்மாணிப்புக்களைக் கற்பார்.**

**செயற்பாடு 7.4.2 : " குப்தகாலத்துக் கலை நிர்மாணங்கள்"**

**பாடவேளை** : 2

**கற்றற் பேறுகள்:**
- குப்த காலத்து கலை நிர்மாணங்களை ஆராய்ந்து கற்பார்.
- குப்த காலத்துக்குரிய ஓவியங்களைக் குறிப்பிடுவார்.
- குப்த காலத்துக்குரிய கலை நிர்மாணங்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்து கற்பார்.
- நிர்மாணத்துக்கு உபயோகித்த ஊடகம், நுட்ப முறைகள் என்பனவற்றை விளங்கிக் கூறுவார்.
- குப்த காலத்து நிர்மாணங்களின் கலைப் பண்புகளை மதிப்பிடுவார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- குப்த காலத்துக்கு உரிய கலை ஆக்கங்களின் வர்ணப் புகைப்படங்கள்
  - சாரானர் புத்தர் சிலை
  - அஜந்தா ஓவியம்
  - பத்மபாணி போதிசத்துவர் வடிவம்
  - புத்தர் பெருமான் கிம்புள்வத் புரத்திற்கு வருகை தரல்.
- இணைப்பு 7.4.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்
- இணைப்பு 7.4.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரம்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படிமுறை 7.4.2.1**
- குப்த காலத்துக்குரிய கலை ஆக்கங்கள் பற்றி அறிவதற்கு ஆர்வத்தை ஏற்படுத்துக.
- அந்நிர்மாணங்கள் பற்றிய கருத்துக்களை மாணவர்களிடம் வினவுக.
- குப்த காலத்துக்குரிய நிர்மாணங்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கும்படி மாணவர்களைப் பணிக்க.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.4.2.2**
- இணைப்பு 7.4.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.4.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக. அதனைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொள்ளுமாறு மாணவரை அறிவுறுத்துக.
- வாசிப்புப் படிவத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்க மாணவர்களுக்கு உதவுக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.4.2.3**
- எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது விடைகளை மதிப்பீடு செய்க.
- ஒட்டு மொத்த பாடத்தை மீளாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

**பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 7.4.2.1, 7.4.2.2 ஐ அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.**

- குப்த காலத்துக்குரிய கலைபடைப்புக்களின் தொனிப்பொருளும் நிர்மாணங்களையும் குறிப்பிடுதல்.
- குப்த காலத்துக்குரிய கலைபடைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்ந்தறிதல்.
- ஊடகம், நுட்ப முறைகள் என்பவற்றைக் குறிப்பிடுதல்.
- குப்த காலத்துக்குரிய கலைபடைப்புக்களின் கலைச் சிறப்பியல்புகளை மதிப்பிடல்.

**இணைப்பு 7.4.2.1:**

**செயற்பாட்டுப் பத்திரம்**

- காட்சிப்படுத்தப்பட்ட குப்தர் கால நிர்மாணிப்புக்களை நன்றாக நோக்குக.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசிக்க.
- சாராநாத் புத்தர் சிலை மற்றும் அஜந்தா ஓவியங்களில் காணக்கூடிய சிறப்பியல்புகளை இனங்காண்க.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
  - (1) குப்த காலத்துக்குரிய சாராநாத் புத்தர் சிலை, அஜந்தா ஓவியங்களின் வரலாற்றுப் பின்னணியை சுருக்கமாக விளக்குக.
  - (2) சாராநாத் புத்தர் சிலையைப் பின்வரும் விடயங்களின் வழியே மதிப்பிடுக.
    - காலம், யுகம்
    - காணப்படும் இடம்
    - கலைப்பாணி / மரபு
    - நுட்ப முறை
    - கலைப்பண்புகள்
      - உருவ / தளப் பயன்பாடும் சேர்மானமும்
      - உணர்வு வெளிப்பாடு
  - (3) அஜந்தா ஓவியங்களைக் குறிப்பிட்டு, அவ்வொவ்வொன்றைப் பற்றியும் பின்வரும் விடயங்களை முன்வைத்து சுருக்கமாக விளக்குக
    - காலம், யுகம்
    - காணப்படும் இடம்
    - கலைப்பாணி / மரபு
    - நுட்பமுறை
    - கலைப்பண்புகள்
      - தளத்தின் மீது உருவங்களை வரைந்த விதம்
      - வர்ண உபயோகம்
      - இரேகைகளைக் கையாண்ட முறை
      - உணர்வு வெளிப்பாடு

- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.4.2.2:**

# வாசிப்புப் பத்திரம்


## சாரநாத் புத்தர்சிலை



- குப்தர் காலப் படைப்புக்களுள் ஒன்றாகிய இப்புத்தர்சிலை சாராநாத் குருகுலத்தைச் சேர்ந்த சிறப்பான ஒரு படைப்பாகக் கருதப்படுகின்றது.
- சாராநாத் புத்தர் சிலை 'சூனார்' எனப்படும் ஒரு வகைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.
- பத்மாசன முறையில் அமர்ந்த நிலையில் உள்ள இச்சிலை கைகளில் தர்ம சக்கர முத்திரையைக் காட்டி நிற்கின்றது.
- வாரணாசியில் இசிப்பத்தன, மிகதாய எனுமிடத்தில் புத்தர் பெருமான் ஐந்து பேருக்கு முதலாவது தரம் போதனையை நடத்தும் சந்தர்ப்பத்தை இது குறிக்கின்றது என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.
- புத்தர் பெருமான் அமர்ந்திருக்கும் ஆசனத்தின் மத்தியில் உள்ள தர்ம சக்கரமும், இருபுறத்தே உள்ள இரு மான்களும், ஏனைய மனித உருவங்களும் இதனைக் குறித்து நிற்கின்றன.
- சிலையின் தலையின் பின்புறத்தே அழகிய ஒளிவட்டமும், அதில் நுணுக்கமாகச் செதுக்கப்பட்ட பொட்டுக் கோலங்களும், பூங்கொடி அலங்காரங்களும், ஒளிவட்டத்தின் இரு புறங்களிலும் இரு தேவதை உருவங்களும் உள்ளன.
- ஒளிவட்டத்துக்குக் கீழே சிலையின் இரு புறங்களிலும், மகரம், குதிரை உருவங்களைக் கொண்ட அழகிய செதுக்கல் வேலைப்பாடொன்று உள்ளது.
- குடுமி, சுருட்டை முடி, பாதி திறந்த கண்கள், நீண்ட காதுச்சோணைகள், சாந்த முகம், பெருங்கருணை ஆகிய இயல்புகள் கொண்ட பேராளுமை இயல்பை வெளிக் காட்டி நிற்கின்றன.
- இரண்டு தோள்களையும் மூடியுள்ள காவியுடை, உடலுடன் ஒட்டிய தன்மையைக் காட்டுகின்றது. மெல்லிய கோடுகள் சிலவற்றின் மூலம் காவியுடை வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.
- சாராநாத் அரும்பொருட் காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள சாராநாத் புத்தர் சிலை இந்திய சிற்பக் கலையின் அரிய படைப்புக்களுள் ஒன்றாகும்.

## அஜந்தா ஓவியங்கள்

- இந்தியாவில் வடமேற்கில், மகாரஷ்ட்ரப் பிராந்தியத்தில் ஐதராபாத்தில் வகோரா ஆற்று எல்லையில் பரியிலாட வடிவமுள்ள உயரமான ஒரு குன்றில் அஜந்தாக் குகைத் தொடர் அமைந்துள்ளது.





- அஜந்தா குகைகள் 29 உள்ளன. குகைப் படைப்புக்கள் அக்காலத்தைச் சேர்ந்த படைப்புக்கள் அல்லவென்பதும் அவை கி.மு. 2 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவை என்பதும் ஆய்வாளர்களின் கருத்தாகும்.
- கட்டடக் கலைத்துறைக்கு அமைய, அஜந்தா குகைகளை இரண்டு பகுதிகளாக வகைப்படுத்தலாம்.
  (1) சைத்திய மண்டபங்கள்
  (2) ஆச்சிரம மண்டபங்கள்
- இக்குகைகளினுள்ளேயே சுவரோவியங்கள் பெரிதும் காணப்படுகின்றன.

## அப்சரா உருவங்கள்




- புத்தரின் சரிதை, ஜாதகக் கதைகள், வரலாற்றுச் சம்பவங்கள் போன்றவையே அஜந்தா ஓவியங்களின் விடயப் பொருள்களாக அமைந்துள்ளன.
- இல. 17 குகையில் காணப்படும் ''அப்சரா'' வடிவம் அஜந்தா சித்திரங்களிடையே மிகச் சிறந்த சித்திரமாகும்.
- இந்த ஓவியங்கள் சீகிரி அப்சரா உருவங்களை ஒத்த தன்மையைக் கொண்டது என்பது ஆய்வாளரின் கருத்தாகும்.
- சிகிரியா ஓவியங்கள் போன்ற நீண்ட கண்கள், புன்சிரிப்பு, காதணி, கழுத்தணி போன்றவை அப்சரா உருவங்களின் அழகை மேம்படுத்தியுள்ளன.
- இந்த ஓவியங்கள் உலர் சாந்தின் மீது பிரெஸ்கோ சிக்கோ டெம்பரா நுட்பமுறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- களி, சாணம், உமி, வைக்கோல், விலங்குகளின் தடித்த உரோமங்கள், பிசின் போன்றவற்றைச் சேர்த்து அரைத்துத் தயாரித்த சாந்தை மெழுகுவதன் மூலம் சுவர்ப்பரப்பு தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. பின்னர் அதன் மீது வெண்ணிறக் களி (மக்குலுக்களி)யைக் கரைத்துப் பூசி உலரவிட்டு, அதன் மேற்பரப்பின் மீதே ஓவியம் வரைவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**அஜந்தா ஓவியங்களில் காணப்படும் கலைப்பாணிச் சிறப்பியல்புகள்:**

- சந்தர்ப்பங்களுக்கு அமைய சமயோசிதமான உணர்வு வெளிப்பாடும் சம்பவத்துக்கு ஒப்பான வகையில் நாடகப்பாங்கில் சந்தர்ப்பங்களைக் காட்டுதலும்.
- மனித உருவங்கள், விலங்கு உருவங்களைப் படைக்கும்போது அவற்றின் தன்மை, அசைவு, அளவுத்திட்டம், உயிரோட்டமான தன்மை ஆகியன வெளிப்படுத்தப்பட்டிருத்தல்.
- தொடர்ச்சியான கதை கூறல் முறையில் ஆரம்பம், மத்தி, இறுதி என கதை முன்வைக்கப்பட்டிருத்தல்.
- இயற்கைச்சூழல், நீர்வீழ்ச்சி, மரஞ்செடி கொடிகள் மற்றும் வன விலங்குகளை உள்ளடக்கி அழகாகப் படைக்கப்பட்டிருத்தல்.
- குகைவிதானம், பூங்கொடி வேலைப்பாடுகள் மற்றும் யானை உருவங்கள், மனித உருவங்கள், பறவை உருவங்களின் சேர்மானத்திலான படைப்பாக்கக் கோல அலங்கரிப்புக்கள் மூலம் அழகுபடுத்தப்பட்டுள்ளது.
- கரும்மண் நிறத்தினால் கோட்டுப் படமாக வரைந்து பின்னர் நிறந்தீட்டப்பட்டிருத்தல்.
- ஓவியங்களுக்கு நிறந் தீட்டுவதற்காக சிவப்பு, மஞ்சள், நீலம், கறுப்பு, பச்சை போன்ற நிறங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தல்.
- கருப்பொருளை முனைப்புறுத்திக் காட்டுவதற்காக இருண்ட நிறங்களும் பிரகாசமான நிறங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.


## பத்மபாணி போதிசத்துவர் உருவம்





- அஜந்தா ஓவியங்களுள் 1 ஆம் இலக்கக் குகையில் காணப்படும் பத்மபாணி போதி சத்துவர் உருவமே மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படுகின்றது.
- இங்கு சித்தார்த்த குமாரனுடன் இடது புறத்தே யசோதரா தேவியும் காட்டப்பட்டுள்ளன என்பது ஆய்வாளரின் கருத்தாகும். உருவில் உள்ள ஏனையோர் வானில் வீணை இசைக்கும் தெய்வங்களாகும் எனத் தெரிகின்றது. மரங்களின் மேலே சில குரங்குகளும் காட்டப்பட்டுள்ளன.
- மனித உருவத்தை விட பெரியதாகக் காட்டப்பட்டுள்ள போதிசத்துவர் உரு மூவளைவு (திரிவங்க) வடிவத்தைக் கொண்டது.
- புன்னகை புரியும் முகம், ஆழ்ந்த உணர்வு வெளிப்பாடு, ஆன்மீகப் பண்புகள், இளமை போன்ற இயல்புகள் இப்படைப்பினால் காட்டப்படுகின்றது.
- இங்கு போதிசத்துவர் வலது கையில் நீலோற்பல மலரொன்று தாங்கியுள்ளதோடு, அழகிய ஆடையணிகள் அணிந்துள்ளதாகக் காட்டப்பட்டுள்ளது.
- கழுத்தணி, கைவளையல்கள், நுணுக்கமான செதுக்கல் வேலைப்பாடுகளால் அலங்கரிக் கப்பட்டுள்ள நீளப்பாடான கிரீடம் (தலையணி) போன்ற அணிகலன்கள் சிறப்பானவை.
- பிரதான உருவமாகிய பத்மபாணி உருவம் பிரகாசமான மஞ்சள் நிறத்தினால் வெளிப் படுத்திக் காட்டப்பட்டுள்ளதோடு, ஏனைய பாத்திரங்கள், வடிவங்களும், இருண்ட நிறப் பின்னணியில் வெளிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.
- குப்தர் கலைத்துவப் பண்புகளைக் கொண்டது.

**புத்தர் பெருமான் கிம்புள்வத்புரத்துக்கு வருகை தரல்**



- கிம்புள்வத்புரத்தில் புத்தர் பெருமான் உணவு இரந்து செல்வதைக் காட்டும் ஓவியம் 17 ஆம் அஜந்தா குகையில் உள்ளது.
- தாமரை மலரின் மீது இருக்கும் புத்தர் பெருமானின் தலைக்கு மேல் ஆலவட்டம் தாங்கியிருக்கும் தெய்வமொன்று காட்டப்பட்டுள்ளது.
- மாளிகையில் இருந்தவாறு யசோதராதேவி, ராகுல குமாரனுக்கு, அவனது தந்தையை அறிமுகம் செய்யும் விதம் இங்கு காட்டப்பட்டுள்ளது.
- புத்தர் பெருமானின் உருவம் பெரியதாகவும், ஏனைய உருவங்கள் சிறியவையாகவும் காட்டப்பட்டிருத்தலானது, புத்தர் பெருமானின் மேன்மையைக் காட்டுவதற்கான ஒரு முயற்சியாகும்.
- தூரநோக்கு தொடர்பான விசேட கவனஞ் செலுத்தி, இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது எனக் கருதப்படுகிறது.
- குப்தர் கலைப் பண்புகளைக் கொண்டது.

**2015 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிரிய வழிகாட்டிப் பிழைதிருத்தம்**
**(தரம் 10 ஆசிரிய வழிகாட்டியின் 61 ஆம் பக்கத்தில் இணைத்துக் கொள்க.)**

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 20-21 | | | 5.2.1 செயற்பாட்டுத் தலைப்பிற்கு ஏற்ப செயற்பாட்டைத் திட்டமிட்டக் கொள்க. |
| | | காணலாம். | காணப்பட்ட |
| 50-51 | 14 | லண்டன் | லூவர் |
| 56 | 8 | பிரஸ்கோ சிகோ | ரெம்பரா |
| 57 | 15 | பிரஸ்கோ சிகோ<br>பிரஸ்கோ சிகோ<br>பிரஸ்கோ சிகோ | பிரஸ்கோ புவனோ<br>பிரஸ்கோ புவனோ<br>பிரஸ்கோ புவனோ |
| 61 | | | இந்த பக்க 61 இலக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. தரம் 10 புத்தகத்தில் இணைத்துக் கொள்க. |
| 74 | 19 | தாமரை | பிரைமலர் |
| 75 | 1 | தாமரை | பிரைமலர் |
| 80 | 23 | கலைஞர் | நீக்குக. |
| 88 | 21 | ஜாதகக் கதை | நீக்குக. |
| 101 | 9 | மர ஊடகம் | நீக்குக. |
| 107 | 5 | காலத்துக்குரிய | நீக்குக. “கெலனிஸ்திக் (Helanistic) காலத்திற்கு உரியதெனக் கொள்ளப் படும்.” உள்ளடக்கிக் கொள்க. |
| 107 | 16 | அண்டிசோப் | அலெக்சான்டொஸ் (Alexandros) |

பின்வரும் அட்டவணைக்கேற்ப செயற்பாடுகளை மூன்று தவணைகளாகப் பிரிக்கவும்.

| 1 தவணை | | | 2 தவணை | | | | 3 தவணை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் | | | செயற்பாட்டு இலக்கம் | | | | செயற்பாட்டு இலக்கம் | | |
| 1.1.1 | 3.1.1 | 7.1.1 | 1.13 | 3.1.2 | 6.2.1 | 7.2.3 | 1.1.5 | 3.2.2 | 7.2.4 |
| 1.1.2 | 4.1.1 | 7.1.2 | 1.1.4 | 3.1.3 | 6.2.2 | 7.4.1 | 1.2.2 | 3.3.1 | 7.3.1 |
| 2.1.1 | 5.1.1 | | 1.2.1 | 4.1.2 | 6.2.3 | | 2.2.4 | 4.2.1 | 7.4.2 |
| 2.1.2 | 6.1.1 | | 2.2.1 | 4.1.3 | 7.1.3 | | 2.2.5 | 6.1.4 | |
| | 6.1.2 | | 2.2.2 | 5.2.1 | 7.2.1 | | 2.2.6 | 6.1.5 | |
| | | | 2.2.3 | 6.1.3 | 7.2.2 | | 3.2.1 | 6.1.6 | |

## மடோனா ஓவியங்கள்

- ரபாயலினது படைப்புக்களுள் முக்கியமான கருப்பொருளாகக் காணப்படுவது மடோனா அதாவது கன்னி மரியாளையும் இயேசு பாலகனையும் சித்தரிக்கும் படைப்புக்களாகும்.
- மறுமலர்ச்சிக்கால ஏனைய கலைஞர்களின் மடோனா ஓவியப்படைப்புக்களைவிட றபாயலினால் சித்தரிக்கப்பட்ட மடோனா ஓவியங்கள் சிறப்பான படைப்புகளாகக் கருதப்படுகின்றன.
- இந்த ஓவியங்கள் எண்ணெய் வர்ண ஊடகத்தைக் கொண்டு கன்வஸ் துணியில் வரையப்பட்டுள்ளன.
- முக்கோண மாதிரியொன்றின் மீது, உணர்வு வெளிபாட்டுடன் உருவங்கள் சித்தரிக் கப்பட்டுள்ளமை இந்த ஓவியங்களின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும்.

### **புல்வெளியில் மடோனா (**Madonna of the Meadows)



- தூரக்காட்சி இயல்புகளுடனான தரைத்தோற்றக் காட்சியில் தாவரங்கள், மலர் களைக் கொண்ட கிராமியப் பின்னணியில் சாதாரணமான ஒரு பெண் போன்று சித்தரிக்கப்பட்டிருப்பது இந்த ஓவியத்தின் சிறப்பாகும்.
- அன்னை மரியாளைப் பூரித்த உடலுடனும், மென்மையும் இரக்கமும் ததும்பும் முகத்துடனும் உணர்வுகளைக் காட்டும் வகையிலும் சித்தரிக்க கலைஞர் முயற்சித்துள்ளார்.
- மரப்பலகை மீது எண்ணெய் வர்ணத்தினால் தீட்டப்பட்டுள்ள ஓர் ஓவியமாகும்.
- இந்த ஓவியம் தற்போது வியன்னா நகரில் கலை அரும்பொருட்காட்சியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.